கிராம நலம்

(மாதப் பத்திரிகை)

சென்னை அரசாங்க, சமுதாய அபிவிருத்தி
இலாகா வெளியீடு

மாடி—1 | ஜனவரி, 1956 | படி—4

அனுதாபப் பொங்கல்

" பொங்கல் திருநாள், தமிழ் நாட்டின் மகிழ்ச்சித் திருவிழா. உழவர்கள் தம் உழைப்பின் பயனை பலரோடு பகுத்துண்டு வாழும் தலை சிறந்த கொண்டாட்டம்.

இவ்வாண்டில், மழை வளம் சிறந்து, தமிழ் நாடெங்கும் ஏரி குளங்கள் நிறைந்தன. புஞ்சை விளைந்து, பஞ்சம் நீங்கும் நிலை ஏற் பட்டது. ஆனல், திடீரென்று நேர்ந்த புயல், பெருவெள்ளம் காரணமாக மக்களுக்கு ஏற்பட் டுள்ள கஷ்ட நஷ்டங்கள், கேட்போர் கல் நெஞ்சையும் உருக்கும்.

ஆகவே, மகிழ்ச்சி பொங்க வேண் டிய பொங்கல் விழாவின் போது, நம் நாடு முழுவதிலும் இப்போது அனுதாபந்தான் அதிகம் பொங்கு கிறது. இந்த அனுதாபம், வெறும் உணர்ச்சி அளவில் நின்று விடக் கூடாது ; கடமையாற்றும் தூண்டு கோலாக அமையவேண்டும். புயல் நிவாரணத்திற்கு ஒவ்வொருவரும் தம்மாலான உதவியைச் செய்ய விரைவில் முன் வருவார்களாக.

ஆரவாரமற்ற அற்புத புரட்சி

ஸ்ரீ என். இ. எஸ். ராகவாச்சாரி, ஐ.ஸி.எஸ்., சமுதாய
அபிவிருத்தி டைரக்டர், சென்னை.

[சென்னை ராஜ்யத்தில் உள்ள சமுதாய அபிவிருத்தித் திட்டம் நிறைவேறிவரும் வட்டாரங்களில், ஆர்ப்பாட்டமற்றவகையில் அற்புத புரட்சி எவ்வாறு நிகழ்ந்துவருகிறது ? கிராம மக்கள், அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் பெற்றுவரும் பலன்கள் யாவை ? வெளிநாடுகளிலிருந்து நம் நாட்டுக்கு விஜயம் செய்யும் ஆராய்ச்சியாளரின் மனதைக் கவரக்கூடியவகையில், நாம் எந்தெந்த சாதனைகளைப் புரிந்துள்ளோம் ? கடந்த ஒரு வருடத்தில் கிராம ஜனங்கள் பெற்றுள்ள புதிய அனுபவம் என்ன ? இவற்றிற்கான விளக்கத்தை, இக்கட்டுரையில் காணலாம்.

—ஆசிரியர்]

கடந்த சில ஆண்டுகளுக்கு முனபுவரை, வெளிநாடுகளிலிருந்து இந்தியாவுக்கு விஜயம் செய்தவர்கள், நமது புராதனப் பண்பாடுபற்றி, ஏதேனும் சிறிதளவு அறிந்து கொள்வதில் அக்கறைகாட்டிவந்தார்கள். அவர்கள், பிரசித்திபெற்ற நம் நாட்டுக் கோயில்கள் சிலவற்றிற்குச் செல்வார்கள். அஜந்தாவில் வண்ண ஓவியங்களைக்கண்டு களிப்பார்கள். ஆக்ராவிற்குச் சென்று சரித்திரப் புகழ் வாய்ந்த ' தாஜ் மஹாலை 'ப் பார்ப்பார்கள். இவ்வாறு, அவர்கள் சில இடங்களுக்கு விஜயம் செய்துவிட்டு, " ஆஹா ! இந்தியாவின் பண்டைய கால மாட்சி எவ்வளவு மகோன்னதமானது ! " என்று அதிசயிப்பார்கள். ஆனால் தற்காலத்தில் இந்தியா எப்படி இருக்கிறது என்பது பற்றியோ, அல்லது நமது கஷ்ட நிலைமைபற்றி பச்சாதாபப்படுவதாகவோ, ஒன்றும் கூறமாட்டார்கள். தவிர, அப்போதெல்லாம், இந்தியாவிலிருந்து இந்திய மாணவர்களும், அறிஞர்களும், மற்ற நாடுகளில் ஏற்பட்டிருந்த அபிவிருத்திகளைப்பற்றி அறிந்துகொள்ள, அந்நாடுகளுக்குச் சென்றார்கள். ஆனால், அயல் நாட்டு மாணவர்களோ, நம் நாட்டில் ஏற்பட்டிருந்த நவீன அபிவிருத்திகளைப்பற்றி ஆராய வருவது அரிதென்றே கூறலாம்.

வெளிநாட்டார் மனநிலையில் மாறுதல்

ஆனால், கடந்த சில ஆண்டுகளுக்குள், இந்நிலைமையில் குறிப்பிடத்தக்க மாறுதல் உண்டாயிற்று. இப்போதெல்லாம், இந்தியாவுக்கு விஜயம் செய்யும் அயல் நாட்டினர், நமது புராதன மாண்பைப் பிரதிபலிக்கும் கோயில்களையும், வண்ண ஓவியங்களையும், அற்புத சிற்பங்களையும் மட்டும் கண்டு திருப்தி கொள்வதில்லை. நாம் இப்போது எந்தெந்த ஆக்க வேலைகளைப் புரிந்து வருகிறோம், ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், நாம் எந்தெந்த சாதனைகளைப் புரிந்துள்ளோம் என்ற விவரங்களை அறிவதிலும் ஆர்வம் காட்டுகிறார்கள். நம் நாடெங்கும் ஆரவாரமில்லாமல் நடந்துவரும் அற்புத மாறுதலை நேரில் கண்டு ரசிப்பதில், அவர்கள் மிகவும் ஊக்கம் கொண்டுள்ளார்கள். சென்ற ஆண்டில், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் தனது தொழில் நுட்ப உதவித் திட்டத்தின் கீழ், ஆசிய நாடுகள் பலவற்றைச் சேர்ந்த அதிகாரிகள் அடங்கிய கோஷ்டி ஒன்றை, இந்நாட்டில் நிறைவேறிவரும் சமுதாய அபிவிருத்தித் திட்ட வேலைகளைப்பற்றி ஆராய்ந்தறிய அனுப்பியது. சமுதாய அபிவிருத்தித் திட்டத்தைத் தங்கள் நாட்டில் எவ்விதம் நிறைவேற்றுவது என்பது பற்றித் தெரிந்துகொள்ளும் நோக்கத்துடன், இந்தோனேஷிய அதிகாரிகள் அடங்கிய கோஷ்டி ஒன்று, நம் நாட்டு சமுதாய அபிவிருத்தித் திட்ட வேலைகளைப்பற்றி ஆராய்ந்தறிய, இப்போது நம் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறது. ஆப்கானிஸ்தானில் உயர்ந்த பதவிகள் வகிக்கும் அதிகாரிகள் அடங்கிய கோஷ்டி ஒன்றும், நம் தேசத்தில் நடைபெறும் திட்ட வேலைகளைப்பற்றித் தெரிந்து கொள்ள, இந்தியாவில், இப்போது சுற்றுப் பிரயாணம் செய்துவருகிறது.

கூட்டுறவு உழைப்பால் சமுதாய அபிவிருத்தி

சமுதாய அபிவிருத்தித் திட்டம் என்றால் என்ன ? இம்மாதிரி வெளிநாடுகளிலிருந்து நம்நாட்டுக்கு விஜயம் செய்வோர்கள் மனதைக் கவரக்கூடிய வகையில், நாம் என்ன சாதித்துள்ளோம் ? முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்கியவர்கள் மிகவும் துணிவுடன் சிருஷ்டித்தவைகளில், சமுதாய அபிவிருத்தித் திட்டமும் ஒன்றாகும். அது, கிராமங்களுக்குப் புத்துயிர் அளிப்பதையே இலட்சியமாகக் கொண்டது. மக்களின் சுய உதவியே அதன் அடிப்படை. தொழில் நுட்ப உதவி, பொருள் சகாயம் முதலியவற்றை அரசாங்கம் ஓரளவு தந்துதவும். கிராமங்கள் முன்னேற்ற மடைவதற்காகவே, இத்திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. முன்பெல்லாம், தங்களுக்கு வேண்டிய சௌகரியங்களையும் வசதிகளையும் செய்து கொடுக்க, அரசினரையே மக்கள் பெரிதும் நம்பி வாழ்ந்து வந்தார்கள். தாங்களே உழைத்து சமுதாய உணர்ச்சியுடன் ஒன்று சேர்ந்து ஆக்க வேலைகளைப் புரியவேண்டுமென்பது,

இப்போது மக்கள் மனதிலே பதிந்து விட்டிருக்கிறது. உற்பத்திப் பெருக்கமில்லாவிட்டால் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயராதென்பதையும், உற்பத்தியைப் பெருக்குவதற்கு அவர்கள் உழைத்தாக வேண்டுமென்பதையும் அவர்கள் இப்போது நன்குணர்ந்துள்ளார்கள். இவ்வாறு அவர்கள் உணர்ந்து அதன்படி நடக்கச் செய்ததற்குத் தூண்டு கோலாக அமைந்திருப்பது சமுதாய அபிவிருத்தித் திட்டமேயாகும்.

ஆகையினால், சமுதாய அபிவிருத்தித் திட்டம், என்பது மக்களின் திட்டம் என்பது உறுதி. ஏனெனில், இது மக்களாலேயே உருவாக்கப்பட்டு மக்களாலேயே நிறைவேற்றப்பட்டுவரும் உன்னதத் திட்டமாக விளங்குகிறது. இத்திட்டம் வெற்றிகரமாக நிறைவேறுவதற்கு ஒவ்வொரு கிராமத்திலும் மக்கள் ஸ்தாபனங்களை அமைக்க வேண்டியிருக்கிறது. கிராம ஜனத்தொகையின் பல்வேறு பிரிவுகளும் பூரணமாகப் பிரதிநிதித்துவம் வகிக்கும் பஞ்சாயத்து போர்டுகள் எங்கெங்கு அமைக்கப்பட்டிருக்கின்றவோ, அங்கெல்லாம், அந்த போர்டுகளிடமே கிராம நலத் திட்டத்தை உருவாக்கி நிறைவேற்றும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மற்ற கிராமங்களில், அபிவிருத்தித் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக **அபிவிருத்தி பஞ்சாயத்துக்கள்** அல்லது **கிராம சேவா சங்கங்கள்** அமைக்கப்பட்டிருக்கின்றன. கிராமத் தலைமைப் பொறுப்பை விளக்கவும், வற்புறுத்தவும், விசேஷ கிராமத் தலைவர் பயிற்சி முகாம்கள் நடைபெறுகின்றன. இம்மாதிரியான முகாம்கள், கடந்த பன்னிரண்டு மாத காலத்துக்குள், அபிவிருத்தித் திட்டம் அமலில் உள்ள ஒவ்வொரு வட்டாரத்திலும் நடைபெற்றிருக்கின்றன.

இவை தவிர, பலவித அபிவிருத்தி வேலைகளையும் ஒழுங்கு சேர்த்துக் கூட்டாக ஒரு திட்டத்தை வகுப்பதற்கு உதவிபுரிய, உத்தியோக சார்பற்ற சில அங்கத்தினர்களும், உத்தியோகஸ்தர்களும் அடங்கிய ஆலோசனைக் கமிட்டிகள் எல்லா வட்டாரங்களிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. திட்டத்தை நன்கு நிறைவேற்ற உதவி புரிவதற்கு, உத்தியோகச் சார்பற்ற அங்கத்தினர்கள், திட்டத்தின் இலட்சியங்களை நன்குணர வேண்டியது அவசியம். இதற்காக, கடந்த 12 மாதங்களில், வட்டார ஆலோசனைக் கமிட்டிகளில் அங்கம் வகிக்கும் உத்தியோகச் சார்பற்ற பிரமுகர்களுக்கு, பிரத்தியேகமாக, ஆராய்ச்சிக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

நமது குறிக்கோள்களை அடைவதில், நாம் எந்த அளவில் வெற்றி பெற்றிருக்கிறோம் என்பதை ஓரளவு ஆராய்வோம். முதலாவதாக, விவசாய உற்பத்தி, கணிச அளவில் பெருகியிருக்கிறது. ரசாயன உரங்களால் கிட்டும் பலன்களை மக்கள் நன்குணர்ந்திருப்பதால், இப்போது மிக அதிக அளவில் இவை மக்களுக்குத் தேவைப்படுகின்றன. அதாவது, இந்த உரங்களுக்கு, சென்னை ராஜ்யத்திலுள்ள தேசிய வளர்ச்சித் திட்ட வட்டாரங்களிலும், சமுதாய நலத்திட்ட வட்டாரங்களிலும் அதிக கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. மற்ற ராஜ்யங்களிலுள்ள வட்டாரங்களில் விநியோகிப்பட்டிருப்பதைக் காட்டிலும், சென்னை ராஜ்யத்திலுள்ள அபிவிருத்தி திட்ட வட்டாரங்களில் தான், அதிக அளவில் இந்த உரங்கள் விநியோகிக்கப் பட்டிருக்கின்றன. இது அதிகார பூர்வமான அறிக்கை வெளியிடும் தகவல். சென்னை ராஜ்யம் தான் இந்த உர விநியோகத்தில், இந்தியாவிலேயே முதன்மை ஸ்தானம் வகிக்கிறது என்பது மகிழ்ச்சிதரும் செய்தியே. அது மட்டுமல்ல. ரசாயன உர உபயோகம் பெருகியது போல், பசுந்தாளுர உபயோகமும் பெருகியிருக்கிறது. முக்கியமாக, சில ஆண்டுகளுக்கு முன்பு வரை, பசுந்தாளுரங்கள் உபயோகிக்கப்படாமலிருந்த பிரதேசங்களில்கூட, இப்போது, பசுந்தாளுரம் உபயோகிக்கப் படுகிறது. தரம் மிகுந்த பொறுக்கு விதைகள் உபயோகமும் பெருகியிருக்கிறது. இவை, இப்போது, அதிக அளவில் தேவைப்படுகின்றன. கிராம விதை பண்ணை முறை ராஜ்ய மெங்கும் நாளடைவில் விஸ்தரிக்கப்படும் போது, அடுத்து வரும் சில ஆண்டுகளுக்குள்ளாகவே, நம் ராஜ்யத்திலுள்ள எல்லா வயல்களிலும், பொறுக்கு விதைகளே விதைக்கப் படுமென்பது திண்ணம்.

காய்கறித் தோட்டங்களும், பழத் தோட்டங்களும் பெருகியுள்ளன. இவற்றின் சாகுபடிப் பரப்பு, கணிச அளவில் அதிகரித்துள்ளது. மக்கள் உண்ணும் உணவின் போஷாக்குத் தரத்தை உயர்த்துவதற்காகவும், மக்களுக்கு உபவருமானம் கிடைக்கச் செய்வதற்காகவும், உயர்ந்த தரச் சேவல்களும், சீமைக் கோழிகளும் விநியோகிக்கப்படுகின்றன. இப்போது, மக்கள் அக் கோழிகளை அதிக அளவில் கேட்டு வாங்கி வளர்த்து வருகிறார்கள். கிணறுகளைத் தோண்டுவதற்காகவும், பம்பு செட்டுகளை நிர்மாணிப்பதற்காகவும் அளிக்கப்படும் கடன் உதவி காரணமாக, இப்போது அநேக நிலப் பகுதிகளுக்குப் பாசன வசதி கிட்டி யிருக்கிறது.

கிராமங்களில், பொதுநல வசதிகளுக்காக செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளிலும் கணிசமான முன்னேற்றம் காணப்படுகிறது. கிராம மக்களே அநேக மைல்கள் நீளமுள்ள ரஸ்தாக்களை அமைத்திருக்கிறார்கள். திட்ட நிதியின் மூலம் இந்த ரஸ்தாக்களுக்குத் தேவைப்படும் மதகுப் பாலங்களும் அமைக்கப்படுகின்றன. அநேக கிணறுகள் புதிதாக தோண்டப்பட்டிருப்பதுடன் பழைய கிணறுகள் செப்பனிடப்பட்டுப் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. மக்கள் மனமகிழ் மன்றங்கள் பல ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

இம் மாதிரியான பொதுநல வசதிகளைப்பற்றி விவரிக்கும் போது, மக்களிடையே ஏற்பட்டுள்ள மன எழுச்சியைப் பற்றியும் இங்கு குறிப்பிடவேண்டியது அவசியமாகும். முன்பெல்லாம், இம்மாதிரி வசதிகளைப் பெற, அரசினரின் தயவையே அவர்கள் எதிர்ப்பார்த்திருந்தார்கள். இவ் வசதிகளைப்பெற, கணக்கற்ற மனுக்களைத் தயாரிப்பதும்,

G.N.—1A

அநேக அதிகாரிகளுக்கு அவ்வப்போது அனுப்புவதுமே கிராம ஜனங்களின் வழக்கம். நிதி நிலைமையின் காரண மாகவோ, அல்லது, சர்க்கார் நிர்வாக இயந்திரம் மெது வாக நகருவதன் காரணமாகவோ, இம்மாதிரி அனுப்பப் பட்ட மனுக்களால், எதிர்பார்த்த பலன்கள், கிடைக்க வில்லை.

ஆனால், இப்போதோ, ரொக்கம், உழைப்பு, சாமான்கள் ஆகியவற்றைத் தங்கள் பங்காகக் கொடுத்து, செலவில் ஒரு பகுதியைச் சரிக்கட்ட, மக்களே முன் வருகிறார்கள். அதே சமயத்தில், வேலைகள் துரிதமாக நிறைவேறுவதற்கு அபிவிருத்தி வட்டாரங்களில் நடைபெற்றுவரும் நிர்வாக ஸ்தாபனம் உதவி புரியத் தயாராக இருப்பதை, மக்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். எனவே, ஒரு கிராமத்தில், அபிவிருத்தி வேலைகள் நிறைவேற்றப்பட்டதும், அக்கம் பக்கத்து கிராமங்களிலுள்ள மக்கள், தங்களுடைய கிராமங்களில் அபிவிருத்தி வேலைகளைப் புரிவதற்காக, தங்கள் பங்கை அளிக்க உடனடியாக முன்வருகிறார்கள். சில வட்டாரங்களில் மக்கள் தாங்களாக முன் வந்து, தங்கள் பங்கைக் கொடுத்து, பல வேலைகளை நிறைவேற்றத் தயாராக இருக்கிறார்கள். அரசாங்கம் இதற்கென ஒதுக்கியுள்ள பணம் போதுமானதாக இல்லை. மொத்தத்தில், நம் ராஜ்யமுழுதுக்கும், கிராமநலத் திட்ட வேலைகளுக்காக, மக்கள், இதுவரை, தங்கள் பங்காக அளித்தது 55 லட்ச ரூபாய்க்கும் மேற்பட்டிருக்கிறது.

கிராமத் தொழில்வளம்

கிராமத் தொழில்கள் வளம் பெறுவதற்காக வகுக்கப் பட்டிருக்கும் திட்டங்களைப் பற்றியும் கூறவேண்டியது அவசியமாகும். தற்போது, கையினால் நூல் நூற்பதுதான், மிக முக்கிய கிராமத் தொழிலாக இருக்கிறது. இத் தொழிலுக்கு மிகச் சொற்ப அளவில்தான் முதலீடு தேவைப்படுகிறது. மிகக் குறுகிய காலத்துக்குள்ளாகவே, இத் தொழிலில் பயிற்சி பெற்றுவிடமுடியும். முழு நேர வேலையாக, இத் தொழிலை மேற்கொள்ளவேண்டும் என்ப தில்லை. இத் தொழில் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருள், அதாவது, துணி, கிராமத்திலேயே உபயோகிக் கப்படக்கூடியது. எனவே, கிராமாந்தரங்களில் எப்போதும் நிலைத்து வாழ்வளிக்கும் தொழிலாக இது விளங்கும்.

மாதர்களுக்கு நூல் நூற்பதைக் கற்றுத்தர, சமுதாய நலத் திட்ட வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும், மாதர் நூற்புத் தொழில் அமைப்பாளர்கள் சேவை புரிந்து வருகிறார்கள். அரசினரின் கதர் இலாகா, பஞ்சை விநியோகிப்பதற்கும், பஞ்சின் மூலம் நூற்கப்பட்ட நூலை நெய்வதற்காகத் திருப்பிப் பெறுவதற்கும், ஏற்பாடு செய் திருக்கிறது. ஒவ்வொரு வட்டாரத்திலும் இயங்க வேண் டிய சர்க்காக்களின் இலட்சிய எண்ணிக்கை ஆயிரமாகும். இவை, சகாய விலையில், மக்களுக்கு விநியோகிக்கப்படும். திட்டம் எங்கெங்கு அமலாயிருக்கிறதோ, அங்கெல்லாம், மக்கள், சர்க்காக்களை அதிக எண்ணிக்கையில் கேட்டு வாங்குகிறார்கள். இந்தத் தொழில் திட்டம் தவிர எண்ணெய் ஆட்டும் தொழிலுக்கும் புத்துயிரளிக்கப் படுகிறது. சீர்திருந்திய வகையில் அமைக்கப்பட்டிருக்கும் நாட்டுச் செக்குகளின் சிறப்பை, பல கிராம மக்கள் அறிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நிதரிசனமாக அவற்றை இயக்கிக் காட்டுவதற்காக, அநேக பயிற்சி ஸ்தாபனங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஸ்தாபனங்களுக்குப் பல கிராமங்களிலிருந்தும் அநேகர் வந்து, பயிற்சி பெறு கிறார்கள்.

சமுதாய அபிவிருத்தியில், மாதருக்கு முக்கிய பங்கு உண்டு. ஆகவே, அநேக கிராமங்களில், மாதர் சங்கங்கள் அல்லது 'மஹிளா சமாஜங்கள்' ஆரம்பிக்கப்பட்டிருக் கின்றன. கிராமத்திலுள்ள மாதர்கள், இந்த ஸ்தாபனங் களில், அவ்வப்போது தங்களுடைய பிரச்னைகளைப்பற்றி விவாதிக்கிறார்கள். அத்துடன், அங்கு, தையல்வேலை, பின்னல் வேலை மற்றும் இதர பயன்தரத்தக்க வேலைகளை யும் அவர்கள் கற்றுக்கொள்கிறார்கள். பயிற்சிபெற்ற கிராம சேவிகைகளின் உதவியுடன், மாதர் சமூகக் கல்வி அமைப்பாளர்கள், இம்மாதிரியான சங்கங்களை, கிராமங் களில் அமைப்பதற்கு, உதவிபுரிகிறார்கள்.

நண்பரின் கேள்வி

அன்றொரு நாள், என் நண்பரொருவர், "இப்போ தெல்லாம், சமுதாய அபிவிருத்தி பற்றி ஒரே பேச்சாக இருக்கிறதே. வெறும் பேச்சு தானா அல்லது ஏதாவது உருப்படியா நடந்திருக்கா" என்று என்னைக் கேட்டார். சில வட்டாரங்களுக்கு அவரே விஜயம் செய்து, அங்கு நடந்துள்ள வேலைகளைப்பற்றியும், நடந்து வரும் வேலை களைப் பற்றியும் நேரில் கண்டறிந்து தமது சந்தேகத்தை நிவர்த்தித்துக் கொள்ளலாமென்று நான் பதில் கூறினேன். அவர் நேரில் போய் பார்த்தாரானால், மக்கள் போக்கில் படிப்படியாக நல்லதொரு மாறுதல் ஏற்பட்டிருப் பதை அறிந்து கொள்வார். அவர் மட்டுமல்ல, யாரும்இதைச் செய்து பார்க்கலாம். ஆனால், நாங்களோ திட்டத்தில் மிகுந்த ஆர்வங் கொண்டுள்ளவர்கள். ஆகையால், நாங் கள் இத்துடன் திருப்தி கொள்ள முடியவில்லை. மக்கள் போக்கில் மேலும் துரிதமாக மாறுதல் ஏற்படவேண்டு மென்று விரும்புகிறோம். எனினும், பல்லாண்டுகளாக, புறக்கணிக்கப்பட்டு வந்ததன் காரணமாக, தங்கள் நிலை மையைப் பற்றியே அசட்டையாக இருந்துவரும் மக்கள் போக்கில், துரிதமாக மாறுதலை உண்டாக்குவதென்பது சுலபமான காரியமல்ல. சிறப்பாக, சில கிராமங்களில் உள்ள மக்கள், மிகுந்த முன்னேற்றம் அடைந்துள்ளனர். மற்ற கிராமங்களில் உள்ள மக்கள் படிப்படியாக இவ்வுண்மைகளை அறிந்து வளர்ச்சி பெற்று வருகின்றனர் என்று கூறலாம்.

வேலைகள் புரிய, கிராம மக்களிடையே, ஆக்க போட்டி உணர்ச்சியை உண்டாக்கி ஊக்குவிப்பதற்காக, ஒவ்வொரு வட்டாரத்திலுமுள்ள சிறந்த கிராமத்திற்குப் பரிசு வழங் கும் திட்டம், இந்தியாவிலேயே முதன் முதலாக நம் ராஜ்

யத்தில் தான் சமீபகாலத்தில், ஆரம்பிக்கப்பட்டது. காந்தி ஜெயந்தி தினத்தன்று, சென்னைக்கு விஜயம் செய்த பிரதமர் நேருஜியிடமிருந்து, சிறந்த கிராமங்களின் பிரதிநிதிகள், அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த கிராமம் ஒவ்வொன்றிற்கும், மக்கள் மனமகிழ் மன்றங்கள், சிறுவர் பூங்காக்கள் போன்றவற்றை அமைப்பதற்காகவும், மற்ற அபிவிருத்தி வேலைகளைப் புரிவதற்காகவும், ஆயிரம் ரூபாய் பரிசாக வழங்கப்பட்டது.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில்

சென்னை ராஜ்யத்தில், ஏற்கெனவே, இத் திட்டத்தின் மூலம், ஜனத்தொகையில் கால்வாசிப் பேர்கள் பயன் பெற்று வருகிறார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், தேசிய வளர்ச்சித் திட்டம், நமது ராஜ்யம் பூராவிலும் விஸ்தரிக்கப்பட்டு நிறைவேறிவரும். தேசிய வளர்ச்சித் திட்டம் அமலாகும் பிரதேசங்களில் 40 சதவிகிதம், தீவிர அபிவிருத்திக்காக, சமுதாய நலத்திட்டப் பிரதேசங்களாக மாறும். தீவிர அபிவிருத்தித் திட்ட கால இறுதியில், அவ்வட்டாரங்கள் அனைத்தும், மீண்டும் தேசிய வளர்ச்சித் திட்ட வட்டாரங்களாக மாறிவிடும். அதாவது, கிராமமக்களுக்குத், திட்ட ஊழியர்களின் சேவை எப்போதும் கிடைக்கச் செய்வதற்கான வசதி இருக்கும். தேசிய வளர்ச்சித்திட்ட நிர்வாகத்தின் ஆரம்ப கட்டத்தில் அலுவல் புரிந்து வந்த ஊழியர்கள் அனைவரும், நிரந்தரமாகத் தொடர்ந்து சேவை புரிவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

குறிப்பிட்டபடி, பெருமளவில் திட்டத்தை விஸ்தரிக்க, பயிற்சி பெற்ற ஊழியர்கள் அநேகர் தேவை. அதை முன்னிட்டு, கிராம அபிவிருத்தித்திட்ட நிர்வாகத்துக்கு, அச்சாணிபோல் விளங்கும் கிராம சேவக்குகளுக்குப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வருடாவருடம், சுமார் 600 கிராம சேவக்குகளுக்கு, விவசாயம், கால்நடை அபிவிருத்தி, பொது சுகாதாரம், மற்றும் கிராம நலம் சம்பந்தமான இதர அம்சங்கள், ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படும். அதேபோல், தொழில்துறை ஊழியர்கள், அதிகாரிகள் ஆகியவர்கள் சம்பந்தமாக அதிகரித்துவரும் தேவைகளைச் சமாளிக்க, அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் ஸ்தாபனங்களின் வசதிகளும் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறாக ஏற்பாடுகள் பல நடந்து வருவதன் பலனாக, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டகால இறுதியில், நமது ராஜ்யத்திலுள்ள கிராமங்கள் அனைத்துக்கும், சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் பலன் கிட்டிவிடும். அப்போது, தமது வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு ஒவ்வொரு கிராமவாசிக்கும் சிறந்த சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கும். கிராமவாசி, அப்போது, தலை நிமிர்ந்து, "சுதந்தர இந்தியாவின் பிரஜை" என்று பெருமிதத்துடன் கூறிக்கொள்ள முடியும்.

—❖—

உங்களுக்குத் தெரியுமா ?

சென்னை ராஜ்யத்தின் மொத்த விஸ்தீர்ணம்—
60,362 சதுர மைல்.

சென்னை ராஜ்யத்தின் மொத்த ஜனத்தொகை
—35,734,489.

சென்னை ராஜ்ய கிராம மக்கள் ஜனத்தொகை
—29,000,000.

சென்னை ராஜ்யத்தில் சமுதாய நலத் திட்டங்கள், தேசிய வளர்ச்சித் திட்டம் முதலியவை மூலம் பயன் பெறும் கிராம மக்கள் ஜனத்தொகை
—8,292,539.

1955-ம் ஆண்டு ஜூன் மீ இறுதி வரை

சமுதாய அபிவிருத்தி, சமுதாய நலத் திட்ட வட்டாரங்களில் **விநியோகிக்கப்பட்ட உரம்—1,016,561.** லட்சம் மணங்கு.

தேசிய வளர்ச்சித் திட்ட வட்டாரங்களில் **விநியோகிக்கப்பட்ட உரம்** .. .. 414,911 லட்சம் மணங்கு.

சமுதாய அபிவிருத்தி, சமுதாய நலத் திட்ட வட்டாரங்களில் விநியோகிக்கப்பட்ட **பொறுக்கு விதைகள்** .. .. 41,188,000 மணங்கு.

தேசிய வளர்ச்சித் திட்ட வட்டாரங்களில் விநியோகிக்கப்பட்ட **பொறுக்கு விதைகள்** .. 67,247,000 மணங்கு.

சமுதாய அபிவிருத்தி, சமுதாய நல, தேசிய வளர்ச்சித் திட்ட வட்டாரங்களில் பழத்தோட்ட சாகுபடி விஸ்தீர்ணம் ஏக்கர். 6,350,000.

காய் கறித்தோட்ட சாகுபடி **விஸ்தீர்ணம்** 13,818,000 ஏக்கர்.

விநியோகிக்கப்பட்ட காளைகள்—415,000.

விநியோகிக்கப்பட்ட கோழி இன வகைகள்
—4,480,000.

ஆரம்பிக்கப்பட்ட புதிய பள்ளிகள்—610.

ஆரம்பிக்கப்பட்ட புதிய முதியோர் கல்வி நிலையங்கள்—3,966.

அமைக்கப்பட்ட ரஸ்தாக்களின் மொத்த நீளம்—1,725,000 மைல்கள்.

கட்டப்பட்ட கிணறுகள்—1,086.

புதுப்பிக்கப்பட்ட கிணறுகள்—1,576.

அமைக்கப்பட்ட மக்கள் மனமகிழ் மன்றங்கள்—1,524.

உழைத்தால் ஊருக்கு நலம்

(ஸ்ரீ ரெ. ராமச்சந்திரன், ஆரம்பப்பள்ளி ஆசிரியர், குளவாய்பட்டி)

[பிரேம பாசத்தால்—இசை]

(1)

சமுதாய நலமே சார்ந்திட வகுத்த
திட்டமே இதுவன்றோ—அபிவிருத்தி
திட்டமே இதுவன்றோ.

(2)

ஒற்றுமை பூண்டு உழைத்திட வாரீர்
உண்டிதனால் நலமே ஊரினுக்கு........
இன்றே கூடி இனியே விரைவீர்
இல்லை இனி இதுபோல் வேறு வாய்ப்பே. (சமுதாய)

(3)

பாதியே பங்கு பகர்வீர் செலவில்
பாடாய் பணமாய்த் தோதுபோல
கூடியே உழைத்து கொள்வீர் வெற்றி
குக்கிராம வாழ்வு மேன்மையுற. (சமுதாய)

திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில்

சாத்தங்குடி—திருவிடமருதூர் ரஸ்தாவில், சுமார் 2 மைல் நீளத்துக்கு, ரஸ்தாவைப் புதுப்பிக்கும் வேலை 1955, நவம்பரில், நடந்து பூர்த்தியாகியது. மானக்குடியில், குடிநீர் தேக்க நிலைய அமைப்பு வேலையும், பிச்சான் கோட்டகம் கிராமத்தில் இரு குழாய் கிணறுகள் அமைப்பு வேலையும், அம்மாதத்தில் பூர்த்தி செய்யப்பட்டன. 35 சேரிகள் துப்புரவு செய்யப்பட்டன. வார்தா கக்கூசுகள், குழிக் கக்கூசுகள் 10-ம், பொதுக் கக்கூசுகள் 5-ம் அமைக்கப்பட்டன. 268 கம்போஸ்ட் உரக்குழிகள் தோண்டப்பட்டன. 4·25 ஏக்கர் நிலம் பண்படுத்திச் சீர்செய்யப்பட்டது. 5·50 ஏக்கர் நிலம் பண்படுத்தப்பட்டு, அதில் சாகுபடி முதன் முதலாக நடைபெற்றது. 100 நெல் விதைப்பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டன. 150 கால்நடைகளுக்கு, நோய்களுக்காகச் சிகிச்சை செய்யப்பட்டது. 265 கால் நடைகளுக்குச் சப்பை நோய்த்தடுப்பு ஊசி போடப்பட்டது. மூன்று பனைவெல்ல உற்பத்திக் கூட்டுறவு சங்கங்களில், சாஸ்திரிய ரீதியில் வெல்லத்தை உற்பத்தி பண்ணுவதற்குரிய முறைகள் முதன் முதலாகக் கையாளப்பட்டன. 920 ரூபாய்க்குக் கதர் உண்டியல்கள் விற்பனை செய்யப்பட்டன. விளாக்குடி கிராமத்தில், 14–11–55-யன்று, குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது. மேட்டுப் பாளையம் கிராமத்தில் அருளானந்த அனாதை விடுதியை ஸ்தாபிக்கக் கட்டிடம் கட்டுவதற்காக, ஐந்து ஏக்கர் நிலத்தை, ஒருவர் நன்கொடையாக அளித்திருக்கிறார்.

அறிவிப்பு

"கிராம நலம்" பத்திரிகையின் விளம்பர விகிதம்

வெளி அட்டைப் பக்கம்	..	ரூ. 150– 0– 0
உள் அட்டைப் பக்கம்	..	ரூ. 125– 0– 0

இதர பக்கங்களில் :

பக்கம் ஒன்றுக்கு	.. ..	ரூ. 100– 0– 0
அரைப் பக்கம்	.. ..	ரூ. 60– 0– 0

சந்தா விவரம்

வருட சந்தா	.. .. ..	ரூ. 1– 8– 0
ஆறு மாத சந்தா	.. ..	ரூ. 0–12– 0

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்பலாம்.

தனிப் பிரதி—இரண்டு அணா

தனிப் பிரதிகளை அனுப்ப, தபால் பில்லைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

மற்ற விவரங்களுக்கு, பின்வரும் விலாசத்துக்கு எழுதுங்கள் :

பொதுஜனத் தொடர்பு அதிகாரி,
(சமுதாய அபிவிருத்தி),
செக்ரடேரியட்,
சென்னை-9.

Public Relations Officer,
(Community Development),
Public (R.D.P.) Dept.,
Secretariat,
Madras-9.

இப் பத்திரிகை, சென்னை அரசாங்க, சமுதாய அபிவிருத்தி இலாகாவால் நடத்தப்படுகிறது. ஆயினும், இதில் வெளியிடப்படும் அபிப்பிராயங்களும், காணப்படும் கருத்துக்களும், சென்னை அரசாங்கத்தின் அதிகாரபூர்வமான அபிப்பிராயங்களை வெளியிடுகின்றன என்பதில்லை.

இப் பத்திரிகையில் வெளியிடும் பாட்டு, கதை, நாடகம் முதலியவற்றில் வரும் பெயர்கள் யாவையும் கற்பனையே. ஒருவரையும் குறிப்பிடுவன அல்ல.

30 JUN 1958
MADRAS

அரசினருக்கும் மக்களுக்குமிடையே நேரடியாகத் தொடர்பு

சமுதாய நல அமைச்சர் ஸ்ரீ எம். பக்தவத்சலம், B.A.B.L., 1955-ம் ஆண்டு நவம்பர் மீ 8 உ-ல் கீழ்பவானி சமுதாய நலத்திட்ட தொகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்தபோது நிகழ்த்திய பிரசங்கங்களின் சாராம்சம் வருமாறு :—

சூரியம்பாளையம் சமுதாய நிலையத்தைத் திறந்துவைத்து, அவர் பேசியபோது " கிராம மக்களும் வாழப் பிறந்தவர்கள். வாழப்பிறந்தவர்கள் மட்டுமல்ல. நல்ல வாழ்வு



வாழப் பிறந்தவர்களும்கூட. நல்ல வாழ்வு என்றால் எது? குபேரசெல்வத்தில் திளைப்பவர்கள்கூட ' சந்தோஷம் ' எது என்பதை அறியாதவர்களாக இருக்கிறார்கள். அமெரிக்க நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்துவந்தவர்கள் சொல்கிறார்கள் ' பெரும்பாலான குடும்பங்கள் குபேரர்களாக வாழ்ந்தாலும்கூட இன்பமற்ற வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள்', என்று. இந்திய கிராமவாசிகள் மிக நல்லவர்கள். பேராசை இல்லாதவர்கள். உள்ளதைக்கொண்டு திருப்தி அடைந்து இன்பமாக வாழ்கின்றார்கள். ஆனாலும் போதிய உணவும், தேவையான உடையும், இருக்க இருப்பிடமும் இன்றி எத்தனை நாட்களுக்கு திருப்தியாக வாழ முடியும் ? கிராம மக்களுக்கும் வாழ உரிமையுண்டு. கிராமங்கள் செழிக்கவேண்டும். கிராம மக்களின் வருவாய் உயர்ந்து கல்வி, சுகாதாரம், மற்ற வசதிகளுடன் வளமான வாழ்வு அவர்களுக்குக் கிடைக்கச் செய்யவேண்டும் என்று அரசாங்கம் உறுதியுடன் உழைத்து வருகிறது. சமுதாய நலத்திட்டம் கிராமங்களை உயர்ந்த நிலைக்கு கொண்டு வருவதற்காக ஏற்பட்ட பெரிய சாதனமாகும். இதனை நன்றாகப் பயன்படுத்திக்கொண்டு கிராமங்களை முன்னேறச் செய்வது அரசாங்கத்தினர் கடமை மட்டுமல்ல, உத்தியோகஸ்தர்களின் பொறுப்பு மட்டுமல்ல, கிராம மக்களின் உரிமையும் கடமையும் ஆகும் " என்று கூறினார்.

பரஞ்சேர்வழி கிராமத்தில் கீழ்பவானி பாசனக் கால்வாய் மீது கிராம மக்கள் கட்டிய வண்டிப்பாலத்தைத் திறந்து வைத்தபோது, அவர் கூறியதாவது :—

" கிராம மக்கள் முன்பெல்லாம் ஜில்லா போர்டுக்கோ, சர்க்காருக்கோ ' ரோடு வேண்டும், பாலம் வேண்டும் ' என்று மனுப்போட்டுக்கொண்டேதான் இருப்பார்கள். மனு கவனிக்கப்பட்டு காரியத்துக்கு வர வருடக் கணக்காக ஆகிவிடும். ஆனால் சமுதாய நலத்திட்டம் கிராமத்தினருக்கு ஒரு புது உணர்ச்சியை ஊட்டியிருக்கிறது. ' தன் கையே தனக்கு உதவி ' என்ற தத்துவம் எப்பொழுதுமே இருந்து வந்திருக்கிறது. அத்தத்துவத்தை சமுதாய நலத் திட்டத்தின் மூலம் கிராம மக்கள் ஸ்பரிசிக்க ஆரம்பித்திருக்கிறார்கள் என்பது நீங்கள் கட்டியிருக்கும் பாலத்தின்மூலம் புலனாகிறது."

பத்தையம்பாளையம் சமுதாய நிலையத்தை அவர் திறந்து வைத்துப் பேசியது :—

" கீழ்பவானி பிராந்திய மக்கள் அதிர்ஷ்டசாலிகள். அவர்களுக்குக் கீழ்பவானி அணைக்கட்டு கிடைத்ததோடு நிற்காமல் சமுதாய நலத்திட்டமும் சேர்ந்து கிடைத்திருக்கிறது. எவ்வளவு நல்ல காரியங்களைச் செய்தாலும் குறை கூறுவதற்கு இந் நாட்டில் ஆட்களுக்குப் பஞ்சமிருக்காது. ஆசையுடன் திருவிழாவிற்கும் போகிறோம். நம்முடைய கவனக்குறைவால் ஜோபியிலிருக்கும் பையை இழந்துவிடக் கூடாது. உங்கள் இரண்டு ஜோபியிலும் சமுதாய நலத் திட்டத்தாலும், கீழ்பவானி அணையாலும் ஏற்பட்ட பலன்கள் இருக்கின்றன. இடையிலே இருக்கின்றவர்கள் ' குறை, குறை ' என்று வித்தை காட்டுகிறார்கள். அந்த வித்தையைப் பார்த்து ஏமாந்து ஜோபியிலுள்ள பைகளை இழந்து விடாதீர்கள்.



மேலும் சிலர் ‘ அரசாங்கத்திடம் அதைச் செய்கிறேன், இதைச் சொல்கிறேன் நன்கொடை கொடுங்கள் ’ என்று வக்காலத்து வாங்குகிறார்கள். **சர்க்காருக்கும் மக்களுக்கும் நேரடித் தொடர்பு வைத்துக்கொள்வதற்காகத்தான் மந்திரிகள் சுற்றுப்பிரயாணம் செய்கிறார்கள்.** மக்களுக்கும் மந்திரிகளுக்கும் இடையில் இந்தப் பூசாரிகள் தேவை இல்லை. உங்களிடையே உங்கள் பிரதிநிதிகள், உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் தெரிவித்தாலே போதும். இல்லை என்றால், ஒரு கடிதம் மூலம் தெரிவித்தால்கூட தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.''

காஞ்சிக்கோவில் உயர்தர ஆரம்ப பள்ளிக்கட்டிட கால்கோள் விழாவின்போது நூல் நிலையங்களுக்கு புத்தகங்கள் விநியோகம் செய்து கூறியது :—

‘‘ இப்பொழுது சுமார் 250 ரூபாய் மதிப்புள்ள புஸ்தகங்கள் உங்களுக்கு இங்கே விநியோகிக்கப்பட்டுள்ளது. இவைகளெல்லாம் விளையாட்டுக்காகவா சர்க்கார் செய்கிறார்கள் ? உங்களுடைய அறிவு பரவி, அந்த அறிவு உங்கள் வாழ்க்கைக்கு பயன்படுமாறு செய்ய, இவைகள் எல்லாம் சாதனங்கள். இவைகளை மக்கள் நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். சமுதாய பொழுதுபோக்கு நிலையங்கள் என்று கட்டுவதெல்லாம் வீண் பொழுதுபோக்குவதற்காக வல்ல. ஓய்ந்த நேரங்களில் நிறையப் புஸ்தகங்கள் படிக்க வேண்டும். இங்கு நல்ல ரேடியோ வாங்கி வைத்திருக்கிறீர்கள். சினிமாப் பாட்டுகள் கேட்பதின்மூலம் மட்டும் பொழுதைப் போக்கிவிடக் கூடாது. ரேடியோவில் பல பயனுள்ள செய்திகளும், உபயோகமுள்ள அறிவிப்புகளும் ஒலிபரப்பப்படுகின்றன. அவைகளைக்கேட்டு, உங்கள் அன்றாட வாழ்க்கைத் துறைகளில் அவைகளைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்''.

காதி, கிராமத் தொழில்கள் அபிவிருத்திக்கு நிதியுதவி

இந்திய சர்க்கார் கதர் உற்பத்தி, கிராமத் தொழில்கள் ஆகியவற்றின் அபிவிருத்திக்காக, கடன்களாகவும் சகாயத் தொகையாகவும், மேற்கொண்டு சுமார் ஏழு லட்சம் ரூபாய் வழங்கியுள்ளனர்.

நடப்பு வருஷத்தில், நாட்டில் பல்வேறு பகுதிகளில் காதி, குடிசைத் தொழில்கள் கண்காட்சிகளை நடத்த ஏற்பாடு செய்வதற்காக அகில இந்திய காதி கிராமத் தொழில்கள் போர்டிடம் மொத்தம் 3,50,000 ரூபாய் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. காதி உண்டியல்களின் விற்பனைக்குப் பிரசார ஏற்பாடுகளைச் செய்வதற்காக, போர்டுக்கு மற்றும் 40,000 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.

கிராமத் தொழில்களின் அபிவிருத்திக்காக, சென்னை, மேற்கு வங்காளம், விந்தியப் பிரதேசம், ஜம்மு—காஷ்மீர் ஆகிய ராஜ்யங்களுக்கு சகாயத் தொகையாக சுமார் 2 லட்சம் ரூபாயும், கடனாக 1 லட்சம் ரூபாயும் வழங்கப்பட்டிருக்கிறது. இத்தொகையில் சென்னைக்கு, அந்த ராஜ்யத்தில் பனைவெல்லத் தயாரிப்புத் தொழிலின் அபிவிருத்திக்கான திட்டமொன்றை நிறைவேற்றுவதற்காக, 1,03,360 ரூபாய் சகாயத் தொகையாக அளிக்கப்பட்டிருக்கிறது.

* * * * * *

உழைப்புத் திருநாள்

வெங்கத்தூரில், கிராமத்தலைவர்களுடைய உழைப்புத் திருநாள் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. 1955, நவம்பர் 27-ந் தேதியன்று, அவ்விழாவை, கடம்பத்தூர் வட்டார அபிவிருத்தி அதிகாரி ஆரம்பித்துவைத்தார். அவ்விழாவை யொட்டி நடைபெற்ற அபிவிருத்தி வேலைகளில், சுமார் 300 கிராம மக்கள் கலந்து கொண்டனர். சாலைகள் அமைக்கப்பட்டன. சேரி சுத்தம் செய்யப்பட்டது. ஹரிஜனங்கள், அபிவிருத்தி வேலைகளுக்காக அளித்த ஒத்துழைப்பு பாராட்டுதலுக்குரியது.

குப்பத்துப்பாளையம் கிராமத்திலும் உழைப்புத் திருநாள் கொண்டாடப்பட்டது. 1955, டிசம்பர் 4-ந் தேதியன்று, சுமார் 400 கிராம மக்கள், சேரியை இணைக்கும் ரஸ்தாவை அமைக்க முற்பட்டார்கள். ஏழைகளுக்கும், ஹரிஜனங்களுக்கும், திட்ட அதிகாரிகளால் பால் வழங்கப்பட்டது. இவ்வாறாகக் கடம்பத்தூர் வட்டாரத்தில் உழைப்புத் திருநாள் வெற்றிகரமாகக் கொண்டாடப்பட்டது.

குடிசைத்தொழில்—பால் பண்ணை

[ஸ்ரீ டி. பட்டாபிராம பிள்ளை, டெபுடி டைரெக்டர், கால்நடை இலாகா, சென்னை.]

[பால் பண்ணைத் தொழில், ஒரு குடிசைத் தொழிலாகும். இத்தொழில் லாபந்தரத்தக்கதல்லவென்று சிலர் கருதுவது தவறென்று, இக்கட்டுரையாளர் சுட்டிக் காட்டுகிறார். அத்துடன் பால் பண்ணைக்கு எந்தெந்த இன மாடுகளை வைத்துக் கொள்ளவேண்டும், அவைகளை எவ்விதம் பராமரிப்பது, முதலியவற்றைப்பற்றித் தெளிவாக விளக்கிக் கூறியிருக்கிறார்.

—ஆசிரியர்]

கால் நடை அபிவிருத்தியின் அவசியத்தையும் பால் எவ்வளவு சிறந்த உணவு என்பதையும் நம் நாட்டவர்கள், அதிலும் விசேஷமாக, கிராம மக்கள், பண்டைக்காலம் தொட்டு நன்கு உணர்ந்திருக்கிறார்கள். உணவுப் பொருள் ஆராய்ச்சியின் மூலம், பால் சிறந்த உணவு என்றும், அதில் புரதம், கொழுப்பு, தாதுப் பொருள், ஜீவசத்து இவைகள் உடலுக்குத் தேவையான அளவு இருப்பதாயும், புரதம் என்ற உயரிய ஜீவசத்து பசுவின் பாலிலிருப்பதால் எளிதில் ஜீரணிப்பதாய் இருக்கிறதென்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள். தேகாரோக்கியத்திற்கு புரதப்பொருள் இன்றியமையாதது என்பதையும் எவ்வகையிலாவது இந்த சத்து நம் உடலில் சேர்க்கப்பட வேண்டியதென்பதையும், பசுவிலிருந்து இப்புரதப் பொருள் கிடைப்பது இன்னும் சிலாக்கியம் என்பதையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆகையினால் தான், பால் எளிதில் ஜீரணிக்கக் கூடியதாகவும் எல்லா சத்துக்களும் நிறைந்து புஷ்டியைத் தரக்கூடிய உணவாகவும் கருதப்படுகிறது.

பால் பண்ணைகள்

பசுவும், பாலும், எவ்வளவு அவசியம் என்பதை நாம் இன்னும் சரிவர உணரவில்லை. ஒருவனுக்கு ஒரு நாளைக்கு சாதாரணமாக 20 அவுன்சு பாலாவது தேவை. நம் தமிழ் நாட்டில், ஒவ்வொருவருக்கும் சராசரி 7 அவுன்ஸ் பால் அளவு தான் கிடைக்கிறது. இதிலும், கிராம மக்களுக்கு இந்த அளவு பால் கூட கிடைப்பதில்லை. கிராம மக்கள், தங்களுக்கு கிடைக்கும் சிறிது அளவு பாலையும், பண லாபம் கருதி, நகரங்களுக்கு அனுப்பி, விற்பனை செய்து விடுகிறார்கள். நம் நாட்டில் தேவையான அளவு, பால் உற்பத்தி இல்லாமையே, இதற்குக் காரணம். மாடுகள், எண்ணிக்கையில் நம் நாட்டில் அதிகமாயிருப்பினும், அவைகள் கொடுக்கும் பால் மிகவும் குறைவாகவேயிருக்கிறது. மாடுகளின் பராமரிப்பு முறையை சரியாக நாம் கையாளுவதில்லை.

பால் பண்ணை நடத்துவது லாபகரமான தொழில் அல்லவென்று சிலர் கருதுகிறார்கள். இது தப்பான அபிப்பிரா

......மாட்டுச் சந்தை......

யம். சரியான முறையில் நடத்தப்படும் பால் பண்ணைகள் ஒருபோதும் நஷ்டத்தைத் தராது.

சிறு பண்ணைகள் நடத்தும் முறையினின்றும், பெரிய பண்ணைகள் நடத்தும் முறை, வேறுபட்டதாகும். விவசாயிகள் தம் சொற்ப வருவாய்க்குப் பக்க உதவியாக, உழவு வினைவு இல்லாத காலத்தை வீண் போக்காமல், நன்கு பயன் படுத்துவதின் மூலம், சிறிய பால் பண்ணைகளை மிகவும் உபயோகமுள்ள லாபகரமான ஒரு குடிசைத் தொழிலாக நடத்தலாம். இந்தக் குடிசைத் தொழிலுக்கு நம் வீட்டுப் பெண்களும், சிறுவர் சிறுமியரும் கூட, உதவியாக இருப்பதைப் பார்க்க, நமக்கே உற்சாகமும் ஊதியமும் அதிகரிப்பது தோன்றும்.

பால் பண்ணைகளுக்குத் தேவைப்படும் இனங்கள்

புதிதாகப் பால் பண்ணை ஆரம்பிப்பவர்களுக்கு முதலில் எந்த மாதிரியான மாடுகள் வைத்துக்கொள்ள வேண்டும் ? வளர்க்க வேண்டியது பசுவா அல்லது எருமையா ? அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள மாடுகளா அல்லது வேறு வகையா ? என்ற கேள்விகள் எழலாம். இவைகள் அந்த அந்த இடங்களையும் சௌகரியங்களையும் பொறுத்ததேயாகும். மேய்ச்சல் நிலம் குறைவாயுள்ள நீர்ப்பாங்கான சதுப்பு பிரதேசங்களானுல், கடுமையான உழைப்பிற்கான மாடுகள் தேவை இராது. இம்மாதிரி பிரதேசங்களில், எருமைகள் வளர்ப்பதே உசிதமாகும். ஆனுல், பெரும்பாலான இடங்களில் பசுமாடுகளே காணப்படுகின்றன. அவற்றிற்கு காரணமும் உண்டு. நமது பொருளாதாரமே விவசாயத் தொழிலை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இன்றல்ல, தொன்று தொட்டே இவ்வாறு அமைந்துள்ளது. இயந்திர சாதனங்களினுல் விவசாயம் செய்யப்படும் நாளிலும், அநேக வருஷங்களுக்கு கால் நடைகளே விவசாயத்திற்கு இன்றியமையாதனவாகவே இருந்து வரும். அவ்வாறே மற்ற வேலைகட்கும், எருதுகளும் பால் தரும் பசுக்களும், அவசியமாயிருக்கும். பொதுவாகக் கூறினுல், அந்த அந்தப் பிரதேசங்களிலுள்ள மாடுகளே உகந்ததென்றுதான், சொல்ல வேண்டும். அப்பிரதேசங்களின் சீத உஷ்ண நிலைக்கும் தீவனத்திற்கும், அவைகளே, இயற்கையிலேயே, தகுதியானவைகளாக விருக்கும். கால் நடைகளுக்கு ஏற்படும் சிற்சில நோய்களுக்கு அப்பிரதேச இயற்கையே மருந்தாகவும் அமையும். வேறு தூர தேசங்களிலிருந்து புது இடங்களுக்கு மாடுகள் கொண்டுவரப்பட்டால், அவற்றிற்கு அம்மாதிரியான பாதுகாப்பில்லாமலும் போகலாம். உதாரணமாக, நம்நாட்டுக் கால் நடைகளுக்கு சாதாரணமாய் ஏற்படக்கூடிய வாய்ச் சப்பை கால்கட்டு (Foot and Mouth disease) என்னும் நோய், மற்ற நாட்டுக் கால்நடைகளுக்கு ஏற்பட்டால், பெருத்த சேதத்தையே விளைவிக்கிறது. பசுக்களை பொறுக்கி எடுக்கும்போது அவை நன்கு பால் தருவனவாகவே இருக்கவேண்டும் என்று எண்ணுகிறோம். நன்கு போஷிக்கப்பட்டு, பால் கொடுக்கக்கூடிய வம்சத்தைச் சேர்ந்த பொலி காளைகளின் சேர்க்கையினுல் அதிக பால் கொடுக்கக்கூடியனவாகச் செய்யலாம். தற்சமயம் இந்திய விவசாய ஆராய்ச்சிக் குழுவினரால் (Indian Council of Agricultural Research) காங்கய இனக் கால்நடைகளின் உழைப்பும் உறுதியும் கெடாதவாறு, அதிகமான பால் தருவதற்கான வழிகள் பல கால்நடைப் பண்ணைகளில் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகின்றன. இந்த ஆராய்ச்சியினுல் சிறிதளவு பால் அபிவிருத்தி ஏற்படலாமென்ற நம்பிக்கையுமிருக்கிறது. நல்ல உழைப்பும், அதிகம் பால் தரக்கூடியதுமான, கால்நடைகளே நமக்குத் தேவை. பாலுக்கு ஒரு வகை, வேலைக்கொருவகை, எனப் பலவகையான கால்நடைகளைப் பராமரிப்பது, பொருளாதார நெருக்கடியான இக்காலத்தில், அசாத்தியமாகும்.

பால்பண்ணை நடத்துவதற்கு வழிமுறைகள்

பால் பண்ணை ஆரம்பிப்பதற்கு முன், அது நடத்தப்பட வேண்டிய முறைகளை நன்கு திட்டமிட்டுக் கொள்ளவேண்டும். எவ்வளவு தீவனம் கிடைக்கும், எவ்வளவு மேய்ச்சல் நிலம் இருக்கிறது, அவற்றிற்காகும் செலவுகள், இவற்றைப் பொறுத்து கட்டுப்படியாகக்கூடிய எண்ணிக்கையுள்ள மாடுகளை வைத்துக்கொள்ள வேண்டும். பால் பண்ணைக்கு ஏற்படும் ஸ்திரமான மூலதனச் செலவும், அவ்வப்போது ஏற்படும் மாதவாரி அல்லது வருடவாரி பராமரிப்புச் செலவுகளும் கணக்கிட்டுப் பார்க்கவேண்டும். நம் நாட்டைப் பொறுத்தமட்டில், சிறிய பால் பண்ணைகளுக்கு பெரும் செலவு செய்து கட்டிடங்கள் அமைக்கவேண்டிய அவசியமில்லை. காங்கேய நாட்டில் மாடுகளையும் இரண்டு மாதங்களுக்கு மேற்பட்ட கன்றுகளையும் எப்போதும் திறந்த வெளியில், வெயிலிலும் மழையிலும், வளர்க்கிறுர்கள். விரிவாகக் கூறுமிடத்து, பண்ணையின் அலுவல்களை, இனவிருத்தி, தீவனம், பராமரிப்பு என மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

இன விருத்தி

நன்கு தெரிந்து எடுக்கப்பட்ட பொலி காளைகளையே மாடுகளுக்கு சேர்க்கவேண்டும். அப்பொலிகாளைகள், நன்ருக உழைக்கக்கூடியதும், உறுதிவாய்ந்த உடலமைப்புள்ளதும், அதிக பால் தரும்படியானதுமான குணங்கள் அமைந்த கன்றுகளை, ஈனச் செய்வனவா, என்பதை நாம் தெரிந்து கொண்டிருக்கவேண்டும். இவ்விஷயத்தில், மிகுந்த கவனமும், தொடர்ந்த அனுபவமும் தேவை. பசு, தன் மூன்ருவது கன்றுக்குப் பிறகும், நான்கு, ஐந்தாவது கன்று ஈனும் வரை, ஒரே அளவான காலத்திற்கு ஒரே அளவான பால் கொடுக்கும். அதன் பிறகு, பாலின் அளவும், கறவையின் காலமும், குறைவுபடும் என்பது யாவரும் அறிந்ததே. நல்ல கன்ருக ஈனும் மாட்டின் விஷயத்தில் மட்டும், இதற்கு விதிவிலக்குண்டு.

தீவனம்

பண்ணை நடத்துவதில் ஏற்படும் செலவில், மாட்டுத் தீவனத்திலேயே பெரும் பகுதி செலவிடப்படுகிறது. இந்த விஷயத்தில் நாம் கவனிப்பதை ஒட்டி பண்ணையில் கிடைக்

கும் லாபமும் இருக்கும். தீவனத்தில் கழிவு ஏற்படாமல் கவனிக்கவேண்டும். தீவனத்தைப் பொருத்தமட்டில், எளிதாகக் கிடைக்கக்கூடியதையும் அவற்றின் மதிப்பு, தன்மை—இவைகள் நன்கு தெரிந்திருக்க வேண்டியது அவசியம். உதாரணமாக, சோளம், கம்பு, தட்டுகள் கிடைக்கக்கூடிய காலத்தில், விலை அதிகமாயுள்ள கடலைப் பிண்ணாக்கைத் தீவனமாக உபயோகித்தல் வீணேயாகும். நல்ல மேய்ச்சல் தான் மாடுகள் நன்றாகக் கொழுத்து வளருவதற்கு அவசியம்.

ஒவ்வொரு மாட்டுக்கும் தனித் தனியே அவற்றின் வேலைக்கும், அவை கொடுக்கும் பாலுக்கும் தக்கவாறு, தீவனம் வைப்பதே சிறந்தது. உணவை அதிகப்படுத்துவதினாலேயே, எவ்வளவு அதிக பால் வேண்டுமானாலும் கிடைக்கும் என்று எண்ணுவது தவறு. அது அதன் வம்சத்தைப் பொருத்தும், ஒரு அளவுக்கு நாம் கொடுக்கும் நல்ல உணவைப் பொருத்தும், பாலின் அளவு இருக்கிறது. தண்ணீரும் அவசியம் என்று சொன்னால், அது பலருக்கு சாதாரணமாகத் தோன்றும். அதிகமாகவும் அடிக்கடியும் தண்ணீர் குடிக்கச் செய்வதினால் மாடுகள் கறக்கும் பாலின் அளவு ஆச்சரியப்படத்தக்க முறையில் அதிகரிப்பதாக ஆராய்ச்சி செய்தவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். நமக்கு சௌகரியப்பட்ட வேளைகளில் மாடுகளுக்குத் தண்ணீர் காட்டும் வழக்கம் நல்லதல்ல. எப்பொழுதும் மாடுகளுக்கு அவைகள் இஷ்டப்படும்போது குடிக்கும்படியான வசதியிருக்கவேண்டும். அதுவும் சுத்தமான தண்ணீராக யிருக்கவேண்டும்.

பராமரிப்பு

கண்டிப்பான ஒழுங்கு முறைகளை தினசரி அனுஷ்டிப்பது அவசியம். எந்த அளவான உணவு கொடுக்கப்பட்டாலும், அவை கொடுக்கப்படும் முறைகளே முக்கியமானவை. மாடுகள் தினமும் நீண்ட நேரம் ஆகாரமின்றி இருக்க விடாமல், அவைகளின் உணவைப் பகிர்ந்து சரியான இடைவேளைகளுடன் கொடுத்துவர வேண்டும். அத்துடன் மாடு தீவனம் எடுத்துக்கொண்ட நேரத்திற்கும், தேய்ப்பதற்கும், பால் கறப்பதற்கும் இடையே, போதிய அவகாசம் இருக்கிறதா என்பதையும் கவனிக்கவேண்டும். மாட்டைத் தேய்ப்பதினால் உண்டாகும் தூசி, கறக்கப்படும் பாலில் படாதவண்ணம், போதிய நேரத்திற்கு முன்பே, மாடுகள் தேய்க்கப்படவேண்டும். மாட்டின் மடி, பால் கறப்பதற்கு முன், கழுவப்பட்டிருத்தல் அவசியம். கட்டுத்துறைகள் தினமும் சுத்தம் செய்யப்படவேண்டும். கட்டுத் துறையில் ஈமொய்த்துக்கொண்டு, பால் கறக்கும்போது மாட்டின் மேல் ஈ உட்கார்ந்தால் பால் சரியாக கறக்காது. பால் அளவும் குறையும். மாடுகளைத் தினமும் கவனித்துப் பார்ப்பதுடன், அதன் மடியும் அடிக்கடி பார்க்கப்பட வேண்டும். ஈனும் காலமாயிருக்கும் சினைமாடுகளை மேய்ச்சற் காட்டிற்கு அனுப்புதல் கூடாது. அதைக் கட்டுத் துறையிலேயே வைத்து தீவனம் கொடுத்துப் பராமரிக்க வேண்டும். பால் பாத்திரங்கள் எல்லாம் கொதிக்கும் வெந்நீரில் நன்றாகக் கழுவி சுத்தமாக வைக்கப்பட்டிருக்க வேண்டும். சுகாதாரமான கட்டுத் துறையும், ஒரே நிறை ஒரே கால அளவு உள்ள ஒழுங்கான உணவு, தினசரி கவனிப்பு, இவைகளே, பால் பண்ணை நடத்துவதில் பெரும் வெற்றியளிக்கும்.

மாட்டு சாணம், சிறு நீர் இவை நிலத்திற்கு சிறந்த உரமாகும். இவற்றை வீணாக்காமல், சேகரிப்பதுடன் அவற்றில் ஈ, கொசு முட்டையிட்டு விருத்தியடையாதவாறு, காத்தலும் அவசியம்.

பால் பண்ணைத் தொழில் எவ்வளவு தூரம் அபிவிருத்தி அடைந்திருக்கிறது, இதனால் ஏற்படும் லாப நஷ்டம் எவ்வளவு, என்பவைகளை அறிந்துகொள்ள கணக்குகள் வைத்துக் கொள்வது மிகவும் அவசியம். ஒவ்வொரு மாட்டுக்கும், அதன் பிறப்பு, வளர்ப்பு, எந்த வம்ச மாட்டிற்கு பிறந்தது, அதன் பால் அளவு, அது ஈன்ற கன்றுகள், தினம் கொடுக்கும் உணவின் அளவு, முதலியவைகளைப் பற்றி தினமும் பதிந்து கொண்டு வரவேண்டும். பல மாடுகளின் பால் அளவை ஒத்துப் பார்க்கவும், எந்த எந்த மாடுகள் அதிகம் பால் கொடுக்கின்றன, எவைகளின் பால் அளவு குறைவாயிருக்கிறது, எவைகளுக்கு அதிகத் தீவனம் கொடுக்கவேண்டும், எவைகளை பண்ணையிலிருந்து கழிக்கவேண்டும், முதலிய விஷயங்களை அறிந்து கொள்ள இந்தக் கணக்குகள் மிகவும் உபயோகமாயிருக்கும்.

விற்பனை ஏற்பாடு

இக்காலத்தில், பால், அதிலிருந்து கிடைக்கும் தயிர், நெய் இவற்றை விற்பனை செய்வது கடினமல்ல. ஆனால், தேவைக்கு அதிகமாக பால் கிடைக்கக்கூடிய இடங்களில் சிரமம் ஏற்படலாம். இதற்குக் கூட்டுறவு முறையே சிறந்த மார்க்கமாகும். தனித்தனியே வியாபாரம் செய்பவர்கள் ஒன்றாகச் சேர்ந்து கூட்டுறவு சங்க மூலம், விற்பனை ஸ்தலம் கண்டுபிடிக்கவேண்டும். அக்கூட்டுறவு சங்கமூலமே, மாட்டுத் தீவனங்கள் வாங்கிக் கொள்ளவும், ஒரு பொலி காளை வைத்து நிர்வகிக்கவும், பால் பண்ணை அபிவிருத்திக்காக சிறு தொகைகள் கடனாகப் பெறவும் சாதகமாயிருக்கும்.

இவ்வாறு, சிறு பால் பண்ணைகளையே விவசாயிகள் சிறந்த குடிசைத் தொழிலாக நடத்தலாம். அப்படிச் செய்தால் விவசாயியின் குடும்பத்திற்கு லாபத்தையும் கொடுப்பதுடன், நம் நாட்டின் சுபிட்சத்திற்கு தேவையான நல்ல பசுவின் பாலும் கிடைத்து தற்போதைய உணவுப் பஞ்சத்தையும் ஓரளவு நிவர்த்தி செய்வதாகவுமிருக்கிறது.

செய்தித் திரட்டு

பெரம்பலூர் வட்டாரத்தில்

பெரம்பலூர் வட்டாரத்தில், 1955, நவம்பர் மாதத்தில், ஏழு சர்க்காக்கள் வழங்கப்பட்டன. 412 ரூபாய் பெறுமான கதர் துணி விற்கப்பட்டது. 1,500 ரூபாய் பெறுமான கதர் உண்டியல்களும் விற்கப்பட்டன. எட்டு கம்போஸ்டு உரக் குழிகள் தோண்டப்பட்டன. சுமார் 9 டன் கம்போஸ்ட் உரம் தயாரிக்கப்பட்டது. பள்ளிக் கட்டிடவேலைகள் (ஐந்து) மும்முரமாக நடைபெற்று வருகின்றன. கூட்டுறவுதினம், இவ்வட்டாரத்திலுள்ள கிராமங்களில், வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

முசிரி வட்டாரத்தில்

இந்த வட்டாரத்தில் 1955, நவம்பர் மாதத்தில் 31 ரஸ்தாவேலைகள் நடைபெற்று வருகின்றன. அகில இந்திய கூட்டுறவு தினம் நவம்பர் 7-ந்தேதியன்றும், ஹரிஜனங்கள் தினம் நவம்பர் 30-ந் தேதியன்றும் கொண்டாடப்பட்டன. 21 பள்ளிக்கூடக் கட்டிடங்களையும் 13 சமுதாய மண்டபங்களையும், இவ்வட்டாரத்தில், மக்கள் ஒத்துழைப்புடன், திட்ட அதிகாரிகள் அமைத்து வருகிறார்கள். ஆறு டன் சூபர்பாஸ்பேட் உரமும், 61 டன் அம்மோனியம் சல்பேட் உரமும், விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன. ஹரிஜனங்களின் நலனுக்காக, மூவானூரில் கிராம வீடு கட்டும் கூட்டுறவுத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

கரூர் வட்டாரத்தில்

கிராம குடிதண்ணீர் வசதிக்குரிய திட்டத்தின்கீழ் 30 வேலைகள், கரூர் வட்டாரத்தில் நடைபெற்று வருகின்றன. 1955, நவம்பரில் 3 வேலைகள் பூர்த்தியாகிவிட்டன. தீவிரமாக உரமிடுவதற்காக வகுக்கப்பட்ட திட்டத்தின்கீழ், 1955, நவம்பரில், 2,620 ரூபாய் கடனாக வழங்கப்பட்டது. ஆனைப் பாளையத்தில், நவம்பர் 14-ந் தேதியன்று, குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டு, பரிசுகள் வழங்கப்பட்டன.

ஆலங்குடி வட்டாரத்தில்

மாலக்குடியிலிருந்து கொத்தமங்கலம் ஏரிக்கரைவரை, ரஸ்தா அமைக்கும் வேலை, 1955, நவம்பரில் பூர்த்தியாகிவிட்டது. பிரஹதாம்பாள்புரம், கல்யாணபுரம், வேங்கிடகுளம் கிராமம் முதலிய கிராமங்களில், பள்ளிக் கட்டிட வேலைகள் நடந்துவருகின்றன. தண்ணீர்பந்தல்பட்டியிலும் வேப்பங் குடியிலும் இரு கிணறுகள் தோண்டப்பட்டன. ஹரிஜன சேரிகளில் கிணறுகளை அமைக்கும் வேலையும் மும்முரமாக நடந்துவருகிறது. செம்பத்தூரில், ஒரு கிணறு தோண்டப்பட்டது. 31 கம்போஸ்ட் உரக்குழிகள் தோண்டப்பட்டன. 286 கால்நடைகளுக்கு, நோய்த்தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது. 1955, நவம்பரில், பூவரசக்குடியிலும், வேப்பங்குடியிலும், இரு முதியோர் கல்வி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. நவம்பர் மாதத்தில், அபிவிருத்தி வேலைகளுக்காக, ஆலங்குடி மக்கள் அளித்த பங்கு ரூ 1,958.

வள்ளியானை வட்டாரத்தில்

இந்த வட்டாரத்தில், சமூகக் கல்வி நிலையம் ஒன்று, 1955 நவம்பரில் ஆரம்பிக்கப்பட்டது. கால்நடைக் கண்காட்சியும், விவசாயப் பொருட்காட்சியும் நடத்தப்பட்டன.

பாபநாசம் (தெற்கு) வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திற்கு 1955, அக்டோபரில், பல தலைவர்கள் விஜயம் செய்தனர். சென்னை ராஜ்ய விவசாய அமைச்சர் இவ்வட்டாரத்துக்கு விஜயம் செய்து, அம்மாப்பேட்டை பிரசவ விடுதியைத் திறந்துவைத்ததுடன் சாலியமங்கலத்தில் குடிநீர் தேக்கநிலையத்தையும் திறந்துவைத்தார். தஞ்சை ஜில்லா போர்டு உபதலைவர் ஸ்ரீ பி. வெங்கடாசலத் தேவர், அக்டோபர் 13-ந் தேதியன்று, புதிதாக அமைக்கப் பட்ட பூங்கா ஒன்றைத் திறந்துவைத்தார். கிராம நல டைரெக்டர் ஸ்ரீ ஜி. வெங்கடாஜலபதி, அக்டோபர் மூன்றுவது வாரத்தில், இந்த வட்டாரத்துக்கு விஜயம் செய்து, சாலியமங்கலத்தில் நடைபெற்ற கிராமத்தலைவர்கள் விவாத அரங்கில் சொற்பொழி வாற்றியதுடன், அக்டோபர் 19-ந் தேதியன்று தேசிய வளர்ச்சித் திட்ட அதிகாரிகளையும் சந்தித்துப் பேசினார். புளியக்குடியில், அவர், அக்டோபர் 22-ந் தேதியன்று, சமுதாய மண்டபமொன்றைத் திறந்துவைத்தார். அக்கிராமத்தில், பள்ளிக்கூடம் கட்டுவதற்கு, அஸ்திவாரக்கல்லையும் அவர் நாட்டினார்.

கல்லுப்பட்டி வட்டாரத்தில்

மதுரை ஜில்லாவிலுள்ள, T. கல்லுப்பட்டி வட்டாரத்திலுள்ள கிராமங்கள் அனைத்திலும், 1955, நவம்பரில், நல்ல மழை பெய்தது. நாற்று நடவு நடைபெற்றது. மாத முடிவில், கம்பு, ராகி, குதிரைவாலி, வேர்க்கடலை முதலியவற்றின் அறுவடை ஆரம்பிக்கப்பட்டது. 61 கம்போஸ்ட் உரக்குழிகள் தோண்டப்பட்டன. 450 டன் கம்போஸ்ட் உரம் தயாரிக்கப்பட்டது. 212 கால்நடைப் பிராணிகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. சின்னக்கட்டளை கிராமத்திலுள்ள பலகாரிய கூட்டுறவு சங்கத்தின் ஆதரவில், ஒரு நூல் நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. பேரையூர் கூட்டுறவு சங்கத்துக்காக, கிடங்கு அமைக்கும் வேலை பூர்த்தியாகிவிட்டது. T. கல்லுப்பட்டியில் நவம்பர் 14-ந் தேதியன்றும் பேரையூரில், நவம்பர் 15-ந் தேதியன்றும், எழுமலையில் நவம்பர் 16-ந் தேதியன்றும், குழந்தைகள் தினம் வெகு

விமரிசையாகக் கொண்டாடப்பட்டு, நான்கு குழந்தைக ளுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன.

திருமங்கலம் வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலுள்ள எம். புளியங்குளம், மேலாரப் பனூர் ஆகிய கிராமங்களில், மாலைப்பள்ளிகள், 1955, நவம்பரில், ஆரம்பிக்கப்பட்டன. சொரிக்கம்பட்டியில் சமூகக் கல்வி நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. கூடகோயில், எஸ். மீனாக்ஷிபுரம் ஆகிய கிராமங்களில், மக்கள் மனமகிழ் மன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன. லாலா புரத்தில், மாதருக்கான சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. லாலாபுரத்தில் விவசாய இளைஞர் சங்கங்களும் ஆரம்பிக்கப் பட்டது. சமுதாய நலத்திட்ட நிர்வாகத் தலைவர் ஸ்ரீ எஸ். கே. டே. சென்னை ராஜ்ய கிராமநல டைரக்டருடன், கீழாரப்பனூர், செக்கனூரணி, வ. கொக்குளம் முதலிய கிராமங்களுக்கு, நவம்பர் 18-ந் தேதியன்று விஜயம் செய்து, அக்கிராமங்களில் நடைபெற்றுவரும் அபிவிருத்தி வேலைகளைப் பார்வையிட்டார்.

போளூர் வட்டாரத்தில்

ரெவினியு அமைச்சர் ஸ்ரீ எம். ஏ. மாணிக்கவேலு, சோமந்தபுதூரில் பஞ்சாயத்துப் பள்ளிக்கூடம் கட்டுவதற் காக, அஸ்திவாரக்கல் நாட்டினார். மேலும், அவர், களியங்கிராமத்தில் ஹரிஜன பள்ளி கட்டுவதற்காக, அஸ்தி வாரக்கல் நாட்டினார். மாம்பட்டு கிராமத்துக்குச் செல்லும் புது ரஸ்தாவையும், அமைச்சர் திறந்துவைத்ததுடன், அத்திமூரில் சமுதாய ரேடியோ செட்டையும், சிறுவர் பூங்காவையும திறந்துவைத்தார். 1955, நவம்பர் 11-ந் தேதி, அவர், தேப்பனந்தலில், கால்நடைக் கண்காட்சி யைத் திறந்துவைத்தார். வட்டார விவசாய சங்கத்தின் கூட்டம், நவம்பர் 25-ந்தேதி நடைபெற்றது. ஆடுதுறை, கோயம்புத்தூர், பாளையக்கோட்டை முதலிய ஊர்களுக்குச் சுற்றுப்பிரயாணம் செய்து, விவசாயத் துறையில் நடை பெறும் ஆராய்ச்சிகளைப்பற்றி நேரில் கண்டறிந்து வருவ தென்று, அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

திருவண்ணாமலை வட்டாரத்தில்

திருவண்ணாமலை-ஆ. வாளூர்பேட்டை ரஸ்தாவுக்கு வேதாந்தவடி கிராமத்திலிருந்து வந்து சேரும் ரஸ்தாவை அமைக்கும் வேலை, 1955, நவம்பரில், பூர்த்தியாகிவிட்டது. கிணறு வேலை ஒன்று பூர்த்தியாகியிருக்கிறது. இவ்வட்டா ரத்தில், எட்டு இடங்களிலே, கூட்டுறவு வாரம் விமரிசை யாகக் கொண்டாடப்பட்டது.

பாபநாசம் (வடக்கு) வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலுள்ள சரபோஜி ராஜபுரத்திலிருக்கும் முதியோர் பள்ளிக்கூடத்தைச் சேர்ந்தவர்களால் "மனிதன் யார் ?" என்ற நாடகம், 1955, நவம்பரில், நடத்தப் பட்டது. 105 கம்போஸ்ட் உரக் குழிகள் தோண்டப்பட்டன. 633 மணங்கு உரமும், 359 மணங்கு விதைகளும் விநியோ கிக்கப்பட்டன. பல நிதர்சன பயிற்சிப் பண்ணைகள் ஆரம் பிக்கப்பட்டன. 314 கால் நடைகளுக்கு நோய்த்தடுப்பு ஊசிபோடப்பட்டது. 232 கால் நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. பண்டாரவாடை கிராமத்திலுள்ள கொர வர்கள் கூடை முடைவதில் கைதேர்ந்தவர்கள். கூடை முடையும் தொழில் வளம்பெற, அவர்களை அங்கத்தினர் களாகக் கொண்டு, ஒரு சங்கம் அமைக்கப்பட்டது. ஐந்து குக்கிராமங்களுக்குப் புதிதாக, மின்சார வசதி அளிக்கப் பட்டிருக்கிறது.

* * * * *

கும்பகோணம் (வடக்கு) வட்டாரத்தில்

இரு சமூகக் கல்வி நிலையங்களும், ஒரு பாலர் சங்கமும், இவ்வட்டாரத்தில், 1955, நவம்பரில், ஆரம்பிக்கப்பட்டன. நான்கு சிறுவர்கள் பூங்காக்கள் புதிதாக அமைக்கப்பட்டன. 61 கால் நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. 35 கம்போஸ்ட் உரக்குழிகள் தோண்டப்பட்டன. 23 நிதர்சன பயிற்சிப் பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டன. 814 மணங்கு அம்மோனியம் சல்பேட் உரமும், 196 மணங்கு நெல் விதை களும், 1 மணங்கு பசுந்தாளுர விதைகளும் விநியோகிக் கப்பட்டன. குறுகிய கால கடன் வசதிகளுடன், 31,750 ரூபாய் கடனாகவும், கிராம வீடு கட்டும் திட்டத்தின்கீழ் 250 ரூபாய் கடனாகவும் விநியோகிக்கப்பட்டது.

கும்பகோணம் (தெற்கு) வட்டாரத்தில்

இவ் வட்டாரத்தில், 54 முதியோர் கல்வி நிலையங்கள், 1955, நவம்பரில், ஆரம்பிக்கப்பட்டன. 6 மக்கள் மனமகிழ் மன்றங்களும் ஆரம்பிக்கப்பட்டன. மூன்று கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 183 கால் நடைகளுக்கு நோய்த் தடுப்பு சிகிச்சையும், 810 கால் நடைகளுக்கு நோய்க் காகச் சிகிச்சையும் அளிக்கப்பட்டன. எட்டு கிணறுகள் புதுப் பிக்கப்பட்டன. குறுகிய கால கடன் வசதிகளுடன், சுமார் 16,000 ரூபாய் கடனாகவும், கிராம வீடு கட்டும் திட்டத்தின் கீழ், 4,700 ரூபாய் கடனாகவும் அளிக்கப்பட்டிருக்கிறது. பட்டீசுவரம் கிராமத்திற்கு மின்சார வசதி செய்து கொடுக் கப்பட்டிருக்கிறது. அக்கிராமத்துத் தெருக்களிலுள்ள மின்சார விளக்குகளை, சென்னை ராஜ்ய விவசாய அமைச்சர் ஏற்றிவைத்தார்.

மாயூரம் (கிழக்கு) வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலுள்ள அன்னப்பன்பேட்டை, மடப்புரம், ஆக்கூர் முதலிய கிராமங்களில் மூன்று சமூக சேவை சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. திருக்கடையூரில், இளைஞர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. ஆக்கூரில் சிறுவர் பூங்கா திறந்து வைக்கப்பட்டது. தரங்கம்பாடி செயிண்ட் தெரசா அனுதைப் பள்ளியைச் சேர்ந்த மாணவிகளால், கதம்ப நிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட்டது. கிராமிய நடனங்களும், நடன நாடகங்களும் அந்நிகழ்ச்சியில் இடம் பெற்றிருந்தன. நிகழ்ச்சியில் பங்கெடுத்துக் கொண்ட மாணவிகளுக்கும், மற்றவர்களுக்கும், சுமார் 150 ரவிக்கைத் துண்டுகள் ஆக்கூர் பஞ்சாயத்து போர்டு தலைவரால், நன்கொடையாக வழங்கப்பட்டன.

(16-ம் பக்கம் பார்க்க)

என் வாழ்வில் ஒரு நாள்

[ஸ்ரீ. ஜே. குழந்தைவேலு, கிராம சேவக் I, பவானிசாகர்]

[அவர் வாழ்வில் ஒரு நாள்....இல்லை....எல்லா நாட்களிலும் எம் கடன் பணி செய்து கிடப்பதே என்று கொள்கையை கிராம சேவக்குகள்....கிராமத் தொண்டர்கள்... அனைவரும் கடைப் பிடித்து வருகிறார்கள். இக் கட்டுரையாளர், மதுரை ஜில்லாவில் கிராமத் தொண்டராக சேவை புரிந்தபோது....ஒரு நாள்.....

—ஆசிரியர்]

கிராம சேவா சங்க கூட்டத்தை நடத்துவதற்காக நான், அன்று, சைக்கிளில் வேகமாக போய்க்கொண்டிருந்தேன். என் நண்பர் ஒருவர், என்னை, வழிமடக்கினார். அவர் இண்டலாகப் பேசுகிறவர். விஷயங்களைத் தெரிந்து கொள்வதிலும் அவருக்கு ஆர்வம் அதிகம். நான் சைக்கிளை விட்டிறங்கி, அவருடன் மரத்தடிக்குச் சென்றேன். அங்கு, எங்களுக்குள் நிகழ்ந்த சம்பாஷணை இதுதான் :—

அவர்.—சாயந்திரமா, என் சார், நீங்க இப்படி வேகமாக குடல் தெறிக்க, போகனும் ? எங்கேயாவது கலகமா ?

நான்.—அதெல்லாமில்லை, சார். அடுத்த கிராமத்திலே, கிராமசேவா சங்கக் கூட்டத்தை நடத்தனும். மாதமிருமுறை, அதாவது பௌர்ணமியன்றும் அமாவாசையன்றும், இக் கூட்டங்கள் நடைபெறவேண்டும். இன்று அமாவாசையல்லவா......ஆகையினாலே....

அவர்.—அது சரிதான், சார், சர்க்கார் அதிகாரிகளெல்லாம் தங்களுடைய வீடுகளை நோக்கிப் போய்க் கொண்டிருக்கும் போது, நீர் மட்டும் வேலை பார்க்கப் போவது, எனகென்னமோ, ஆச்சரியமா இருக்கிறது.

நான்.—ஆமா. உங்களுக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கும். ஆனால், விஷயத்தைத் தெரிஞ்சு கொண்டீர்களானால், ஆச்சரியப்படமாட்டீர்கள். கிராம மக்களின் கூட்டத்தை இரவில் நடத்தினால்தான் சௌகரியமாயிருக்கும். பகலிலோ, அவர்கள் தங்கள் தங்களுடைய வேலைகளைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். இரவிலோ, அவர்களுக்குக் கூட்டத்தில் கலந்து கொள்ளவும், கூட்ட நடவடிக்கைகளை நன்றாக அறிந்து கொள்ளவும் வாய்ப்பு இருக்கிறது.

அவர்.—அது சரிதான், என் நீர் அவங்க எல்லோரையுமே பார்க்கவேணும் ? ஏதோ இரண்டொருவரை மட்டும் பார்த்தா போதாதா ?

நான்.—எங்க காரியத்துக்கு, அப்படிப் பார்ப்பதால் பிரயோசனமிருக்காது. நான் அவங்க எல்லோரையும் சந்தித்து, அபிவிருத்தித் திட்டங்களால் என்ன பலன்கள் கிட்டும் என்பதை அவங்களுக்கு எடுத்துச் சொல்லி, பொருளையோ உழைப்பையோ அவங்க தானமாக அளிக்கும்படி செய்யவேணும். ஏதாவது பிரச்னைகள் இருந்தால், அவைகளைப் பற்றியும் கூட்டத்திலே, விவாதிக்கணும். ஏகமனதா கூட்டத்திலே தீர்மானங்களை நிறைவேற்றி, வெற்றிகரமாக அபிவிருத்தி வேலைகளை முடிக்க, பாடுபடவேணும். ஆகையினாலே, எங்களைப் போன்ற தொண்டர்கள் பெரும்பாலும் கூட்டத்தினர்களின் ஒத்துழைப்பை நாடுவார்களே தவிர, தனிப்பட்ட ஆட்களை நாடமாட்டார்கள்.

அவர்.—அடேயப்பா. பெரிய வேலையாகவல்லவோ இருக்கு. எப்படி சார், முடியும் ? ஒவ்வொரு பிரச்னையையும் கூட்டத்தினர் முன்னாலே விளக்கிப்பேசி, எப்படி ஏகமனதா முடிவு செய்றது ? எனக்கு என்னமோ இந்த முறையே பிடிக்கல்லை. நாகரீகமே இல்லாத ஆட்களோட பழகுறதுன்னாலே, என் மனது கஷ்டப்படறது. அதுவுமில்லாம, அந்த கிராமத்திலோ, ஹோட்டலோ, காப்பி கிளப்போ கிடையாது. நீர் அங்கே, உண்ணாவிரதந்தான் இருக்கணும் !

நான்.—அப்படி ஒண்ணும் விரதம் இருக்கவேண்டியதில்லை. முதல்லே, எனக்கு காபி கிளப்புக்குள் நுழைவதற்கே, மனது கஷ்டமாயிருக்கு. பல பேர்கள் சாப்பிட்ட பாத்திரங்களிலேதான், நமக்கும் பட்சணமும் காபியும் வழங்கப்படுகின்றன. இந்தப் பழக்க வழக்கம், தொத்து நோய் பரவுவதற்கு இடங்கொடுக்கக் கூடியது.....ஆகையினாலே நான் அந்த கிராமத்தில் ஹோட்டல் இல்லாததைப் பத்தி கவலைப்படலை. அந்த கிராமத்திலுள்ள மக்கள் அன்பு நிறைந்த உள்ளத்தினர். நான் எப்போது போனாலும், அவர்கள் என்னை உபசரித்து, வலுக் கட்டாயமாக உண்ண வைத்து விடுகிறார்கள். அவர்கள் வீடுகளைத் துப்புரவாக வைத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டிருந்தேன். இப்போதெல்லாம் அவர்கள் அன்றாடம் குளித்து, வீடுகளை துப்புரவாகவும், பாத்திரங்களைக் கழுவிச் சுத்தம் செய்தும் வைத்துக் கொள்கிறார்கள். இப்போ, நீங்க என்னோடு வந்து, அவர்களைப் பாத்தீங்கன்னா, அவர்களை நாகரீக மில்லாதவர்கள் எனக் கூறமாட்டீர்கள்.

அவர்.—நானுந்தான் பாக்கிறேன்....பத்து மாதமா, இந்த வட்டாரத்துக் கிராமங்களிலே நீர் அலைந்து கொண்டிருப்பதை....அப்படி என்னதான் வேலை நடந்திருக்கு, இந்த வட்டாரத்து கிராமங்களிலே ?

நான்.—மதுரை ஜில்லாவிலுள்ள கிராமங்களிலே, வீடுகள் எல்லாம், வரிசை வரிசையாக இருப்பது, உங்களுக்குத் தெரியாத விஷயமல்ல. வீட்டுக்கு முன்னுலே வாராந்தாவும் கிடையாது, திண்ணையும் கிடையாது. அநேக குக் கிராமங்களில், நாலுபேர் உட்கார்ந்து பேசரதுக்குத் தகுந்தாப்போலே, மண்டபமோ சாவடியோ கிடையாது. ஒவ்வொரு கிராமத்திலும், குறைந்த பட்சம் ஒரு நாடக அரங்கு, ஒரு பள்ளி, ஒரு பொது மண்டபம், இவையெல்லா மிருக்கவேண்டும் என்பது காந்திஜியின் கருத்து, ஆனுல், நம்ம கிராமங்களில், பொது மண்டபங்களாவது உண்டா ? ஆகவே இதையெல்லாம் யோசித்து பார்த்துதான், மூன்று கிராமங்களில், பொது சமுதாய மன்றங்களைக் கட்டினேம். இவைகளுக்கான செலவில் பாதியை மக்களே ஏற்றுக் கொண்டார்கள். இந்த மன்றங்களிலேதான், நூல் நிலையங்களை நடத்துருர்கள். கிராம சேவா சங்கக் கூட்டங்களும், இம் மன்றங்களில்தான் இப்போ நடக்கின்றன....

அவர்.—இந்த பத்து மாதத்திலே, ஏதோ இரண்டு மூன்று மண்டபங்களைக் கட்டினீரர்க்கும் ....உம்.... அவ்வளவுதானு ?

நான்.—இன்னும் கேளுங்கள்....உங்களுக்குத்தான் தெரியுமே அநேக கிராமங்களில் ஜலதாரை வசதியே கிடையாதென்று....ஜலதாரை வசதி இல்லாட்டா, அழுக்குத் தண்ணீர்,வீடுகளுக்கு முன்பே தேங்கி துர் நாற்றத்தைக் கிளப்புவதோடு, பல நோய்க் கிருமிகளேயும் உற்பத்தி செய்து விடுகிறது. இந்த அவல நிலைமையைப் போக்க, ஏழு கிராமங்களில், ஜலதாரை வசதிகளைச் செய்து கொடுத்தோம். 15 கிணறுகளைச் செப்பனிட்டோம். மூணு கிராமங்களிலே, குளிக்கும் அறைகள் நான்கைக் காட்டினேம். பெரிய சாலேக்கும், கிராமங்களுக்கு மிடையே, ரஸ்தாக்கள் அமைத்தோம். இன்னும்....

அவர்.—அடேயப்பா....பத்து மாதத்திலே அநேக வேலைகளை வெற்றிகரமாக நடத்தி விட்டீரே...சபாஷ்.. ....இருட்ருப்போல இருக்கு....நான் போய்ட்டுவர்ரேன் ; வணக்கம்.

அவர் என்னைப் பிரிந்த பிறகு, நான், சைக்கிளில் ஏறி, அடுத்த கிராமத்துக்குச் சென்றேன். அங்கு ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து, விவாத அரங்கு ஆரம்பமாயிற்று. அப்போது......

ஒருவர்.—கூட்டங்கள் ஆரம்பமாவதற்கு முன்னுலும், சாப்பிடுவதற்கு முனனுலும் நீங்க சாமியை என் கும்பிடுறீங்க ?

நான்.—நம்மைப் படைத்த இறைவனை, நம்மைக் காக்கும் கடவுளை, ஒவ்வொரு மனிதனும் அன்றுடம் ஒரு க்ஷணமாயினும் நினைத்து வணங்கவேண்டும். கடவுள்தான் நமக்கு உணவு அளிப்பவர், கடவுளின் அருளால்தான், நாம் துவக்கும் எக்காரியமும் வெற்றிகரமாக நடக்கும் என்பது நம் மனதில் பதிந்திருத்தல் வேண்டும்.

மற்றெருவர்.—என் சார். மத்த சர்க்காரு இலாக்காக்களெல்லாம் ஒங்களோட ஒத்துழைக்கணும்கிறது அவசியமா ?

நான்.—கட்டாயம் அவர்களுடைய ஒத்துழைப்பும் உங்களுடைய ஒத்துழைப்பும் எங்களுக்குத் தேவை.... இதில் சந்தேகமேயில்லே...ஒத்துழைப்பு கிடைக்காவிட்டால், திட்ட வேலைகளை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாது.

அவர்.—நீங்க அனேக அபிவிருத்தி வேலைகளை எங்க வட்டாரத்தில் செய்திருக்கீங்க. அவைகளில் எவை முக்கியமானவை என்று நீங்க நினைக்கிறீங்க.

நான்.—இந்த வட்டாரத்திலே, தண்ணீர் வசதிதான் மிகவும் குறைவு. ஆகையால், அது சம்பந்தமாகக் கிணறுகளைச் செப்பனிட்டும் புதுக் கிணறுகளைத் தோண்டியு மிருக்கிறேம். இந்த வேலைகள் முக்கியமானவையே. இவை தவிர சமுதாய மன்றங்களை அமைத்திருக்கிறேம்.

அவர்.—எந்த வேலே வெற்றிகரமாக நடக்காது போயிற்று ?

நான்.—கிராமங்களுக்கிடையே போக்கு வரத்து வசதியைப் பெருக்க, ரஸ்தாக்களை அமைக்கும் வேலைதான் வெற்றிகரமாக நடக்கவில்லே. ஏனென்றுல், ரஸ்தாக்களுக்குத் தேவைப்படும் துண்டு நிலம் கொடுக்க, விவசாயிகள் தயங்குகிறுர்கள். பாவம். அவர்கள்தான் என்ன செய்யமுடியும் ? விவசாயத்துக்கென, விவசாயிகள் ஒவ்வொருவருக்கும் சொந்தமான நிலப்பகுதிகளின் விஸ்தீரணம் சில செண்டுகள்தான். ஆகையால், சில செண்டு நிலமுள்ள விவசாயி, எப்படி, அச்சிறிய நிலப் பகுதியிலிருந்து, ஒரு துண்டு நிலத்தைத் தானம் செய்யமுடியும். அம்மாதிரி சூழ்நிலே இருந்த போதிலும், சில இடங்களில், நிலப்பகுதிகளைத் தானமாகப் பெற்று ரஸ்தாக்களை அமைத்திருக்கிறேம்.

மற்றெருவர்.—நீங்க நடத்துற திட்டத்தின் மூலமா, ஒரு தலைமுறை காலத்துக்குள்ளாவது, எங்க தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகிவிடும்னு நீங்க நினைக்கிறீங்களா?

நான்.—சரியான கேள்விதான் ! என் மனதில் நான் கற்பனை செய்துள்ளபடி, சமுதாய நலத் திட்டங்களும், தேசிய வளர்ச்சித் திட்டங்களும், ஒரு தலைமுறை காலத்துக்கு விக்கினமின்றி நிறைவேறி வருமேயானுல், படித்த இளைஞர்கள் யாவரும் பொது நலனுக்காக உழைத்து வருவார்கள். அரசாங்க இலாகாக்களிலுள்ள எல்லா ஊழியர்களும் தங்களுடைய கடமையை செவ்வனே உணர்ந்து, நாடு முன்னேற, ஆக்க வேலைகளில் ஈடுபடுவார்கள். ஒருவரைப்பற்றியாவது குறைகூற பிரமேயமேற்படாது. சுய தேவை பூர்த்தியாகியிருக்கும். அதாவது, நமக்குத் தேவைப்படும் உணவு, உடை முதலியவைகளை நாமே உற்பத்தி செய்திருப்போம். மேய்ச்சல் நிலம் தனியாக ஒதுக்கப்பட்டிருக்கும். ஓய்வு நேரத்தை உல்லாசமாகப் போக்க வயது வந்தவர்களுக்குச் சகல வசதிகளும்,

இளைஞர்களுக்கு விளையாட்டு மைதானங்கள் முதலிய வசதிகளும் கிட்டியிருக்கும். பண வருவாய் கொடுக்கக்கூடிய பயிர்கள் எங்கும் செழித்து வளர்ந்திருக்கும். ஒவ்வொரு கிராமத்திலும் நாடக அரங்கு, பள்ளி, சமுதாய மன்றம் முதலியன அமைக்கப்பட்டிருக்கும். பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வசதி மக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும். ஒரு குறிப்பிட்ட கட்டம் வரை, கல்வி கட்டாயமாக்கப்பட்டிருக்கும். எல்லா காரியங்களும், கூட்டுறவு அடிப்படையிலேயே, நடந்து வரும். கிராம பாதுகாவலர்கள் படை திரட்டப்பட்டிருக்கும். இப்படையினர், இரவு நேரங்களில் ஊர்காவல் செய்வார்கள். திருட்டுப்பயம் நீங்கிவிடும். அநேகமாக, ஒவ்வொரு கிராமமும், தனித் தியங்கும் குடியரசு அமைப்பாக உருவாகிவிடும். இவ்வாறாக நமது திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேறி வருவதைப் பொறுத்து, காந்திஜியின் சர்வோதயக் கொள்கைகளை, நமது கிராம மக்கள் பின்பற்றுவதும் இருக்கும்...... இன்று, இத்துடன் கூட்டத்தை முடிக்கலாமே....நேரமாகிவிட்டது....இங்கு இவ்வளவு நேரம் கூடியிருந்து, என்னைக் கௌரவித்ததற்கு, நான் உங்களுக்கு என் நன்றியைச் செலுத்துகிறேன்......வணக்கம்.

(13-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கிருஷ்ணகிரி வட்டாரத்தில்

கிருஷ்ணகிரி வட்டாரத்தில், 1955-ம் வருஷம் நவம்பரில், 4 கிணறுகள் தோண்டப்பட்டன. ஒரு கிணறு செப்பனிடப்பட்டது. கிராமக் குடி தண்ணீர் வசதிக்காக, அம் மாதத்தில் ரூ. 2,087–8–0 செலவு செய்யப்பட்டது. நான்கு விவசாய இளைஞர் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. வட்டாரத்திலுள்ள எல்லா கிராமங்களிலும் குழந்தைகள் தினம் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. " சமுதாய அபிவிருத்தி யாத்திரைக் " கோஷ்டி ஒன்று கீழ்பவானி அபிவிருத்தி திட்ட வட்டாரத்துக்குள் புறப்பட்டுச் சென்று, அங்குள்ள முக்கிய இடங்களைப் பார்வையிட்டது. இக் கோஷ்டியில் 20 கிராம மக்கள் இருந்தனர். இவர்கள், கீழ்பவானி வட்டார மக்களுடன் கலந்துபேசி, அங்கு நடைபெற்று வரும் அபிவிருத்தி வேலைகளைப்பற்றி நன்கறிந்து கொண்டனர். அங்குள்ள கிராம சேவக்குகள், கதம்ப நிகழ்ச்சி ஒன்றை நடத்தி, யாத்திரைக் கோஷ்டியினரை மகிழ்வித்தனர். வட்டாரத்திலுள்ள பிரசவ உதவி ஊழியர்கள், 143 கர்ப்பிணிகளுக்கும், 76 தாய்மார்களுக்கும் சிகிச்சை அளித்து, 25 பிரசவங்களையும் கவனித்தனர். ரெவினியு அமைச்சர், இவ் வட்டாரத்துக்கு விஜயம் செய்த போது, குப்பிச்சிப்பாரை கிராமத்திலுள்ள மக்களுக்கு, இலவசமாகத் துணி விநியோகிக்கப்பட்டது.

காவேரிப்பட்டணம் வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலுள்ள நாகரசம்பட்டி கிராமத்தில், மக்களால் ஸ்தல அபிருத்தித் திட்டத்தின்கீழ், கட்டப்பட்ட உயர்நிலைப் பள்ளி ஒன்றை, ரெவினியு அமைச்சர், 1955-ம் வருஷம் நவம்பர் மாதம் 10-ந் தேதியன்று திறந்து வைத்தார். தேசிய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சோபனூரில் கட்டப்பட்ட பள்ளி ஒன்றை, சேலம் கலெக்டர் திறந்து வைத்ததுடன் நாகரசம்பட்டியில் மேலும் ஒரு பகுதியை உயர்நிலைப் பள்ளிக்காக கட்டுவதற்காக, அஸ்திவாரக் கல்லையும் நாட்டினார். வேலம்பட்டி கிராமத்தில் ஆரம்ப பள்ளி ஒன்றை ஆரம்பிக்க, அக்கிராம மக்கள், தங்கள் பங்காக 1,000 ரூபாய் அளித்தார்கள். 14–11–55-ல், குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது. ரூபாய் 2,450 பெறுமான நிலம், 4,000 ரூபாய் மதிப்புள்ள கட்டிடங்கள் ஆகியவை, கிராம மக்களால் நன்கொடையாக அளிக்கப்பட்டன. ஒன்பது கிராமங்களில், " கிராம துப்புரவு " இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு, உரக்குப்பை கூளங்களெல்லாம் அக் கிராமங்களினின்று அகற்றப்பட்டன.

ஆத்தூர் வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலுள்ள கூடமலையிலும் பட்டுத்துறையிலும் பஞ்சாயத்துக்கள், 1955-ம் வருஷம் நவம்பரில் அமைக்கப்பட்டன. சேந்தாரப்பட்டி, புனவாசல், நல்லூர் ஆகிய கிராமங்களில், ஹரிஜனங்கள் தினம் கொண்டாடப்பட்டது. நேருஜியின் பிறந்த நாளையொட்டி, சார்வாய்புத்தூர் கிராம வாசிகள் 22 செண்டு நிலத்தை பள்ளிக்கூடம் கட்டுவதற்காகத், தானமளித்துள்ளார்கள். சார்வாய் புத்தூர் கிராமத்தில், எண்ணெய் பிழிவோர் கூட்டுறவு சங்கம் அமைக்கப்பட்டது. ஆத்தூரிலும், சேந்தாரப்பட்டியிலும் அகில இந்திய கூட்டுறவு வாரம் கொண்டாடப்பட்டது. இரு முதியோர் கல்வி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. மக்கள் மனமகிழ் மன்றம் ஒன்றும், சமூகக் கல்வி நிலையங்கள் மூன்றும், ஆரம்பிக்கப்பட்டன. 774 ரூபாய் மதிப்புள்ள கதர் உண்டியல்கள் விற்கப்பட்டன.

பெத்த நாயக்கன் பாளையம் வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலுள்ள மேற்கு ராஜபாளையம் கிராமத்தில் பல காரிய கூட்டுறவு சங்கத்தை அமைப்பதற்காக அங்கத்தினர்களாகச் சேர விரும்புகிறவர்களிடமிருந்து, சுமார், 1,400 ரூபாய் வசூலாயிற்று. சென்னை ராஜ்ய விவசாய அமைச்சர், எத்தாபூர் பல காரிய கூட்டுறவு நாணய சங்கத்தில், கடன் வசதி சம்பந்தமான அலுவலைத் துவக்கி வைத்தார். கோபாலபுரததிலும், மேட்டு உடையா பாளையத்திலும் இரு சமூகக் கல்வி நிலையங்கள் துவக்கப்பட்டன. பெத்த நாயக்கன் பாளையத்திலும், நரசிங்கபுரத்திலும் சிறுவர் பூங்காக்கள் அமைக்கப்பட்டன. பெத்த நாயக்கன்பாளையம் உயர்நிலைப்பள்ளி மாணவர்களும் அப்பாளையத்திலுள்ள சேரியில் வாழும் ஹரிஜனங்களும் ஒன்று சேர்ந்து, சேலம்-கடலூர் ரஸ்தாவிலிருந்து சேரி, வரை, ஒரு புதிய ரஸ்தாவை அமைத்தார்கள். சென்னை ராஜ்ய விவசாய அமைச்சர் நவம்பர் 11-ந் தேதியன்று இவ்வட்டாரத்தில் சுற்றுப் பிரயாணம் செய்து, தாண்டவராயபுரத்தில், ஹரிஜன காலனி ஒன்றைத் திறந்து வைத்தார். காமராஜ நகர் ஹரிஜன காலனிக்கு அவர் அஸ்திவாரகல் நாட்டினார். ஈச்சம்பட்டியில், பள்ளிக்கூடம் கட்டுவதற்கும், அவர் அஸ்திவாரக்கல் நாட்டினார்.





வெள்ளத்தாலும்,
புயலாலும்
பாதிக்கப்பட்ட மக்களுக
நிவாரண மளிக்கப்படுகிற



(மேல்)—பட்டுக்கோட்டை தாலுகாவில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்கள் குடிசைகள் கட்டிக்கொள்வதற்காக, 15 ரூபாய் முதல் 30 ரூபாய் வரை, அரசாங்க அதிகாரிகள் வழங்குகிறார்கள்.....

(கீழ்)—வேதாரணிய வட்டாரத்தில், மக்களுக்கு நோய்த் தடுப்பு சிகிச்சை அளிக்கப்படுகிறது....



(மேல்)—வேதாரணியத்தில், இஷ்ட பூர்வ சேவா ஸ்தாபனத்தார், புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, உணவு வழங்குகிறார்கள்....
(கீழ்) - ராமநாதபுரம் ஜில்லா, நொச்சிவாயல் கிராமத்தில், புயல் நிவாரண வேலைகளில் ஈடுபட்டுள்ள சமூக சேவைத் தொண்டர்கள், அக் கிராம மக்களுக்குத் துணி விநியோகம் செய்கிறார்கள்....





(மேல்)—பட்டுக்கோட்டையில், புயல் விளைவித்த கோரக் காட்சி....
(கீழ்)—வேதாரணியத்தில், புயலால் சேதமடைந்த குடிசைகள்....

ரஷ்ய தலைவர்களுக்கு மகத்தான வரவேற்பு

" உலக சமாதானம் நீடூழி வாழ்க ", " பஞ்சசீலம் நீடூழி வாழ்க ", " இந்திய-ரஷ்ய நட்புறவு நீடூழி வாழ்க", " புல்கானின்-குருஷ்சேவ் அவர்களே வருக ! வருக !" போன்ற நல்வரவு கூறும் வாசகங்கள் பல கோவை நகரின் பல முக்கிய வீதிகளிலே அமைக்கப்பட்டிருந்த, வரவேற்பு வளைவுகளில், பொறிக்கப்பட்டிருந்தன. வண்ண மலர்களாலும், மாவிலைகளாலும் அவை ஜோடிக்கப்பட்டிருந்தன. முதல் சுதந்திரதினவிழாக் கொண்டாட்டத்துக்குப் பிறகு, அதாவது 1947-ம் வருஷத்துக்கு பிறகு, 1955-ம் ஆண்டு நவம்பர் மீ 27உ தேதியன்று தான், ரஷ்யத் தலைவர்கள் ஸ்ரீ புல்கானின், ஸ்ரீ குருஷ்சேவ் முதலியோரை வரவேற்க லட்சக்கணக்கில் மக்கள் திரண்டு உணர்ச்சி வெள்ளத்தில் திளைத்திருந்ததை கோவை மாநகரம் மீண்டும் கண்டது என்று சொன்னாலும் மிகையாகாது.

சோவியத் பிரதமர் ஸ்ரீ புல்கானின், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி முதல் காரியதரிசி ஸ்ரீ குருஷ்சேவ் இவ்விரு ரஷ்யத் தலைவர்களும், 1955-ம் ஆண்டு நவம்பர் மீ 29உ காலை 10 மணிக்கு விமான மூலமாக, பெங்களூரிலிருந்து கோயம்புத்தூர் வந்து சேர்ந்தனர். விமான நிலையத்திலிருந்து சிதம்பரம் பிள்ளை பூங்காவரை ஏழு மைல் தூரத்திற்கு, மக்கள் 4 லட்சத்துக்கும் மேற்பட்டுத் திரண்டு, ரஷ்யத் தலைவர்களை வரவேற்பதற்கு, வழி நெடுக குழுமி யிருந்தார்கள். எங்குபார்த்தாலும் திருவிழாக் கோலம்தான். காரில் மராமத்து அமைச்சர் ஸ்ரீ சண்முகராஜேஸ்வர சேதுபதிக்கு இரு பக்கங்களிலும் இரு சோவியத் தலைவர்கள் அமர்ந்துகொண்டு, வழி நெடுக மக்களின் மரியாதையை ஏற்றுக் கொண்டனர். அவர்கள் விமானத்திலிருந்து வந்து அவினாசி ரோட்டில் பிரவேசித்தபோது, பட்டுத் துணிகள் போர்த்தப்பட்ட ஆறு யானைகள் அணிவகுத்துச் சென்று, சோவியத் தலைவர்களுக்கு மாலைகள் போட்டன.

சிதம்பரம் பிள்ளை பூங்காவில் பொதுக் கூட்டம்

சிதம்பரம் பிள்ளை பூங்காவுக்கு வந்ததும், குழந்தைகள் சோவியத் தலைவர்களுக்கு பூச்செண்டுகளைத் தந்தனர். கோவை நகரசபைத் தலைவர் தமிழில் தயாரிக்கப்பட்டிருந்த வரவேற்புப் பத்திரங்களை சோவியத் தலைவர்களிடம் கொடுத்தார்.

சோவியத் பிரதமர், கோவை மக்கள் அளித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துவிட்டு, " அன்புள்ள நண்பர்களே, நாங்கள் இங்கு வந்து அற்புதமான கோவை நகரின் மக்களுடன் பழகுவதற்கு எங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்ததைப் பற்றிச் சந்தோஷப் படுகிறோம். நானும், என்னுடைய சகாக்களும், ரஷ்யப் பெருமக்களின் அன்பையும் வாழ்த்தையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம் " என்று கூறினார். பிறகு ஸ்ரீ குருஷ்சேவ் பேசுகையில் " சோவியத் மக்கள் சார்பாக நாங்கள் இந்தியாவுக்கு வந்திருக்கிறோம். மற்றவர்களை அலட்சியம் செய்தோ அல்லது அவர்களுக்கு விரோதமாகவோ உங்களுடன் நாங்கள் நட்புக் கொள்ளவில்லை. நீங்கள் கம்யூனிஸ்ட் சீனாவுடன் நட்புக் கொண்டிருப்பது போலவே, நாங்களும் எல்லோருடனும் நட்புக்கொள்ள விரும்புகிறோம் " என்று குறிப்பிட்டார். பேச்சு முடிந்ததும், அவர், இந்திய சம்பிரதாயப்படி கைகுவித்து " நமஸ்தே " என்று உரத்த குரலில் கூறி வணக்கம் செய்தார். சோவியத் பிரதமர், ஹிந்தியில் "ஹிந்தி ரஷ்யா பாய் பாய்" என்று கூறியபோது, மக்கள், அச்சொற்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே, அவர் " ஹிந்தி ரஷ்யா சகோதர " என்று கூறினார். மக்கள் பலத்த கரகோஷம் செய்தனர்.

உதகைக்குப் பயணம்

வரவேற்புக்குப் பிறகு சோவியத் தலைவர்கள் பல வீதிகள் வழியாக ஊர்வலம் வந்து, உதகைக்குப் புறப்பட்டனர், வழி நெடுக 50 மைல் தூரமும் வரவேற்பு வளைவுகள், கொடிகள், தோரணங்கள் முதலியவற்றால், ரஸ்தாக்கள் அலங்கரிக்கப்பட்டிருந்தன. வழியெல்லாம், சோவியத் தலைவர்கள் இயற்கைவளம் பொருந்திய காட்சிகளைக் கண்டு களித்தனர். கமுகுமரத் தோப்புகளைத் கண்டு மெய்ம் மறந்தனர். இந்தியாவிலேயே தங்கிவிட விரும்புவதாக, ஸ்ரீ புல்கானின் பத்திரிகை நிருபர் ஒருவரிடம் கூறினார்.

வழியிலிருந்த தென்னந் தோப்பு ஒன்றில், ரஷ்யத் தலைவர்களுக்கு இளநீர் வழங்கப்பட்டது. அவர்கள், கண்ணாடி டம்ளர்களில் இளநீரை ஊற்றிச் சாப்பிடாது, அப்படியே அதை அருந்தினர். இளநீர் கொடுத்த விவசாயியின் தோட்டத்தில், அவர்கள் இரண்டு தென்னங் கன்றுகளையும் நட்டனர்.

மகத்தான வரவேற்பு

நீலகிரியின் சரித்திரத்திலேயே கண்டிராதபடி 50,000 மக்கள் திரண்டுவந்து சோவியத் தலைவர்களை உதகையில் வரவேற்றனர். உதகை நகரசபைத் தலைவர், சோவியத் தலைவர்களை வரவேற்று விசேஷமாக அலங்கரிக்கப்பட்ட மேடைக்கு அழைத்துச் சென்றார். சமாதானத்திற்கு அறிகுறியாக, உதகை கவுன்சிலர்கள், புறாக்களைப் பறக்க விட்டனர்.

காப்பித் தோட்டத்துக்கு விஜயம்

அங்குள்ள சிங்கார காப்பித் தோட்டத்திற்கும் சோவியத் தலைவர்கள் விஜயம் செய்தனர். காப்பிச் செடியை அப்போது தான் முதன்முதலாகப் பார்ப்பதாக ஸ்ரீ குருஷ்சேவ் கூறினார். தேயிலைச் செடிகளையும் சோவியத் தலைவர்கள்

பார்வையிட்டனர். ரஷ்யாவில், இயந்திரங்களால் தேயிலை பறிக்கப் படுவதாக ஸ்ரீ குருஷ்சேவ் கூறினார். இங்கு மலை வாசிகளான நீலகிரி தொதவர்கள் சார்பில் ரஷ்யத் தலைவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. நீலகிரி தொதவர்கள், தங்களுக்குரிய வண்ண உடைகளை அணிந்து வந்து, சோவியத் தலைவர்களுக்கு மாலைகள் அணிவித்து வரவேற்பளித்தனர். உதகையில் பாக்கு மரமேறிகளின் நடவடிக்கைகளை சோவியத் தலைவர்கள் நேரில் பார்த்தனர். மரமேறிகள் வெகு விரைவாக மரங்களில் ஏறி, பாக்குகளைப் பறித்தபின், வெகு வேகமாகவும் கீழே இறங்கியதைப் பார்த்த ஸ்ரீ குருஷ்சேவ், ஸ்ரீ புல்கானினை நோக்கி, "உங்களால் இம் மரத்தின்மீது ஏறமுடியுமா?" என்று கேட்டார். "நீங்கள் முதலில் வழிகாட்டினால், நான் பின்னால் வருகிறேன்" என்றார் ஸ்ரீ புல்கானின். ஸ்ரீ குருஷ்சேவ் சட்டென்று, "எல்லா விஷயங்களிலும் அமைச்சரவைத் தலைவர்தான் வழிகாட்டுவது சம்பிரதாயம். இதிலும் அம்மாதிரியே வழிகாட்டவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

சென்னை விமான நிலையத்தில் வரவேற்பு

சோவியத் தலைவர்கள், 1955-ம் ஆண்டு நவம்பர் மீ 28உ-ந் தேதி மத்தியானம் 12-15 மணிக்கு, விமானமூலமாக, சென்னை வந்து சேர்ந்தனர். சென்னை கவர்னர் ஸ்ரீ பிரகாசாவும் முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ நாடாரும் அவர்களை வரவேற்றனர். ரஷ்ய கோஷ்டியிலிருந்த துணை அமைச்சர்களுக்கும், நமது முதல் அமைச்சர் மாலைகள் அணிவித்து, வரவேற்பளித்தார். கல்வி அமைச்சர் ஸ்ரீ சி. சுப்ரமண்யத்தின் புதல்விகள் அருணாவும் சுதந்திராவும் கொடுத்த பூச்செண்டுகளை, சோவியத் தலைவர்கள் அன்புடன் ஏற்றுக் கொண்டார்கள்.

நகரெங்கும் கோலாகலக் காட்சிகள்

ரஷ்யத் தலைவர்கள் விஜயத்தை சென்னை மக்கள் ஒரு தேசியத் திருவிழாவைப் போலக் கொண்டாடினார்கள். கார்த்திகை தீபமும் சோவியத் தலைவர்கள் விஜயமும் ஒரே நாளில் ஏற்பட்டிருந்தது குறிப்பிடவேண்டிய அம்சமாகும். நகரெங்கும் தீபாலங்காரங்கள் மிகப் பிரமாதமாக இருந்தன. ரிப்பன் கட்டிடத்தின் கோபுரம் நீலவானில் ஒரு ரத்தினமணிபோல் மின்னியது. சென்டிரல் ஸ்டேஷன், தட்சிண ரயில்வே அலுவலகக் கட்டிடங்கள் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு ஜகஜ்ஜோதியாய் திகழ்ந்தன. இந்த ஆண்டில், கார்த்திகை உண்மையிலேயே லட்ச தீபமாகச் சென்னையில் கொண்டாடப்பட்டது எனலாம். கார்த்திகை தீபம் குடும்பத்தில் மாத்திர மன்னியில் உலக மக்களிடையேயும் ஒற்றுமையும் உள்ளப் பூரிப்பையும் குறிக்கிறதென்பதை, இந்த ஆண்டில் வந்த கார்த்திகை நன்கு எடுத்துக்காட்டியது.

ராஜபவனத்துக்கு விஜயம்

விமான நிலையத்தில் சோவியத் தலைவர்களை வரவேற்பதற்காகக் கூடியிருந்த பல்லாயிரக் கணக்கான மக்களின் சந்தோஷ ஆரவாரத்துக்கிடையே, சோவியத் தலைவர்கள் கவர்னருடன் விமான நிலையத்திலிருந்து ராஜ பவனத்துக்குச் சென்றனர். வழி நெடுக அலங்கரிக்கப்பட்டிருந்த வரவேற்பு வளைவுகள் சில வற்றிலிருந்து, வண்ண மலர்கள் வர்ஷிக்கப்பட்டன.

ரஷ்யத் தலைவர்கள் ராஜபவனத்தில் படி ஏறிச் சென்ற பொழுது சென்னகேசவப்பெருமாள் கோவிலைச் சேர்ந்த அர்ச்சகர்கள் மந்திரங்களை ஓதி, அவர்களை வரவேற்றனர். நாகஸ்வர கீதம் முழங்கியது. அலங்கரிக்கப்பட்ட இரு யானைகள், சோவியத் தலைவர்களுக்கு மாலைகள் சூட்டின.

அன்று மாலை, சோவியத் தலைவர்கள் பெரம்பூர் ரயில் பெட்டி உற்பத்தி சாலைக்கு விஜயம் செய்தனர். அத் தொழிற் சாலையிலுள்ள 2,000 தொழிலாளர்கள் பலத்த கரகோஷம் செய்து, அவர்களை வரவேற்றனர். அத்தொழிற் சாலையைச் சுற்றிப்பார்த்துவிட்டுத் திரும்புகையில், அவர்கள் விஜயத்தின் ஞாபகார்த்தமாக படங்கள் அடங்கிய இரு 'ஆல்பம்' கள் அவர்களிடம் கொடுக்கப்பட்டன. 'நமஸ்தே' கூறிவிட்டு, ரஷ்யத் தலைவர்கள் அங்கிருந்து கார்ப்பரேஷன் ஸ்டேடியத்துக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

ஸ்டேடியத்தில் குழந்தைகள் நிகழ்ச்சிகள்

கார்ப்பரேஷன் ஸ்டேடியம், தீபாலங்காரம், வண்ண ஆடையலங்காரம், இளைஞர் சிறுவர் சிறுமியரின் மகிழ்ச்சி ஆரவாரம் இவற்றுடன், தேவலோகமாகக்காட்சி அளித்தது. இளைஞர்களும் குழந்தைகளுமாக அரை லட்சம்பேர், படிக்கட்டுகளிலும், மத்தியிலுள்ள புல்வெளியிலுமாக, அமர்ந்திருந்து, சோவியத் தலைவர்களை வரவேற்கத் தயாராக இருந்தனர்.

சோவியத் தலைவர்கள் கார்ப்பரேஷன் ஸ்டேடியத்துக்கு வந்ததும், மக்கள் கரகோஷம் வானைப்பிளந்தது. அவர்கள், அலங்கரிக்கப்பட்டிருந்த திறந்த கார் பல்லக்கில் அரங்கைச் சுற்றிப் பவனி வந்தனர். அவர்கள் மேடை மீது அமர்ந்ததும், நகர சபைப் பள்ளி மாணவிகளின் தீப நடனத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. இந்திய தேசப் படம் மாதிரி நின்று ஒவ்வொருவரும் கையில் ஒரு தீபத்தை அசைத்து நடனமாடினர். பின்பு, தென்னிந்தியாவுக்கே உரித்தான பின்னல் கோலாட்டம் லயத்துடன் நடைபெற்றது. இதில், 21 கோஷ்டிகளைச் சேர்ந்த சிறுமிகள் கலந்துகொண்டனர். இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து, பல்வேறு உயர்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களால் யோகாசனங்கள், குத்துச்சண்டை, மல்யுத்தம், பாணக்கம்பு சுழற்றுதல் முதலியவை நடத்தப்பட்டன. ரஷ்ய கோஷ்டியின் சார்பில் சோவியத் கலாசார அமைச்சர் ஸ்ரீ என். ஏ. மிக்கெய்லாய், மக்கள் அளித்த மாபெரும் வரவேற்புக்காகவும், கதம்ப நிகழ்ச்சிகளுக்காகவும், தமது நன்றியைத் தெரிவித்துவிட்டு, "விஞ்ஞானமும் கல்வியுமின்றி புதிய வாழ்க்கையை நிர்மாணிக்க முடியாது. எனவே, உங்கள் படிப்பிலும், வேலையிலும் நீங்கள் வெற்றிபெற வாழ்த்துகிறேன்" என்றார்.

தலைவர்கள் ஊர்வலம்

ரஷ்யத் தலைவர்கள், அன்று காலையில் விமான நிலையத்திலிருந்து ராஜபவனத்துக்குச் சென்ற வழியிலும், பின்பு ராஜபவனத்திலிருந்து மவுண்டு ரோடு வழியாக பெரம்பூருக்குச் சென்ற பாதைகளிலும் திரும்பிவரும் வழிகளிலும், சென்னை மக்கள், ரஷ்யத் தலைவர்களுக்கு அளித்த வரவேற்புக் காட்சிகள் என்றும் மறக்க முடியாதவை. பல நிறக் கொடிகளும், பண்டையத் தமிழ் மரபுப்படி பசுமை மிகு மாவிலைத் தோரணங்களும் கனிகளும் இளநீர்களும், வண்ண மலர்களும் குலுங்கும் மங்கள வரவேற்பு வளைவுகளும் எங்கு பார்த்தாலும் போடப்பட்டு, சென்னை நகரமே திருவிழாக் கோலம் பூண்டு பூரித்து நின்றது.

அன்று மாலை, ரஷ்யத் தலைவர்கள் மவுண்டு ரோடு வழியாகச் சென்றபோது, தேனாம்பேட்டை தபாலாபீஸ் அருகே உயரமான கொடிகள் 12 வரிசையாக வைக்கப் பட்டிருந்ததையும் அங்குள்ள சேரிகளில் வாழ்வோர் ரோடுக்குக் குறுக்கே வரவேற்பு வளைவுகளை நிர்மாணித் திருந்ததையும், அவர்கள் பார்த்தார்கள். அந்தப் பேட்டை மக்கள் ஆரவாரத்துடன் ரஷ்யத் தலைவர்களை வரவேற்றனர். ஆயிரம்விளக்குப் பிரதேசத்தில் ரஷ்யத் தலைவர்கள், பொய்க்கால் புரவி ஆட்டத்தையும் மயில் ஆட்டத்தையும் கண்டுகளித்தனர். இங்கிருந்த வரவேற்பு வளைவுகளின் கீழ், பாண்டு வாத்தியக் கச்சேரியும் நாதஸ்வர கச்சேரியும் நடைபெற்றன. ரவுண்டாணாவில் விசேஷமாக அலங்க ரிக்கப்பட்டிருந்த மேடைமீது பல சினிமா நடிக, நடிகையர், குழுமியிருந்து, ரஷ்யத் தலைவர்கள், அவ்வழி வந்தபோது, சிறப்பான வகையில் வரவேற்பளித்தனர்.

கார்ப்பரேஷன் ஸ்டேடியத்தை விட்டுப் புறப்பட்டு, ரஷ்யத் தலைவர்கள், ஐலண்டு மைதானத்துக்கு வந்து சேர்ந்தனர். அம்மைதானம் ஜன சமுத்திரமாகக் காட்சியளித்தது. தென் இந்தியக் கோயில் மண்டபம்போல் அமைக்கப் பட்டிருந்த 22 அடி உயர அலங்கார மண்டபத்திலிருந்து ரஷ்யத் தலைவர்கள் பேச ஆரம்பித்தார்கள்.

ஐலண்டு மைதானத்தில்

சோவியத் பிரதமர் ஸ்ரீ புல்கானின் பேசுகையில், "புரா தனக் கலைக்கு சென்னை ரொம்பப் பிரசித்தி பெற்றது என்பதை நாங்கள் அறிவோம். பல நூற்றாண்டுகளாக உங்கள் ராஜ்யத்தின் சிற்பக் கலைகள் அற்புதமாக இருந்து வந்திருக்கின்றன. இவைகள் எல்லாம் உங்கள் சிற்பிகளின் ஆர்வத்தையும் திறமையையும் பிரதிபலிக்கின்றன. உங்கள் நாட்டு மக்களின் வருங்காலம் பிரகாசமாக இருக்கிறது. பொருளாதார, கலாச்சாரத் துறைகளிலும் மற்ற எல்லாத் துறைகளிலும் உங்களுக்கு "புதுவெற்றிகள் கிட்டுமென்பதில் சந்தேகமில்லை" என்று குறிப்பிட்டார்.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி முதல் செயலாளர் ஸ்ரீ குருஷ்சேவ் பேசுகையில், "எங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தில் நாங்கள் சொல்கிறோம். அதாவது, சுதந்திரம் அடைந்து விட்டால்மட்டும் போதாது. பெற்ற சுதந்திரத்தைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும். நாட்டின் தொழிலைப் பெருக்கி மக்கள் சுபிட்சமாக இருக்க உழைப்பதுதான் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் வழி என நாங்கள் நினைக்கிறோம்" என்று கூறினர்.

மாஸ்கோ வருமாறு கவர்னருக்கு அழைப்பு

அன்று இரவு, ரஷ்யத் தலைவர்களுக்கு விருந்து அளிக்கப் பட்டது. அப்போது, ஸ்ரீகுருஷ்சேவ், "ஜூன் மாதம் மாஸ்கோ வருமாறு கவர்னரை அழைப்பது குறித்து நான் ஸ்ரீ புல்கானினுடன் பேசினேன். உங்கள் முதல் அமைச்சர் ஸ்ரீ கே. காமராஜ நாடாரையும் சென்னை நகர சபை மேயரையும் ரஷ்யாவுக்கு அழைக்க நாங்கள் விரும்பு கிறோம். நீங்கள் அனைவரும் அடிக்கடி எங்கள் நாட்டுக்கு விஜயம் செய்யவேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார்.

ரஷ்யத் தலைவர்கள், 1955-ம் ஆண்டு நவம்பர் மீ 29-ந் தேதி காலை, கல்கத்தாவுக்குப் பிரயாணமானார்கள். ரஷ்யத் தலைவர்களின் விசேஷ விமானம், விமான நிலையத்திலிருந்து கிளம்பியபோது, அங்கு கூடியிருந்த மக்கள் ஆரவாரத்துடன் வழியனுப்பினார்கள். ரஷ்யத் தலைவர்கள், சென்னை அளித்த பிரமாதமான வரவேற்புக்கு நன்றி தெரிவித்து விட்டு கரங்களைக் குவித்து வணக்கம் செய்து, விடைபெற்றுக் கொண்டனர்.

எல்லோரும் சமம்

[ஸ்ரீ எஸ். பாண்டியன், கிராம நல ஊழியர்.]

"உறவுமில்லை பகையுமில்லை" என்ற இசை.

உழவர் மகிழ உலகம் புகழ உன்னதத் திட்டம்—அதை
உணர்ந்து செய்தால் உயர்வே உண்டு
உறுதி கொள்வீரே—எல்லாரும் ஒன்று சேர்வீரே (உழவர்)

உயர்ந்தோர் தாழ்ந்தோர் ஒன்றுபட்டால் இன்பம் வேறேது
ஊர்ந்து நோக்கின் உயர்ந்த திட்டம் வேறு நமக்கேது
அடைய முடியா அகில இன்பம் அடைந்து மகிழ்வீரே
அதையறிந்து புகழ்வீரே. (உழவர்)

சாந்தமூர்த்தி காந்தி நெறியில் கலந்து கொள்வீரே
சூழ்ந்து நின்ற சுதந்திரத்தில் சுகித்து வாழ்வீரே
கொடுந் துன்பம் தீர்வீரே—நல்ல இன்பம் பெருவீரே. (உழவர்)

குடித்தன ஒழுங்குமுறை வளர்ச்சி

[ஸ்ரீமதி ராஜம்மாள் பி. தேவதாஸ், அபிவிருத்தி வளர்ச்சிப் பயிற்சி டைரெக்டர் அலுவலகம்,
உணவு—விவசாய அமைச்சர் காரியாலயம், புது டில்லி.]

[குடும்பப் பொறுப்பை உணர்ந்து, பெண்கள் குடித்தனம் நடத்த வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும், உணவு, உடை, குடியிருக்குமிடம், உடல் நலம், கல்வி, வருமானம், குடும்பப் பொழுதுபோக்கு, குடும்ப உணவு முதலிய குடும்ப வாழ்க்கையின் அம்சங்களைப் பற்றியும், கிராம சேவிகைகளின் கடமைகளைப் பற்றியும், அரசினர், கிராம மாதர் நலனுக்காக குடித்தன ஒழுங்குமுறைகளை எவ்வாறு நிறைவேற்றத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்பது பற்றியும் இக் கட்டுரையாளர் தெளிவாகக் கூறியிருக்கிறார்.]

—ஆசிரியர்]

கிராம மக்கள் நல்வாழ்வு நடத்துவதற்காக, சமீப காலத்தில் நிறைவேற்றப்பட்டுவரும் பல்வேறு திட்டங்கள் கணிச அளவில் வெற்றியடைந்திருக்கின்றன. உணவு உற்பத்திப் பெருக்கமும், இதர அத்தியாவசியப் பொருள்களின் உற்பத்திப் பெருக்கமும் கணிச அளவில் உள்ளன. ஆனபோதிலும், கிராமங்களில், வாழ்க்கைத் தரம், அதற்குத் தகுந்தாற்போல் உயரவில்லை.

பல்லாண்டுக் கணக்கில், நமது கிராமங்களில், மக்கள் ஒரேவித வாழ்க்கையைத்தான் நடத்திவருகிறார்கள். வீட்டு வசதியில் மாறுதலில்லை. உணவு, உடை, சுகாதாரப் பழக்க வழக்கங்களிலும் பெருத்த மாறுதல்கள் ஏற்படவில்லை. அதேமாதிரிதான், குழந்தைகளைப் பேணி வளர்க்கும் முறையும் இருந்து வருகிறது.

நம் நாட்டிலுள்ள மக்களில் பெரும்பாலானோர், கிராமங்களில் வாழ்வதால், அவர்களுடைய வாழ்க்கைத்தரம், இந்தியாவின் முன்னேற்றத்துக்காக, உயர்ந்தாக வேண்டியது அவசியமாகும். ஆகையால், கிராம மாதரை அணுகி, அவர்கள்மூலம் கிராமங்களில் வாழும் லட்சக் கணக்கான குடும்பங்களுக்கு நல்வாழ்வு கிடைக்கச் செய்வதற்கு, குடித்தன ஒழுங்குமுறை வளர்ச்சி திட்டம் வகுக்கப்படுவது மிக அவசியமாகும். நாடு முன்னேறுவதற்கு, இது மிகவும் தேவையானது. குணம், தன்மை, திறமை முதலியவற்றில் நல்ல மாறுதல்களை உண்டாக்குவதற்கும் பழக்க வழக்கங்களிலும் அதேமாதிரியான மாறுதல்களை உண்டாக்குவதற்கும், குடும்பத்தினர் அனைவருடைய ஒத்துழைப்பும் அவசியமாகத் தேவைப்படுகிறது.

குடித்தன ஒழுங்கு முறையில் பயிற்சியும், கிராம மாதர்களுக்கு அந்த ஒழுங்கு முறைகளைச் சொல்லிக்கொடுப்பதற்குத் தகுந்த குடித்தன ஒழுங்குமுறை வளர்ச்சித்திட்ட பயிற்சியும் பெற்றுள்ள கிராம சேவிகைகளால்தான், கிராம மாதர் நலனுக்காக பாடுபட முடியும். ஆகவே, குடித்தன ஒழுங்குமுறை வளர்ச்சிப் பகுதிகள், இந்த வளர்ச்சித் திட்டத்தை அமல் செய்வதற்காக, அரசினரால் ஆரம்பிக்கப்பட்டன. பல்வேறு ராஜ்யங்களில், இம்மாதிரியாக, வளர்ச்சித்திட்ட ஸ்தாபனங்களும், மத்திய பாரத்திலும், மத்தியப் பிரதேசத்திலும், இரு துணை பிராந்திய ஸ்தாபனங்களும் ஆரம்பிப்பதற்கு அரசினர் அனுமதித்தனர். அநேக ராஜ்யங்களில், குடித்தன ஒழுங்குமுறை வளர்ச்சித்திட்ட இலாகாக்கள், அபிவிருத்திக் கமிஷனர் அல்லது விவசாய டைரெக்டரின் கீழ் ஏற்கெனவேயுள்ள வளர்ச்சித்திட்டப்பயிற்சி நிலையங்களுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சென்னை ராஜ்யத்தில், காந்தி கிராமத்திலும் கல்லுப்பட்டியிலும், இந்த இலாகாக்கள் இயங்கி வருகின்றன.

இந்த வளர்ச்சித்திட்டப் பகுதிகளுக்குத் தேவைப்படும் பிரதம ஆசிரியைகள், ராஜ்ய அரசாங்கத்தினரால் நேமகம் செய்யப்பட்டவர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இந்தியா, ஹவாய், ஜப்பான் முதலிய நாடுகளில், இவர்கள், 1954, நவம்பரிலிருந்து 1955, ஜூலை வரை, தீவிரப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். ராஜ்யங்களில் தேர்ந்தெடுக்கப்படும் 20 கிராம சேவிகைகளுக்கு, ஒரு ஆண்டுக்குப் பயிற்சி அளிக்கும் பொறுப்பை ஒவ்வொரு பிரதம ஆசிரியையும் ஏற்றுள்ளார். பிரதம ஆசிரியையுடன் இரு உதவி அதிகாரிகளும் சேர்ந்து, ஒரு வருடகால பயிற்சித் திட்டத்தை அமல் செய்வார்கள்.

ஒரு வருட காலப் பயிற்சி முடிவுற்றதும் கிராம சேவிகைகள், ராஜ்யங்களிலுள்ள தீவிர அபிவிருத்தித்திட்ட

வட்டாரங்களில் சேவை செய்ய அனுப்பப்படுவார்கள். ஒவ்வொரு வட்டாரத்திலும், இரு கிராம சேவிகைகள் சேவை புரிவதற்கான ஏற்பாட்டைச் செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள், 5,000 கிராம சேவிகைகளுக்குப் பயிற்சி அளிக்கப்படும். அத் திட்ட வியாபகத்திலிருக்கும் 2,500 தீவிர அபிவிருத்தி வட்டாரங்களில், வட்டாரத்திற்கு இரண்டு சேவிகைகள் வீதம், கிராம சேவிகைகள் பணிபுரிந்து வருவார்கள்.

கிராம சேவிகைகளின் பயிற்சியை ஒருங்கு படுத்தித் திட்டமிட்ட வகையில் நடத்த, இந்திய அரசாங்கத்தினர், பிரதம குடும்பப் பொருளாதார அதிகாரியை நியமித்திருக்கிறார்கள். இந்த அதிகாரி, குடும்பப் பொருளாதாரத் துணை அதிகாரியின் உதவியுடன், விவசாய வளர்ச்சித் திட்டக் கமிஷனர் கீழ், அலுவல்களைக் கவனித்து வருவார்.

குடித்தன ஒழுங்குமுறையை குடித்தனப் பாங்கு அல்லது குடும்பப் பொருளாதாரத்துறை என்றும் சொல்லலாம். உடல் நலம், உள்ள மகிழ்வு, குடும்பத்தினரின் நலன் முதலியவற்றிற்காக அன்றாடம் குடும்பத் தாய்மார்களும் குடித்தனப் பெண்களும் புரிந்துவரும் சகல வேலைகளும், இத்துறையில் அடங்கும். பல்லாண்டுக் கணக்கில், கிராமங்களிலுள்ள குடும்பத் தாய்மார்களும் குடித்தனப் பெண்களும், தங்களால் இயன்றவரை, தங்கள் குடும்பங்களை நன்கு கவனித்துவந்து, அதன் மூலம் இந்திய குடும்பம், சமூகத்தில் நிரந்தர அம்சமாக விளங்கச் செய்திருக்கிறார்கள். குடித்தன ஒழுங்குமுறை வளர்ச்சித் திட்டம் மூலம், தற்காலக் குடித்தன வாழ்க்கைக்கேற்ற நவீன வசதிகளும், வழிமுறைகளும் பரவும்போது, தங்கள் குடும்பத்தினரின் நலனுக்காகவும், முக்கியமாக, பருவ காலப் பிரஜைகளாகத் திகழப்போகும் தங்களுடைய குழந்தைகள் நலனுக்காகவும், மேற்கொண்டும் பல வசதிகளை அளித்து, அதன் மூலம், நம் நாடு நவ இந்தியாவாக உருவாவதற்குத் தங்களுடைய பயன்தரும் பங்காக, நம் கிராமங்களில் வாழும் குடும்பத் தாய்மார்களும், குடித்தனப் பெண்களும் அளித்துவருவார்கள்.

குடித்தன ஒழுங்குமுறை, குடித்தன வாழ்வைச் சிறப்பிக்கச் செய்வதற்கான கல்வி அறிவைப் புகட்டுவதாகும். ஆகவே, உணவு, உடை, குடியிருக்குமிடம், உடல் நலம், கல்வி, பொழுதுபோக்கு, வருவாய், குடும்ப உறவு முதலிய வாழ்க்கை அம்சங்கள் பலவற்றை, குடித்தன ஒழுங்குமுறை வளர்ச்சித் திட்டம் கவனித்துவரும். இந்த வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயிற்சியும் அனுபவமும் பெற்றுள்ள கிராம சேவிகை, கிராமத்திலேயே வாழ்ந்து, சேவை செய்வதால், கிராமத்திலுள்ள மற்ற மாதர்களுக்கு வழிகாட்டியாக விளங்கிவருவார். குடித்தன வாழ்க்கை மேலும் மங்களகரமாகவும் உள்ளத்துக்கு மகிழ்ச்சியைத் தரத்தக்கதாகவும் விளங்கச் செய்ய, கிராம மாதர்கள் முயற்சிப்பதற்காக, அவர்களுக்கு உற்சாகமூட்டும் வழிகாட்டியாக, கிராம சேவிகை விளங்குவார். குடித்தனம், பண்ணை, சமூகம் ஆகியவை சம்பந்தமாக, கிராம மாதர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டிய பொறுப்புகளை, அவர்களே நன்குணர்ந்துகொள்ள, கிராம சேவிகை வழிகாட்டுவார். கிராம மாதர்களின் நண்பராகவும், வழிகாட்டியாகவும் கிராம சேவிகை விளங்குவதுடன், கிராம மாதர்களுடைய பிரச்னைகள் யாவை என்பதைக் கண்டுபிடித்து, அவைகளை தீர்ப்பதற்குரிய வழிமுறைகளையும் கிராம மாதருக்கு எடுத்துச் சொல்வதுண்டு. இவ்வாறுகப் பாடுபட்டு, அவர் கிராமவாசிகளின் நம்பிக்கையைப் பெற்று, குடித்தனப் பாங்கு பற்றிய சகல சமாச்சாரங்களிலும் நல்ல ஆலோசனைகளை அளிக்கக்கூடியவராகிவிடுகிறார்.

பொருளாதார அறிஞர்கள், எஞ்சினீயர்கள், கல்வி அறிஞர்கள், கட்டிடச் சிற்பிகள், சமூக அறிஞர்கள், குடும்பப் பொருளாதார அறிஞர்கள் முதலியோர் அடங்கிய கிராம வீட்டு வசதி ஆலோசனைக் கமிட்டி ஒன்றை இந்திய அரசாங்கத்தினர் அமைத்திருக்கிறார்கள். இக் கமிட்டியினர், வளர்ச்சித்திட்ட பயிற்சி நிலையங்கள் உள்ள ஒவ்வொரு ஊரிலும், கிராம சேவிகைப் பயிற்சியாளர்களுக்கு எந்தவிதமான வீடுகளைக் கட்டித் தரவேண்டும் என்பதுபற்றி ஆராய்ந்து, அக்கட்டிட விவரங்கள் பற்றியோசனை கூறியிருக்கிறார்கள். இந்த வீடுகள் சிறந்த அமைப்புடன் இருக்கின்றன. கிராமங்களில், இவை "மாதிரி" வீடுகளாக அமைந்து வருகின்றன. ஸ்தல மக்களின் பண்பாடு, சௌகரியம் ஆகியவற்றிற்குத் தகுந்தாற்போல் இந்த வீடுகளின் அமைப்பு இருப்பதுடன், ஸ்தலத்தில் கிடைக்கும் கட்டுமான சாமான்களைக்கொண்டே இவ் வீடுகளைக் கட்டவும் முயற்சிக்கப்படுகிறது.

பாட திட்டங்கள்

குடித்தனப் பாங்கு பற்றி சாஸ்திரீய ரீதியில் கிடைத்துள்ள விஷய ஞானம், அன்றாட வாழ்க்கையில், அந்த அறிவை அநுபவரீதியில் பயன்படுத்துவதற்கான வழிமுறை ஆகியவற்றின் அடிப்படையிலே, கிராம சேவிகைகளுக் குரிய குடித்தன ஒழுங்குமுறை பயிற்சித் திட்டத்தின் பாடங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. கிராமங்களிலுள்ள குடும்பங்களுக்கு வசதிகளை அதிகரிப்பது சம்பந்தமாக கிராம சேவிகைகள் அன்றாடம் ஆராய்ந்து, அந்த ஆராய்ச்சிகளின் முடிவுகளைப் பழக்க வழக்கத்துக்குச் கொண்டுவருவதற்குரிய சோதனைக் கூடமாக குடித்தன ஒழுங்குமுறை வளர்ச்சித் திட்ட ஸ்தாபனங்கள் விளங்குகின்றன. ஆகவே, பயிற்சிபெற்ற கிராம சேவிகை, வெறுமனே கிராம மாதர்களுடன் பேசியோ அல்லது அவர்களுக்குப் போதித்தோ, கிராம மாதர்கள் மனதைக் கவராது தாம், கிராமத்தில் வாழ்வதன் மூலம் அதாவது தமது வாழ்க்கையை கிராமத்தில் சிறப்பாக நடத்துவதன் மூலம்—கிராம மாதர்கள் மனதை நன்கு கவர்ந்து விடுகிறார்கள்.

சுருக்கமாகக் கூறவேண்டுமானால், கிராம சேவிகைக்கு அளிக்கப்படும் பயிற்சி, கீழ்க்கண்ட குறிக்கோள்களை உடையது :—

1. கிராம நல ஊழியர் பார்க்கவேண்டிய அலுவல்களைக் கவனிப்பதற்குகந்த தொழில்துறைப் பயிற்சியையும், கல்வி அறிவையும் கிராம சேவிகை பெறும்படி செய்ய வேண்டும்.

2. குடித்தன ஒழுங்குமுறை வளர்ச்சித் திட்ட ஸ்தாபனங்களில் வாழ்க்கை நடத்தப்படுவதுபோல், ஜனநாயக தத்துவ அடிப்படையில், குடும்பத்தினர் கூட்டாகச் சேர்ந்து வாழ்வது சாலவும் உகந்தது என்பதை கிராம சேவிகை அறிந்துகொள்ளச் செய்யவேண்டும்.

3. கிராமிய வாழ்க்கையின் கட்டுக்கோப்பைக் கிராம சேவிகை உணர்வதற்கும், கிராமவாசிகளின் பண்பு, தேவைகள், அபிலாஷைகள், பிரச்னைகள் ஆகியவற்றைப் பற்றி நன்கு தெரிந்துகொள்வதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

4 உணவு, உடை, இருக்குமிடம், சேய்நலம், பணப் பொறுப்பு, கைநுட்பவேலை, கலைப் பண்பு ஆகியவை சம்பந்தமாக, கிராம மாதர்கள் மேற்கொண்டும் சிறந்த பழக்க வழக்கங்களை அனுசரிப்பதற்காக, அவர்களுக்கு வழிகாட்டுவதற்குகந்த அறிவும் ஆக்கத் திறனும் கிராம சேவிகை பெறும்படி செய்யவேண்டும்.

5. குடித்தனப் பாங்கு பற்றிய சாஸ்திரீய ரீதியான விஷய ஞானத்தை, கிராம மாதர்களிடையே, பயன்தரத் தக்க வழியில் பரப்புவதற்குகந்தவாறு குடித்தன ஒழுங்கு முறை வளர்ச்சித் துறையில் கிராம சேவிகை நன்கு தேர்ச்சிப்பெறச் செய்யவேண்டும்.

6. கிராமிய பிரச்னைகளைப்பற்றி ஆராய்வதற்கு, கிராம சேவிகை மனதிலே உற்சாகம் தோன்றும்படி செய்ய வேண்டும்.

7. தேசிய வளர்ச்சித் திட்டம்போன்ற அபிவிருத்தித் திட்டங்கள், நம் நாட்டில், நன்கு நிறைவேறத் தாம் என்ன செய்யவேண்டும், தமது பொறுப்புகள் யாவை என்பவற்றை, கிராம சேவிகை நன்கு உணர்ந்து கொள்ளவும், ஏற்பாடு செய்யவேண்டும்.

குழந்தைகளின் கலை உணர்ச்சியை வெளிப்படுத்த முயற்சிக்கப்படுகிறது.

காந்தி ராஜ்யம்

("பிரேம பாசத்தால் வலையில் வீழ்ந்தே அறியாதவனன்றோ" என்ற இசை)

அபிவிருத்தித் திட்டத்தை அலட்சியம் செய்து
அதன் பலனை இழக்காதே—நண்பா
பலனை இழக்காதே.
ஆராய்ச்சி செய்து அறிஞர்கள் வகுத்திட்ட அற்புதத்
திட்டத்தின் பலனைக் கேளீர். (அபி)

உழவுத் தொழிலுக்கே உதவிடுவோம்—எல்லா
உற்பத்திப் பொருள்களைப் பெருக்கிடுவோம்
பழமுதிர்ச்சாலை யெங்கும் அமைத்திடுவோம்—நல்ல
பலன் தரும் சங்கங்கள் நிறுவிடுவோம். (அபி)

கல்வி நிலையங்கள் அமைத்திடுவோம்—நல்ல
கால் நடைகளை எங்கும் பெருக்கிடுவோம்
பற்பல நல் வேலை செய்திடுவோம்—எல்லா
பாமர மக்களும் பயன் பெறவே (அபி)

உத்தமர் காந்தி நித்தமும் நினைந்த
உன்னத ராஜ்யம் அமைத்திடவே
சத்திய நெறியில் சகலரும் உணர்ந்து
சமரசம் பருகிட உழைத்திடுவோம். (அபி)

"தன்னலமற்ற சேவை"

("இளம் பெண்ணின் மனசைத் தொட்டு போறவரே" என்ற இசை)

இந்த மண்ணில் உதித்த சுத்த வீரர்களே ! நல்ல
எண்ணத்தால் சேவை செய்ய வாங்க
நமதண்ணல் மகாத்மா சொன்ன நன்னெறியில்—நன்றாய்
அன்போடுழைத்திடவே வாங்க.
என்றும் எண்ணி ஏங்கியே இரவு வேளையும்
ஏக்கம் கொள்கிறானே—ஏழை
பார்க்கப் பரிதாபமே
உண்டு ஓர் திட்டம் உழைப்பாளி ஓங்கவே
கூடிக் களிப்படைவீர்—கஷ்டங்கள் தீர்ந்திடவே. (இந்த)

பஞ்சம் பறந்திடவே பாரோர் நம்மை போற்றிடவே
நெஞ்சம் உருகிடுவீர்—நமது நேரு நெறி நின்றிடுவீர்
ஏழைகள் வாழ்ந்திடவே எங்கும் இன்பம் பொங்கிட
நாளைத் திரண்டிடுவீர்—தேச(த்)
திட்டத்தில் தியாகம் செய்ய. (இந்த)

[ஸ்ரீ எஸ். பாண்டியன், கிராம நல ஊழியர்,
ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி]

பாட போதனை

குடித்தன ஒழுங்குமுறை வளர்ச்சித்திட்ட பயிற்சியின் கீழ், குடும்ப உணவு வகைகள், குடும்பபோஷாக்கு, உடை, தாய், சேய்நலம், வீட்டுவசதி, குடித்தன நிர்வாகம், உடல் நலம், சுகாதாரம், கைநுட்ப வேலைத் தொழில்கள், குடிசைத் தொழில்கள், விவசாயம் காய்கறித் தோட்டம், பால்பண்ணை, கோழி வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, கூட்டுறவு, கிராமக் குடும்ப நலன், கிராமிய சமூக அறிவு, உளநூல், சமுதாய மன மகிழ்வு, குடித்தன ஒழுங்குமுறை வளர்ச்சித்திட்ட வழிகள் முதலியவை போதிக்கப்படும். இப் பாட போதனைகள் அந்தந்த வட்டாரத்தில் நடைபெறும் அன்றாட வாழ்க்கைக்குத் தகுந்தாற்போல் திருத்தப்பட்டு நடத்தப்படும். உணவைப் பெருக்குவது எப்படி, எந்தெந்த உணவு வகைகளை உண்பது, எந்தெந்த உணவு வகைகளைப் பக்குவப்படுத்தி பதனப்படுத்துவது, வீட்டுவசதியை எவ்வாறுகச் சீர் செய்துகொள்வது, அன்றாடப் பொழுதை எவ்வாறு, பயன்தரத் தக்க விதத்தில் கழிப்பது, குடும்ப வருவாயை எப்படி உயர்த்துவது, உடைகளை எப்படித் தயாரித்துக் கொள்வது, அவைகளை எவ்வாறு சீரிய வகையில் உபயோகப்படுத்துவது, குழந்தைகளை எப்படிப் பாமரிப்பது, பண்ணை நிர்வாகத்தை எப்படி நடத்துவது, ஊராருடன் எந்த வகையில் பழகுவது . . . இம்மாதிரியான பல விஷயங்களை அறிந்து, குடித்தனத்தை நன்கு நடத்த கிராம மாதர்களுக்கு வசதி அளிக்க, வளர்ச்சித் திட்டப் பயிற்சி ஸ்தாபனங்கள் தகுந்த வழிமுறைகளை வகுக்கும்.

இந்த ஸ்தாபனங்கள் தங்களுடைய கட்டிடங்களை அழகாக வைத்துக்கொள்வதுடன், சுற்றுப்புறங்களும் துப்புரவாக இருக்கத் தகுந்த முயற்சிகளைச் செய்துவரும். காய்கறித் தோட்டம், கோழி வளர்ப்புப் பண்ணை, தேனீக் கூண்டுகள், 2 அல்லது 3 பசு மாடுகள், கனிமரத் தோப்பு முதலியவை வளர்ச்சித் திட்ட ஸ்தாபனம் நன்கு இயங்குவதற்கு அத்தியாவசியமானவை. ஸ்தாபனமிருக்கும் ஸ்தலத்திலுள்ள மாதர்கள், குழந்தைகள், இளைஞர்கள் முதலானோர்களுக்கு, இந்த ஸ்தாபனம், பல விஷயங்களில், வழி காட்டும் ஸ்தாபனமாக விளங்கும். இந்த ஸ்தாபனத்தார், வளர்ச்சி பயிற்சித் திட்டத்தை நிறைவேற்றி வருவதுடன், அக்கம்பக்கங்களில் உள்ள கிராமங்களில், தொண்டு புரிந்து வருவார்கள்.

வளர்ச்சித் திட்ட பிரதம ஆசிரியைகளுக்கும், துணை ஆசிரியைகளுக்கும் மறுபாட போதனை நடத்தவும், கைத் தொழில் பயிற்சிக் கூடங்களை ஆரம்பித்து நடத்தவும், பிராந்திய அடிப்படையில், ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. குடித்தன ஒழுங்குமுறை வளர்ச்சித் திட்ட ஸ்தாபனங்களின் உபயோகத்துக்காக, இந்திய கிராமங்களின் தேவைகளை அனுசரித்து, பிரசுரங்களும், போதிப்பதற்குத் தேவைப் படும் உபகரணங்களும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

சேரிவாழ் மக்கள் மாண்பு

[வட்டார அபிவிருத்தி அதிகாரி, கும்பகோணம் (தெற்கு)]

தஞ்சை மாவட்டத்தில் விவசாயத்தையே முக்கிய நோக்கமாகக் கொண்டு தஞ்சை ஜில்லா திட்டம் என்ற திட்டமாகக் கடந்த 1½ வருடங்களாக நடந்து வருகின்றது. இதனை அகில இந்திய முறைக்குட்படுத்தி தேசிய வளர்ச்சித் திட்டமாக மாற்றி அமைக்கும் பொருட்டு, சமூகக் கல்வி அமைப்பாளர், கூட்டுறவு சங்கத் தணிக்கையாளர், கிராமத் தொண்டர்கள் பயிற்சியளிக்கப்பட்டு கடந்த நான்கு மாதங்களாகத் தொண்டாற்றிவருகின்றனர். இவர்கள் மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டனர். மக்களோடு இரண்டறக் கலந்து திருப்பணி புரியும் காட்சி பாராட்டத் தக்கதாக இருக்கிறது. நான்கு மாதத்தில் மக்களிடையே முன்னேற வேண்டும் என்ற உணர்வைப் பெருக்கிவிட்டனர்; பொறுப்புணர்ச்சியை மூட்டிவிட்டனர். நிற்க,

கும்பகோணத்தையடுத்த சுவாமிமலைச் சேரியில் சமூகக் கல்வி அமைப்பாளர் திரு. R. M. L. பாண்டியன், M.A. அவர்களது முயற்சியால் ஒரு மாலைப் பள்ளியும் சமூகக் கல்வி நிலையமும் அமைக்கப்பட்டு நடைபெறுகிறது. இவற்றைக் கண்காணிக்கும்பொருட்டு சமூகக் கல்வி அமைப்பாளரும், கிராமத் தொண்டர் திரு. N. K. வீராசாமியும் ஹரிஜனங்களுடன் மிகவும் நெருங்கிப் பழகிவந்தனர். சமூகக் கல்வி நிலைய நிர்வாகி திரு. P. அந்தோணிமுத்து அவர்களும் சேரிவாலிபர்களும் கிராமத் தொண்டருக்கு நெருங்கிய நண்பர்களாயினர். பின்னர் சேரிக்குள்ள குடி தண்ணீர் குறைபாடு, சுகாதாரக்குறைபாடு, குடி இருப்புக் குறைபாடு முதலியவற்றைப் போக்குவதற்காகக் கூடிப் பேசும் பொருட்டு, ஓர் பொதுக் கூட்டம் சேரியில் கூட்டப்பட்டிருந்தது. சமூகக் கல்வி அமைப்பாளரும் கூட்டுறவு சங்கத் தணிக்கையாளரும், நானும் அச் சேரிக்குச் சென்று பார்வை இட்டோம். கிராமத் தொண்டர் மூலமாகவும் பெண்கள் மூலமாகவும் அச் சேரி மக்கள் கள்ளச் சாராயம் குடிக்கும் பழக்கத்தால் தம் பணத்தை யெல்லாம் அழிப்பதாகவும் அதன் காரணமாக அச்சேரி தாழ்வடைந்து வருவதாகவும் அறிந்து சமூகக் கல்வி அமைப்பாளரும் நானும் குடியின் தீமைகளை பற்றி விரிவாக எடுத்துரைத்தோம். அக் கூட்டத்திலேயே கூட இரண்டொருவர் குடி போதையில் இருப்பதாக அறிந்தோம். உள்ளூர் வாசியான திரு. விஸ்வநாதம் அவர்களும் எம்மோடு ஒத்துழைத்தார். சேரி மக்கள் எங்களுக்கு வழங்கிய சோடா, வெற்றிலை பாக்கு முதலிய உபசாரங்களைக்கூட நாங்கள் பெற மறுத்துவிட்டோம். நீவிர் எல்லோரும் ஒன்று பட்டு கள்ளச் சாராயக் குடியை ஒழித்துச் கட்டிய போதுதான் நாங்கள் உங்கள் விருந்தாளிகள் என்று கூறிவிட்டோம். தங்கள் குல தேவதையாகிய காளிதேவியின் ஆலயத்தின் முன் கிருஷ்ண ஜயந்தி யன்று சேரிமக்கள் எல்லோரும் நீராடிப்பக்தியோடு வந்து "தாமும் குடிப்பதில்லை; குடித்து விட்டு வந்தவரைச் சேரிக்குள் அனுமதிப்பதில்லை; போலீசார் கையில் ஒப்படைப்பது" என்று தீர்மானித்து சத்தியம் செய்து விடுவதாகக் கூறினர்.

மாலைப் பள்ளி ஆசிரியரும், மாணவர்களும் சமூகக் கல்வி அங்கத்தினர்களும், திரு. விஸ்வநாதம் அவர்களும், திரு. நடராசன் அவர்களும் கிராமத் தொண்டர்களுடன் மிகவும் ஒத்துழைத்த காரணத்தால், சேரி மக்களை கிராமத் தொண்டர் ஒருமுகப் படுத்தி பொறுப்புணர்ச்சியைப் புகுத்த முடிந்தது. "கிருஷ்ண ஜயந்தி" யன்று எல்லோரும் ஒருமிக்க குல தேவதைமுன், "குடிப்பதில்லை" என சத்தியம் செய்தனர். ஏறத்தாழ 250 பேர் குளித்துவிட்டு, சந்தனம் பூசி, மேள வாத்தியம் முழங்க, ஊர்வலமாக வந்து, காளி தேவதையின் முன் "முக்காலும் சத்தியம். சாராயம் குடிப்பதில்லை. குடிப்பவரைப் பிடித்துக் கொடுப்பதே என் கடன். மாட்டிறைச்சி யுண்பதில்லை" என்று பயபக்தியுடன் சத்தியம் செய்த காட்சி சுற்று வட்டாரத்தில் ஒரு பரப்பரப்பை யுண்டாக்கியது.

சமூகக்கல்வி நிலையமும், மாலைப்பள்ளியும் செம்மையாக நடைபெற்றுவந்த காரணத்தாலும், சமூகக்கல்வி அமைப்பாளர், கிராமத்தொண்டர் முதலிய தொண்டர்களின் தொடர்பாலும் ஏனையோரைப்போல நாமும் முன்னேறவேண்டும் என்ற உணர்ச்சி சேரி ஹரிஜனங்களுக்கு உண்டாகியது. அதனை நான் சமூகக்கல்வி அமைப்பாளர் துணை கொண்டும், பாரத்சேவா சமாஜ ஊழியர் திரு. விஸ்வநாதன், மற்றும் திரு. நடேசன் அவர்கள் துணைக்கொண்டும் ஹரிஜன மக்களின் இவ்வாக்க உணர்ச்சியை நல்ல உருவாக்கிப் பெருக்கினேன். ஆணும் பெண்ணும் அல்லும் பகலும் உழைக்கும் பாட்டாளி மக்கள் தங்கள் ஊதியத்தைக் கள்ளச் சாராயம் குடிப்பதற்குச் செலவிடுதலை நிறுத்தியதால், அவர்களிடம் தங்கள் தினசரி வாழ்க்கைச் செலவு போக, வாரத்திற்குச் சராசரி ரூ. 3–8–0 வீதம் மிச்சம் வந்துவிட்டது. அவர்கள் உடம்பிலும் ஒரு தனி ஒளி வீசிற்று; அன்றாடு நீராடி நீறுபூசி நித்தியனை வணங்கியே தங்கள் வேலைகளுக்குப் போவாராயினர்.

திட்டத்தின் விபரம்

மேற்கண்ட சேரியில் ஒரு வீட்டிற்கு அல்லது ஒரு ஆள் ஒன்று 1 ரூபாய் வீதம் 15 நாளைக்கோ அல்லது ஒரு வாரத்திற்கோ கட்டணம் செலுத்தவேண்டும் என்று சொன்னதன்பேரில் 33 பேர் பங்கு எடுத்துக்கொண்டனர். இந்த 33 பேரில் 5 பேர் அடங்கிய பஞ்சாயத்து ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

பஞ்சாயத்தின் பொறுப்புகள்

1. கட்டணத்தை வசூலிப்பது.

2. சீட்டுக் குலுக்கும் பொறுப்பை ஏற்று நடத்துவது.

3. சீட்டு விழுந்த நபருக்குப் பொருள் வாங்கக்கூட யிருந்து உதவி புரிவது.

4. ஷெ வாங்கிய பொருளை சேதம் அடையாமலும், அவை களை நல்ல முறையிலும் பாதுகாத்து வருவது.

பண்டமாற்று கூட்டுச்சீட்டின் திட்டம்

1. 33 அங்கத்தினர் ஒவ்வொருவரும் 15 நாட்களுக்கு ஒரு தடவை ஒரு ரூபாய் கட்டவேண்டும்.

2. வருமானத்திற்கு தக்கமுறையில் சீட்டுக்குலுக்கும் காலம் ஒரு வாரமாகவோ அல்லது 15 தினங்களுக்கு ஒரு முறையோ அங்கத்தினர்களின் சம்மதத்தின் பேரில் மாற்றிக்கொடுக்கலாம்.

3. சீட்டு விழுந்த நபருக்குப் பணம் கையில் கொடுப்பதில்லை. பணத்திற்குப் பால்மாடு வாங்கிக் கொடுக்கப்படும். அங்கத்தினர்கள் இன்னும் அதிகப்பணம் இத்துடன் சேர்த்து வாங்க பிரியப்பட்டாலும் வாங்கிக்கொள்ளலாம். அப்படி அதிகப்பணம் போட்டபோதிலும் அது பஞ்சாயத்திற்கு சொந்தமானதுதான்.

4. சீட்டு விழுந்த நபர் 3 தினங்களுக்கு மேலும் ஒரு வார காலத்திற்குள்ளும் பொருளை வாங்கிவிடவேண்டும்.

5. 33 சீட்டுகள் முடியும்வரை அந்த மாடு சீட்டுவிழுந்தவர் பராமரிப்பில் இருந்தாலும் அது பஞ்சாயத்திற்குச் சொந்தமானதே.

6. அங்கத்தினர் யாராவது பணம் கட்டத் தவறினால் அல்லது மத்தியில் நின்றுவிட்டால் அவர்கட்டிய தொகையை எவ்வாறு அவருக்குக் கொடுப்பதோ, இல்லையோ என்பதுபற்றி சீட்டுத் தவணைகள் முடிந்தபின் அங்கத்தினர்களின் யோசனைப்படி முடிவு கட்டப்படும்.

7. சீட்டு விழுந்த நபர் கட்டணத்தை கட்டத் தவறினால் அவருக்கு வாங்கிக் கொடுத்த பொருள் பஞ்சாயத்தாரால் பராமரிக்கப்பட்டு உரிய உறுப்பினர் மறுபடியும் அடுத்த தவணைக்குள் பணம் கட்டத் தவறினால், அடுத்த சீட்டு விழும் நபருக்கு கொடுக்கப்படும்.

8. சீட்டு விழுந்த நபர் வாங்கும் பொருளைப் பஞ்சாயத்து போக்கியமாக அனுபவிப்பது என்று பஞ்சாயத்திற்கு எழுதிக்கொடுக்கவேண்டும்.

9. இடைக் காலத்தில் வாங்கிக் கொடுத்த பொருள் இயற்கையாகச் சேதமடைந்தால் பொருளின் நஷ்டத்தை 33 அங்கத்தினரும் பகிர்ந்து கொள்ளவேண்டும்.

10. அங்கத்தினர்கள் பஞ்சாயத்தில் ஆமோதித்த ஒருவரை அழைத்துக்கொண்டு போய்த்தான் பால் மாடு வாங்கவேண்டும்.

திட்டத்தின் நோக்கம்

குறைந்த விலையில் தன் முயற்சியால் வாங்கப்பட்ட இப் பசுவை அபிவிருத்தி திட்டத்தின் துணை கால்நடை வைத்திய அதிகாரி உதவிகொண்டு செயற்கை முறையிலோ அல்லது நல்ல ஜாதி காளைகளைக் கொண்டோ கருத்தரிக்கச்செய்து கால்நடைகளை அபிவிருத்தி செய்து கொடுப்பதன்மூலம் ஒவ்வொரு ஹரிஜன குடும்பமும் வளம்பட வழி வகுக்கப்படுகிறது.

இச் சேரிக்குள் கிராமத்திருப்பணியாளர்கள் புகுந்து வேலை செய்யத் தொடங்கி 2¼ மாதங்கள் ஆகின்றன. இப்பொழுது 5 பால் மாடுகள் 5 குடும்பங்களுக்கு வாங்கப்பட்டிருக்கின்றன.

இத்திட்டம் தரும் வெளிப்படையான நல்ல பயனைக் கண்ட இதர ஊர் தாழ்த்தப்பட்ட மக்களும் இத்திட்டத்தினையே கையாள முன் வந்துள்ளனர். வலையப்பேட்டை கொரநாட்டுக் கருப்பூர் முதலிய சேரி மக்கள் இத்திட்டத்தைப் பின்பற்ற முன்வருகின்றனர். கிராமத்திருப்பணித்தொண்டர்கள் ஹரிஜன முன்னேற்றப் பணியினையே தம் முதல் வேலையாகக்கொண்டு முயலுகின்றனர்.

மாயூரம் (மேற்கு) வட்டாரத்தில்

ஆனதாண்டவபுரம் கிராம ரஸ்தா வேலை, பூர்த்தியாகி விட்டது. இரு முதியோர் கல்வி நிலையங்கள், 2 சமுதாய மனமகிழ் மன்றங்கள், 3 சமூக சேவை சங்கங்கள், ஆகியவை, 1955, நவம்பரில் ஆரம்பிக்கப்பட்டன. அம் மாதத்தில் நடைபெற்ற பல்வேறு அபிவிருத்தி வேலைகளுக்கான செலவு மதிப்பீடு ரூ. 24,418-6-9. அம்மாதத்தில் விற்கப்பட்ட கதர் துணியின் மதிப்பு ரூ. 1,357-9-3.

* * * * *

சீர்காழி வட்டாரத்தில்

ஏற்கெனவே, திருமுல்லைவாசலில் ஆரம்பிக்கப்பட்டிருந்த பள்ளிக்கூட கட்டிட வேலைகள், 1955, நவம்பரில் பூர்த்தியாகிவிட்டன. புதுத்துறை கிராமத்தில், கிணறு வேலை பூர்த்தியாகியிருக்கிறது, இரு சமூகக் கல்வி நிலையங்கள், ஒரு இளைஞர் சங்கம், இருமுதியோர் பள்ளிகள் ஆகியவை ஆரம்பிக்கப்பட்டன. திருமுல்லைவாசல் மாதர் குடிசைத்தொழில் சங்கத்தால், 1955, நவம்பரில், 20 ரூபாய் பெறுமான கூடைகள் உற்பத்தி செய்யப்பட்டன. அம்மாதத்தில், சுமார் 866 ரூபாய் மதிப்புள்ள கதர்த்துணி விற்கப்பட்டது. 1,300 ரூபாய் மதிப்புள்ள கதர் உண்டியல்கள் விற்கப்பட்டன. திருமுல்லை வாசலில், உயர்தர ஆரம்ப பாடசாலை நடத்துவதற்காகக் கட்டப்பட்ட புதிய கட்டிடத்தை, கல்வி இலாகா டைரக்டர் திறந்துவைத்ததுடன், சீர்காழியில், கிளைநூல் நிலைய மொன்றையும் திறந்து வைத்தார்.

பிரமுகர்

இங்கு ·· ·····

·········வீண் ஆரவாரத்தால்

யாருக்குப் பயன் ?

[திறந்த உள்ளத்தோடு அடக்கத்துடன் பணியாற்றினுல், கிராம நல வேலைகள் சிறந்த முறையில் முன்னேறும். முக்கியமாக, பிரமுகர்கள் விஜயத்தை கிராமநலத் திட்டங்களுக்கு மேலும் உற்சாக மூட்டக்கூடிய வகையில் பயன்படுத்திக் கொள்ளும் திறமை வட்டார நிர்வாகத் தலைவர்களுக்கு ஏற்பட வேண்டும் என்ற கருத்தை. இச் சித்திரங்கள் விளக்குகின்றன.

—ஆசிரியர்]

1. வட்டார அபிவிருத்தி அதிகாரி ஸ்ரீமான் படாடோபம் பலே பேர்வழி....வெளிநாட்டிலிருந்தும் மற்ற ராஜ்யங்களிலிருந்தும் சில பிரமுகர்கள் தமது வட்டாரத்துக்கு விஜயம் செய்யப்போகிருர்கள் என்பதை அறிந்ததும், கிராம சேவக்குகளேயும் கிராம மக்களேயும் தமது ஆபீசுக்கு அழைத்து "நீங்கள் எல்லாம் சேர்ந்து, நம்ம வட்டாரத்துக்கு வரும் பிரமுகர்களுக்கு கோலாகலமான வரவேற்பளிக்கணும்....10, 12 மாலேகள் ரெடியாகணும்.... விருந்து பலே ஜோராக இருக்கணும்....ஞாபகமிருக்கட்டும்...." என்று கட்டளேகள் பல பிறப்புவிக்கிருர்.

2 பிரமுகர்கள் வரும்போது, ஸ்ரீமான் படாடோபத்தின் கட்டளேப்படி, மக்களும் திட்ட ஊழியர்களும் வரிசையாக நின்று, அவர்களே வரவேற்று மாலே போடுகின்றனர். "இங்கு ஒன்றுமே இல்லே. நான் இங்கே வந்தபின்தான், நானே இதை பூலோக சுவர்க்கமாககியிருக்கிறேன்", என்று கயிறு திரிக்கிருர் ஸ்ரீமான் படாடோபம். அவர், கிராமவாசிகள் பிரமுகர்களோடு பேசுவதற்குக்கூட, சந்தர்ப்பமளிக்கவில்லே. மக்களின் உள்ளங்களில் உற்சாகம் காணேம்.

3. பிரமுகர்கள் அந்த வட்டாரத்தில் ரசித்ததெல்லாம் பூமாலேகள்! பலத்த விருந்து !! கோலாகல ஆரவார வரவேற்பு !!!....வட்டார அபிவிருத்தி அதிகாரி சொல்கிருர் "அடேயப்பா! இந்தத் தொரைங்களேப்போல் எத்தனேயோ பேர்களேப் பார்த்தாச்சு....நம்ம போட்ட மாலேகளே போதுமே, அவர்களே 'குல்லா போட்றதுக்கு!"......ஆனுல், காரில் செல்லும் பிரமுகர்கள், தங்களுக்குள் பேசிக் கொள்கிருர்கள், "உம்....எல்லாம் வெத்து வேட்டு !".

பிரச்னை

அங்கு… …

… …அடக்கம்

4. இந்த வட்டார அபிவிருத்தி அதிகாரியோ காந்தீயக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பவர்...... சாந்தமும், அடக்கமும் உள்ளவர்....நிர்வாகத் திறனும் இலட்சிய வேகமும் ஒருங்கே பெற்றவர்.... "பிரமுகர்கள் விஜயம் பற்றி, கிராம சேவக்குகளுக்குத் தகவல் அனுப்பினாலே போதும், 'என்னென்ன செய்யவேண்டும்' என்பதை அவர்களே நிர்ணயித்துக்கொள்ளட்டும்" என்று அவர், தமது சகா ஊழியரிடம், கூறுகிறார்.



5. வரவேற்பு வளைவுகளும் பூமாலைகளும் அங்கு அதிகம் இல்லை. ஆனால்....கிராம மக்கள் உவகையுடன் உழைப்புத் தானமளிப்பதை, பிரமுகர்கள் நேரில் கண்டறிந்து, அபிவிருத்தி வேலை விவரங்களையும், திட்ட ஊழியர்களிடமிருக்கும் பதிவுப் புத்தகங்களிலிருந்து அறிந்து கொள்கிறார்கள்......தங்கள் குறிப்புப் புத்தகங்களிலும் குறித்துக்கொள்கிறார்கள். மேலும், அவர்கள், தங்கள் நாட்டின் முன்னேற்ற விவரங்களையும் வட்டார ஊழியர்களுக்கு எடுத்துக் கூறுகிறார்கள்.

6. பிரமுகர்கள் காரில் திரும்பிச் செல்லும்போது, தங்களுக்கு அங்கு சிறந்த அநுபவம் ஏற்பட்டதாகவும், அங்கு கிடைத்த தகவல்கள், தங்களுக்கு அதிகப் பயன் அளிக்கக்கூடியவையாக இருக்கின்றனவென்றும், தங்களுக்குள் பேசிக்கொள்கிறார்கள். அவர்கள் கூறியதைக் கேட்ட அபிவிருத்தி அதிகாரி, பெருமிதத்துடன், மிடுக்காக நடக்கிறார்....சொல்லப்போனால், அவர், நவ இந்தியாவின் இளைஞராகி விட்டார்....வாலிபமும் தெம்பும் அவர் நடையிலே பிரதிபலிப்பதைக் காணலாம்.



சமூக க்ஷேமநல வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய பணி

[தற்போது, இந்தியாவில் ஏற்படுத்தப்பட்டுள்ள 259 க்ஷேமநல வளர்ச்சித் திட்டங்களில் நிறைவேறி வரும் நற்பணி பற்றிய விவரங்கள், சில ருசிகரமிகுந்த நிகழ்ச்சிகளுடன், இக்கட்டுரையில் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. முதலாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவுக்குள், இந்தியாவிலுள்ள சகல ஜில்லாக் களிலும், ஜில்லாவுக்கு ஒரு திட்டம் வீதம் நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

—ஆசிரியர்]

இந்தியாவில் மக்களின் நல்வாழ்வுக்கும் முற்போக்குக்கும் எவ்வளவோ ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. முக்கியமாக கிராமமக்களின் முன்னேற்றத்தில் இப்போது அதிக கவனமும் அக்கறையும் காட்டப்படுகிறது. அது எவ்வளவு அவசியம் என்பது சொல்லாமலே விளங்கும். ஏனென்றால், நம் கிராம மக்கள் பல துறைகளிலும் பின்னடைந்த நிலையில் இருக்கிறார்கள். காலத்துக்கு ஒவ்வாத பல கருத்துக்களும் பழக்கங்களும் கிராமங்களில் மலிந்துவிட்டன. அவைகளை சுலபத்தில் மாற்றிவிட முடியாது.

உதாரணமாக, பெண்கள் உரிமை விஷயத்தை எடுத்துக் கொள்வோம். பெண்மையின் பெருமையை ஒப்புக்கொள்ளாவிட்டாலும், அவர்களின் சம உரிமையையாவது ஏற்றுக் கொள்வது அவசியமல்லவா ? கிராமங்களில் அதுகூடக் கிடையாது. வட இந்தியாவில் சில கிராமங்களில் பெண்கள் கிராமப் பொதுமன்றத்துக்கு வரக்கூட முடியாது. சில இடங்களில் பர்தா முறை தீவிரமாயிருக்கிறது. பெண்கள் வேறு ஆண்களைப் பார்க்கக்கூடாது என்று மூடாக்குப் போட்டுக்கொள்வதுடன்கூட, ஒரு பெண் மற்றொரு பெண்ணைக்கூடப் பார்க்கக்கூடாது என்று பர்தா முறை அனுஷ்டிக்கப்படுகிறது. சமூக முன்னேற்றம் ஏற்பட வேண்டுமானால் இத்தகைய பழக்கங்களை மாற்றவேண்டும். ஆனால், மாறுதல அவ்வளவு சுலபத்தில் ஏற்படாது.

சமூக க்ஷேமநலத் திட்டங்கள் ஏற்பட்டுள்ள கிராமங்களில் சமூக ஊழியர்கள் இந்த நிலையை மாற்றுவதற்கு வெகுவாகப் பாடுபடுகிறார்கள். முதலில் அவர்களைக் கண்டவுடன் கிராமவாசிகள் முறைப்பாகவே இருந்து விடுவார்கள். அவர்களிடம் வெறுப்பு என்றுகூடச் சொல்லிவிடலாம். ஆனால் சமூக ஊழியர்கள் நன்றாகப் பயிற்சிபெற்றவர்களாகையால், பொறுமையாகவும், சாமர்த்தியமாகவும் அந்த எதிர்ப்பைச் சமாளித்து, மக்களின் நன்மைக்காகவே தாங்கள் பாடுபடுவதை நிரூபித்து அவர்களின் அன்பையும் ஒத்துழைப்பையும் பெற்றுவிடுகிறார்கள்.

இதற்குத் திருஷ்டாந்தமாகச் சில கிராமங்களில் வாஸ்தவமாக நடந்துள்ள சில நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம். டில்லிக்கு அருகில் உள்ள பத்தேபூர் அரௌலா என்னும் கிராமத்தில் சமூக க்ஷேமநலத் திட்டம் அமுலுக்கு வந்த பின் கிராமத்துப் பெண்கள் ஊர் பொதுமன்றத்துக்குவர அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அந்த கிராமத்தில் 100 " ஹரிஜன " குடும்பங்களும் 300 " உயர்ஜாதி " குடும்பங்களும் வாழ்கின்றன. இப்போது இருதரப்புச் சிறுவர்களும், சிறுமியர்களும் ஒன்றுசேர்ந்து பாலர் பாடசாலையிலும் ஆதார முற்படிப்புப் பள்ளிக்கூடத்திலும் கல்வி கற்றுவருகிறார்கள் ; ஒன்றாகச் சேர்ந்து கைநுட்பவேலைகளைப் பழகுகிறார்கள் ; கோஷ்டி சேர்ந்து பாடுகிறார்கள். இந்தக் கல்விபோதனை, கைவேலை, கானம் முதலிய ஏற்பாடுகள் எல்லாமே ஊர் பொதுமன்றத்தில் தான் நடைபெறுகின்றன. அந்தப் பொதுமன்றம்கூட " ஹரிஜன " பகுதியிலேயே இருக்கிறது.

இத்தகைய ஒரு பெருமாறுதலைச் சிறிதுகாலத்துக்குமுன் வரையில் சிந்தித்துக்கூடப் பார்க்கமுடியாது. சமூக க்ஷேம நலத் திட்டம் அமுலில் உள்ள இந்த ஊரில் சேவை செய்யும் சமூக ஊழியர் ஒரு ஜாட் ஜாதிப் பெண். அவர் கஸ்தூர்பா பயிற்சி நிலையத்தில் பயிற்சிபெற்றவர். அவரது அக்கறையான சேவையின்மூலம் கிராமவாசிகளின் மனப்பான்மையே முற்றிலும் மாறிவிட்டது. இப்போது கிராமவாசிகள் தங்கள் உழைப்பு, பணம் முதலியவைகளை ஒன்றுதிரட்டி திட்ட அதிகாரிகள் தரும் மானிய உதவியுடன் மருத்துவசாலை, பள்ளிக்கூடம், புதிய கிணறு முதலியவைகளை அமைத்துவருகிறார்கள்.

பெண்ணைப் பெண் பார்க்கக்கூடாத கிராமம்

பஞ்சாபில் உச்சனு என்பது ராஜபுத்திர ஜாதியார் அதிகமாக வாழுகிற ஒரு கிராமம். பெண்களைப் பெண்கள் பார்க்காதபடி பர்தாமுறை அனுஷ்டிக்கும் வழக்கம் அங்கே நிலவுகிறது. சமூக க்ஷேமநல ஊழியர் சிறிதுகாலம் அக்கறையுடன் சேவைசெய்தபின் இந்தப் பழக்கம்

மாறிவிட்டது. அவர்களுக்கு சுகாதார போதனை, கைநுட்ப வேலை போதனை முதலியவை நடத்தப்படுகின்றன. பக்கத்துக் கிராமங்களுக்குப் போய் அடுத்த பெண்களுடன் தங்கள் காரியங்களைக் கலந்துபேசக்கூட அவர்கள் இப்போது துணிந்துவிட்டார்கள்.

சேலம் ஜில்லாவில் சிறப்பான பணி

சேலம் ஜில்லாவில் கோழிகாலதம் என்பது ஒரு சிற்றூர் ; சேலம் நகரிலிருந்து நாற்பது மைலுக்கு அப்பால் இருக்கிறது. அந்த ஊர்வாசிகளின் சுயமுயற்சி உதவிப் பணியை எவ்வளவு பாராட்டினாலும் மிகையாகாது. இரண்டு படுக்கைகள் உள்ள பிரசவ உதவி நிலையத்தை அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள் ; அதற்காகப் புதிதாய், அழகான காறைக் கட்டிடம் ஒன்றை அவர்கள் கட்டியிருக்கிறார்கள். அதோடுகூட, அனாதைகளாகவும் ஊனமுள்ளவர்களாகவும் உள்ள சிறுவர் சிறுமியருக்காக ஒரு பள்ளிக்கூடத்தையும் அமைத்திருக்கிறார்கள். இந்தக் கட்டிடம் அந்த ஊருக்கே பெருமைதரத்தக்க ரீதியில் அமைத்திருக்கிறது ; ஏன், இத்தகைய ஒரு கட்டிடம் இருந்தால் எந்த ஊருமே பெருமைப்படலாம்.

முப்பத்திரண்டு பெண்களுக்கு அப்பள்ளிக்கூடத்தில் சாப்பாடும், இருப்பிடவசதியும் தந்து கைநுட்பவேலைகள் போதிக்கப்படுகின்றன. நெசவு, தையல், கூடைமுடைதல் முதலிய பல தொழில்கள் அவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன. இயற்கை அவர்களுக்கு உடல் ஊனத்தைத் தந்து கொடுமை செய்தாலும்கூட, மக்களின் அன்பும் உதவியும் அவர்களுக்கு வாழ்க்கையில் ஒரு புது உற்சாகத்தையும் நம்பிக்கையையும் ஊட்டியிருக்கின்றன.

அந்த கிராம மக்கள் நல்ல காரியங்களைச் செய்து அதிலேயே ஊறிப்போயிருக்கிறார்கள். இப்போது அவர்களுக்கு மேலும் நல்ல, பெரிய காரியங்களைச் செய்ய ஆர்வம் துடிக்கிறது. அந்த ஊர் வருஷாந்திர விழாவில் சுமார் 7,000 ரூபாய் வசூலாகும். அதையும் க்ஷேமநல நடவடிக்கைகளுக்கே செலவிட அவர்கள் தீர்மானித்துவிட்டிருக்கிறார்கள். அதோடுகூட, ஊதியமின்றி உழைக்கவும் அவர்கள் முன்வந்திருக்கிறார்கள். அப்பள்ளிக்கூடத்தை அவர்கள் "ஹையர் செகண்டரி" அந்தஸ்துள்ள ஆண், பெண் கூட்டுப் படிப்புப் பள்ளிக்கூடமாக்க விரும்புகிறார்கள். ஒரு நல்ல ஆஸ்பத்திரியை அமைக்கவேண்டுமென்றும் அவர்கள் ஆசைப்படுகிறார்கள். மனித முயற்சியைத் தூண்டிவிட்டு சரியானபாதையில் செலுத்திவிட்டால் நாம் சாதிக்கமுடியாதது எதுவுமில்லை என்றுகூடச் சொல்லலாம்.

ஞாயிறுதோறும் இலவச வைத்திய சேவை

மைசூர் ராஜ்யத்தில், கொடேகஹள்ளி என்னும் கிராமத்தில் க்ஷேமநலத் துறையில் ஒரு நவீன ஏற்பாடு அமுலுக்கு வந்திருக்கிறது. பங்களூரிலிருந்து 20 மைல் தூரத்தில் தான் அந்த கிராமம் இருக்கிறது. எனவே, பங்களூரில் உள்ள சில வைத்திய நிபுணர்கள்—டாக்டர்கள், சர்ஜன்கள்—அந்த கிராமத்துக்கு வந்து அந்த கிராமவாசிகளுக்கு வைத்திய ஆலோசனையும் சிகிச்சையும் அளிக்கிறார்கள்.

இதர துறைகளைச் சேர்ந்த நிபுணர்களும் இதேபோல் அந்த கிராமத்துக்கு வந்து சேவை செய்கிறார்கள். குடும்ப நிர்வாகம், உணவுப் பாதுகாப்பு, தேனீ வளர்ப்பு, ஜாம், ஊறுகாய் முதலியவை தயாரிப்பு ஆகியவைகளில் திறமையுள்ள பலர் அங்கேவந்து உற்சாகம் மிக்க அக்கிராமவாசிகளுக்குப் போதனை அளிக்கிறார்கள் ; நேரடியாகச் செய்தும் காட்டுகிறார்கள். கிராமத்துச் சிறுவர் சிறுமியர்களுக்கு அன்றாடப் பால் தூள் இலவசமாக வினியோகிக்கப்படுகிறது. அந்த ஊரைச்சேர்ந்த ஒரு பெண்தான் க்ஷேமநல ஊழியராக இருக்கிறார். கைவேலை, எழுத்தறிவிப்பு முதலிய போதனைகளையும் பொழுதுபோக்கு ஏற்பாடுகளையும் அவரே நடத்துகிறார்.

259 க்ஷேமநலத் திட்டங்கள்

மேலே விவரித்த நிகழ்ச்சிகள் சில உதாரணங்கள்தான். இந்தியாவில் ஏற்படுத்தப்பட்டுள்ள 259 க்ஷேமநல விஸ்தரிப்புத்திட்டங்களில் இத்தகைய நற்பணிநடந்து வருகிறது. கிராமவாசிகளின் சுயமுயற்சியைத் தூண்டிவிடுவதுதான் இத்திட்டங்களின்நோக்கம். முதலாவது ஐந்தாண்டுத் திட்டமுடிவுக்குள் மொத்தம் 330 க்ஷேமநல விஸ்தரிப்புத் திட்டங்களை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, இந்தியாவிலுள்ள சகல ஜில்லாக்களிலும் ஜில்லாவுக்கு ஒரு திட்டம் வீதம் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு திட்டமும் சுமார் 20 கிராமங்களுக்கு வியாபிக்கும்; 20,000 பேருக்குப் பலன்செய்யும். அதற்குச் செலவு வருஷத்துக்கு 25,000 ரூபாய். இத்திட்டத்தை வகுத்து நடத்துகிற மத்திய சமூக க்ஷேமநல போர்டு அதில் 12,500 ரூபாயையும் ஒரு ஜீப் காரையும் தந்துதவுகிறது. மீதிச்செலவை கிராமவாசிகளே திரட்டிக்கொள்கிறார்கள் : ராஜ்ய சர்க்கார்களும், ஸ்தல ஸ்தாபனங்களும் இதற்கு மானியங்களை வழங்கிவருகின்றன. சில ஜில்லா போர்டுகள், பஞ்சாயத்துகள் ஆகியவை தாராளமாக நன்கொடைகளை வழங்கியிருக்கின்றன.

இத்திட்டங்களை ஆரம்பித்த புதிதில் சமூக க்ஷேமநல நிலையங்கள் குறிப்பிட்ட ஏதாவது ஒரு நடவடிக்கையிலேயே கவனம் செலுத்தின. கிராமவாசிகளின் தேவையையும், வசதியையும், ஆசையையும் கவனித்து அந்நடவடிக்கை நிர்ணயிக்கப்பட்டது. பிறகு பலவிதமான சேவைகள் மேற்கொள்ளப்பட்டன. பிரசவகால உதவி, தாய்—சேய் நல பராமரிப்பு, பாலர் விடுதி, கைவேலை வகுப்புகள், சமூகக் கல்வி, கிராம சுகாதார அபிவிருத்தி, பொழுதுபோக்கு முதலிய ஏற்பாடுகள் கூட்டாக மேற்கொள்ளப்பட்டன.

இதில் முக்கிய அம்சம்.—இத்திட்டங்கள் கிராமத்தாரின் சுயேச்சையான ஸ்தாபன அமைப்பின் மேற்பார்வையில் நடக்கின்றன. அதற்காக திட்ட நிறைவேற்றக்கமிட்டிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்தந்த வட்டாரத்தில் சேவை செய்கிற க்ஷேமநல ஊழியர்கள் அதில் பிரதிநிதித்துவம் வகிக்கிறார்கள்.

மக்களின் சுயமுயற்சியால், கிராமவாசிகளின் க்ஷேமநலம் அபிவிருத்தியடைய இந்த திட்டங்கள் உதவுகின்றன

லட்சிய வேகமும், சேவைக் கிறுக்கும்

S. வேங்கடசாமி, M. A.

[சென்ற சில மாதங்களில், நம் சென்னை ராஜ்யத்துக்கு விஜயம் செய்த பிரமுகர்கள் பற்றிய குறிப்புகள்—இவற்றின் பிற்பகுதி, திருச்சி ரேடியோ நிலையத்திலிருந்து ஒலிபரப்பப்பட்டது]

மாமல்லபுரத்திலுள்ள சிற்பங்களைக் கண்ட அவர்கள், அதிசயித்து நின்றார்கள். கம்பீரமே உருவெடுத்து நின்ற கல்யானை, அதன் அருகே உள்ள 'பாண்டவ ரதங்கள்' எனவழங்கும் ஒற்றைக்கல் கோயில்கள் முதலியன, நம் பழங்கால பண்பாட்டின் பெருமையை மவுனக் கவிபாடி வாழ்த்திக்கொண்டிருந்தன. சுமார் பன்னிரண்டு நூற்றாண்டுகளாக அங்கே நின்றுள்ள அந்த அழியா சிருஷ்டிகளைக்கண்டு, மெய்ம் மறந்து நின்றவர்கள் அமெரிக்காவிலிருந்து வந்தவர்கள். அமெரிக்கப்பாராளுமன்றத்தின் அங்கத்தினர்கள் விக்கில்ஸ்வொர்த், பர்ட், ஜப்லாகி, ஜட், கார்டெல் (Wigglesworth, R. C. Byrd, Zaflocki, W. H. Judd, H. E. Kardel) என்பவர்களுடன், சர்ச் (M. S. Church) என்ற அம்மையாரும் இருந்தனர். சென்னையில் உள்ள அமெரிக்க ஸ்தானிகர் 'ராம்ஸே' (Ramsay) அவர்களும், அமெரிக்கச் செய்தி இலாகா தலைவர் "டஃப்டி" (Tufti) அவர்களும் நானும் அருகே இருந்தோம்.

பல்வேறு நாடுகளைச் சுற்றிப்பார்த்துக் கொண்டுவந்த அவர்கள், சென்ற மாதம் செங்கல்பட்டு ஜில்லாவைச் சார்ந்த திருக்கழுக்குன்றம் வட்டாரத்தில் நடைபெறும் கிராம அபிவிருத்தி வேலைகளைப் பார்வையிட்டார்கள். வார்தா செக்கு, கதர்த்தொழில் முதலிய கிராமக் கைத் தொழில்களையும், கிராம சேவாசங்கம் 'இளைஞர் சங்கம்' முதலியன வேலைசெய்யும் விதத்தையும் ஆராய்ந்தனர். சென்னை நகருக்குத் திரும்புவதற்கு முன்பு, 'மகாபலிபுரம்' எனவழங்கும் மாமல்லபுரத்திலுள்ள அபூர்வ சிற்ப செல்வங்களைக் கண்டு வியந்தனர். அச்சமயம் அகில இந்திய சமுதாய நல தலைமை நிர்வாகஸ்தர் ஸ்ரீ எஸ். கே. டே அவர்கள் இரண்டு வருஷங்களுக்குமுன்பு 'எல்லோரா' என்ற, சிற்பக் கூடத்தில் கூறிய சொற்கள் என் நினைவுக்கு வந்தன. அவர்களுக்கு அவற்றை நான் எடுத்துக் கூறினேன். பழங்காலச் சிறப்பை வெளியிடும் சிற்பங்களைக் குறித்தும், நிகழ்கால கிராம அபிவிருத்தியை விவரித்தும் அவர்கூறிய விளக்கம், நயம் ததும்பும் கவிதைபோல் சுவை மிகுந்து விளங்கியதால், அந்த அமெரிக்கப் பிரமுகர்கள் அதை ரசித்துப் பாராட்டினார்கள். ஸ்ரீ எஸ். கே. டே அப்படி என்னதான் சொன்னார்?

"சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன்னே, ஆயிரக் கணக்கான சிற்பிகள், மலைகள் அடர்ந்த இந்தப் பிரதேசத்தில் கூடினார்கள். யாரும் எறிட்டுப்பார்க்காமல் இருந்த எண்ணற்ற மலைகளையும் குகைகளையும் கற் குவியல்களையும், அமர சிற்பங்களாக்க எண்ணினார்கள். நூற்றுக்கணக்கான "கல் உளிகள்," ஆயிரக்கணக்கான கைகள், அல்லும் பகலும் வேலை செய்தன. தென்றல் இசையோடு, உளியோசை போட்டியிட்டது. எத்தனை வருஷம் அப்படி உழைத்தார்களோ, தெரியாது? எதற்காக அவ்வாறு உழைத்தார்கள்?.... ஆம். அவர்கள் ஒருவகைப் பைத்தியங்கள். கலைவெறி தலைக்கேறிய கிறுக்கர்கள். தங்கள் வாழ்க்கை முழுவதும் அர்ப்பணித்து, அமரசிற்பங்களை உருவாக்கிச் சென்று விட்டனர். அவர்களின் பெயர்கள், எண்ணிக்கை முதலிய விவரங்களை கால வெள்ளம் அடித்துக்கொண்டு சென்றுவிட்டது. ஆனால், அவர்கள் விட்டுச் சென்றுள்ள கலைச் செல்வம், நம் நாட்டின் புகழை உலகறியப் பறைசாற்றிவருகிறது.

"அந்த மகத்தான நிகழ்ச்சிக்குப்பின், சுமார் ஆயிரம் ஆண்டுகள் கழித்து, இப்போது சில "புதிய பைத்தியங்கள்" ஒன்று கூடியிருக்கின்றன. மலைகளைக் குடைவதைவிட, மகாகஷ்டமான வேலையில் இவர்கள் ஈடுபடத் துணிந்து விட்டனர். அதாவது, லட்சக்கணக்கான—கோடிக் கணக்கான—மக்களின் உள்ளங்களில், புதுமை உணர்ச்சியை சிருஷ்டிக்கும் பணியில் இறங்கியுள்ளனர். கல்லுக்கு, ஸ்தூலமான உருவம் உண்டு. கற்பனைக் கண்ணோட்டத்தோடு, கல் உளியின் துணையால் சிற்பிகள் சிறந்த உருவம் அமைத்து விடலாம். ஆனால், மனித உள்ளமோ!...... அதற்கு உருவம் இல்லை. கண்ணால் பார்க்கமுடியாத நுட்பப்பொருள். சூட்சும வஸ்து. அதற்குப் புத்துருவம் கொடுத்து மெருகிடுவது, அவ்வளவு சுலபமான காரியமல்ல. எவ்வளவோ திறமைவேண்டும். கல் சிற்பியைவிட பன்மடங்கு ஆற்றல்வேண்டும். இந்தச் சிந்தனைச் சிற்பிக்கு! அதுமட்டுமல்ல. பொறுமையும் தேவை. இவ்விரண்டுடன், திடசித்தம் அவசியம். அதாவது, சமுதாயத்தில் தோன்றக்கூடிய பல்வேறு தாக்குதல்களையும் தாங்கிப் பணிபுரியும் மன உறுதிவேண்டும். அசட்டை, சொல்லடி, வீண்புரளி, பொய்ப் பிரசாரம் முதலிய பல்வேறு உருவங்களில் பயங்கரத் தாக்குதல்கள், பல்வேறு திசைகளிலிருந்தும் கிளம்பும். இவற்றையெல்லாம் சமாளிக்கும் சக்தி இருந்தால்தான், 'கிராம அபிவிருத்தி' என்னும் இந்தப்புதிய பணியில் ஈடுபட முடியும். ஓரளவு பயன் காணவும் இயலும். எல்லாவற்றிக்கும் மேலாக, நிர்வாக அனுபவத்தோடு 'லட்சிய வெறி' அவர்களை ஆட்கொள்ள வேண்டும். பழங்கால கல்சிற்பிகளுக்கிருந்த கலைக் கிறுக்கிற்கும், இக் கால கிராமப் புனரமைப்பு ஊழியர்களுக்குள்ள 'சேவைக் கிறுக்கிற்கும்' அதிக வித்தியாசமில்லை. ஏனெனில், இருவரையும் ஆட்டிவைப்பது, ஒரே 'லட்சிய வெறி'தான். இதுதான் ஸ்ரீ எஸ். கே. டே கூறிய விளக்கம்.

சுமார் மூன்று வருஷங்களுக்கு முன்பு, நம் பிரதமர் நேருஜி அவர்கள், இத்தகைய சில "புதுக்கிறுக்கர்களைத்" தேடிப்பிடித்து, அவர்களை நாடெங்கும் அனுப்பினார். இந்திய சமுதாய மென்னும், மிகப்பெரிய பாறையிலிருந்து உலகம் போற்றக்கூடிய வகையில் இன்ப வாழ்வு வாழும் இந்தியப் பிரஜைகளை உருவாக்க நினைத்தார்; கிராமப் பிரதேசங்களில், மிருகங்களுக்கும் கேடான முறையில் வாழும் எண்ணற்ற பாமர மக்களுக்குக் கைலாகு கொடுத்துக்கடைத்தேற வழிதேடினார். இந்திய நாட்டின் இருபத்தொன்பது ராஜ்யங்களிலுள்ள லட்சக்கணக்கான கிராமங்களில் லட்சிய வெறியோடு பணியாற்றக்கூடிய அபிவிருத்தித் தூதுவர்களை அனுப்பியிருக்கிறார். அவர்கள் தான், சமுதாய அபிருத்தி இலாகா ஊழியர்கள்.

சென்னை ராஜ்யத்தில் 1946-ம் ஆண்டு முதல், "பிர்க்கா அபிவிருத்தி திட்டம்" என்ற பெயரால் கிராம நலப்பணி தொடங்கப்பட்டது. 1952-ம் ௵ காந்தி ஜெயந்தியின் போது, அகில இந்தியாவிலும் சமுதாய நலத்திட்டங்கள் ஆரம்பமாயின. அவற்றை "கிராம கல்யாணம்" என்று அழைப்பது மிகவும் பொருந்தும் என்று ஆசி கூறினார், அப்போதிருந்த நம் ராஜ்ய முதல் அமைச்சர் ராஜாஜி அவர்கள். அடுத்த வருஷம், தேசிய வளர்ச்சித் திட்டம் என்ற பெயரால் எல்லா ஜில்லாக்களிலும், "கிராமத்திருப்பணி" தொடங்கப்பட்டது. ஒவ்வோராண்டும், இத்திட்டங்கள் விஸ்தரிக்கப்பட்டு, நம் ராஜ்யத்தில் ஏறக்குறைய கால்பாகத்துக்கு மேல், இன்று பரவியுள்ளன. விவசாய அமைச்சர் ஸ்ரீ எம். பக்தவத்சலம் அவர்களின் நிர்வாகத்தின்கீழ், சிறந்த முறையில் பணியாற்றி வருகின்றன.

இந்திய நாடெங்கும் ஒரு பெரிய ஒற்றுமை இயக்கம் உருவாகி, வேரூன்றி வருகிறது. "பாரதநாட்டின் உயிர்நாடி, கவர்ச்சி நிறைந்த பட்டணங்களில் இல்லை; அளவற்ற அதன் கிராமங்களில்தான் ஊடுருவிப் பாய்ந்துள்ளது" என்பதை, பொதுஜனங்கள் உணர்ந்து வருகின்றனர். அதுமட்டுமல்ல. வெளிநாடுகளிலிருந்து வரும் பிரமுகர்களும், இப்போது ஒரு சில நகரங்களைப் பார்த்துவிட்டு, "இந்தியாவைப் பார்த்துவிட்டோம்" என்று திருப்தி அடைந்து திரும்புவதில்லை. இந்திய நாட்டுக் கிராம ஜனங்கள் எவ்வாறு வாழ்கிறார்கள் என்பதைக்காண அவர்கள் விரும்புகின்றனர். கிராமவாசிகள் புது வாழ்வு நிர்மாணிக்க முயலும் முயற்சியை நேரில் கண்டு மகிழ்கின்றனர். அதற்காக, பல்வேறு நாடுகளிலிருந்து, நம் கிராமங்களை நோக்கி அநேகர் விஜயம் செய்கின்றனர்.

சென்ற மாதம் நம் ராஜ்யத்துக்கு வந்த அமெரிக்கப் பாராளுமன்ற அங்கத்தினர்களைப் பற்றி முதலிலேயே குறிப்பிட்டேன். கிராமங்களில் நடைபெறும் அபிவிருத்தி வேலைகளை, முக்கியமாக, இளைஞர் சங்கங்களின் சேவைகளை அவர்கள் பாராட்டினர்.

பொருளாதாரத்துறையில் மிகுந்த முன்னேற்றம் அடைந்துள்ள மேனாட்டார் மட்டும் இங்கு வருகிறார்கள் என்பதில்லை. இம்மாதம் முதல் வாரத்தில், இந்தோனேஷியாவிலிருந்து பதினேழு அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று, சென்னை ராஜ்யத்திற்கு விஜயம் செய்ததை,

காதி, கிராமத் தொழில் போர்டு கூட்டம்

சென்னை ராஜ்ய காதி. கிராமத் தொழில் போர்டு கூட்டம் சென்னையில் 1955-ம் ௵ அக்டோபர் ௴ 31௳-யன்று கூடியபோது, பஞ்சைச் சுத்தப்படுத்தி, அம்பர் சர்க்காவில் நூல் நூற்றுக்காண்பிக்கப்பட்டது. விவசாய அமைச்சர் ஸ்ரீ எம். பக்தவத்சலம், நிதி அமைச்சர் ஸ்ரீ சி. சுப்பிரமண்யம், போர்டின் அங்கத்தினர்கள், முதலியோர் அதை நேரில் பார்த்தனர்.

அம்பர் சர்க்காவில் நூல் நூற்பதை அங்கத்தினர்கள் கவனித்தனர்

அம்பர் சர்க்காவைப்பற்றிய ஆராய்ச்சியும், அதன் அபிவிருத்தியும் இப்போது எந்த கட்டத்தை அடைந்திருக்கிறது என்பதை, கவுரவ கதர் ஆலோசகர், ஸ்ரீ சி. ஏ. அய்யாமுத்து கூட்டத்திலுள்ளவர்களுக்கு விளக்கினார். அது, இன்னும் பரீட்சார்த்தக் கட்டத்திலேயே இருப்பதாகவும் அவர் கூறினார். ராஜ்யத்திலுள்ள பல் வேறு சர்க்கார் ஸ்தாபனங்களில், அம்பர் சர்க்காவைப்பற்றி மேலும் ஆராய்ச்சி நடத்தி, 1955-ம் ௵ டிசம்பர் ௴ 31௳-க்குள் முடிவு செய்யவேண்டுமென, போர்டு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. சுமார் ஒரு மாத காலத்துக்குள் அம்பர் சர்க்காவைப்பற்றிய அறிக்கை ஒன்றை தயாரித்து அனுப்ப கோவை ஸ்ரீ பாலசுந்தரம் சம்மதித்தார்.

பலர் அறிந்திருக்கலாம். பர்மா, இலங்கை முதலிய நாடு களில் கிராம அபிவிருத்தி வேலைகளை ஆராய்ந்து பார்த்து விட்டு, இந்தியாவுக்கு வரும்போது, முதன் முதலாக, நம் ராஜ்யத்துக்கு விஜயம் செய்தனர். மதுரை ஜில்லாவைச் சேர்ந்த கல்லுப்பட்டி, திருமங்கலம், மேலூர், பெரியாறு, ஆத்தூர், காந்தி கிராமம் முதலிய இடங்களில், இம்மாதம் 4-ந்தேதி முதல் சுமார் ஒரு வாரம் தங்கியிருந்து, அங்கே நடைபெறும் வேலைவிவரங்களை ஆராய்ந்தனர். சமுதாய அபிவிருத்தி டைரக்டர் ஸ்ரீ என். இ. எஸ். ராகவாச்சாரி, I.C.S., மதுரை ஜில்லா கலெக்டர் ஸ்ரீ குஞ்சிதபாதம், கல்லுப்பட்டி காந்தி நிகேதன் தலைவர் ஸ்ரீ குருசாமி நாடார், காந்தி கிராம ஸ்தாபனத்தலைவர்கள் டாக்டர் சவுந்தரம், ஸ்ரீ G. ராமசந்திரன், முதலியோர், கிராம நல நிர்வாக விவரங்களை விளக்கிக்கூறினர். நம் கிராம மக்கள் நிர்மாணித்த ரஸ்தா, குடிநீர் வசதி, மாதர் நலவேலைகள், சுகாதாரவசதி, கிராமிய நடனம், கதர் அபிவிருத்தி, காந்தியப் பிரார்த்தனை முதலியவற்றைக்கண்டு இந்தோ னேஷியப்பிரமுகர்கள் மிகவும் பாராட்டினர். மதுரைக் கோபுரமும், திருமலைநாயக்கன் மஹாலும் அவர்களை அதிசயக்கடலில் ஆழ்த்தின. இந்தோனேஷிய கிராம அபி விருத்திக் குழுவின் தலைவர், "புடியானோ" என்பவர். இவர் ஜாவாவில் கவர்னராய் இருந்தவர். இவர் ஆயிரக்கணக்கான மைல்களை காலால் நடந்து கிராம அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டவர். மற்ற அங்கத்தினர் அனைவரும் இந்தோ னேஷிய அரசாங்கத்தின் பல்வேறு இலாகாக்களின் முக்கிய உத்தியோகஸ்தர்கள். அகில உலக ஸ்தாபனத்தின் சார்பாக, "டாக்டர் விஜின்ஸ்கி" என்ற நிபுணர் இவர் களுடன் வந்திருந்தார். இவர் "போலந்து" தேசத்தைத் தாய்நாடாகக் கொண்டவர். பல்வேறு நாடுகளில் கிராம நலத்தொண்டு செய்து பழுத்த அனுபவம் பெற்றவர்.

இவ்வருஷம் ஜூலை மாதம், அகில உலக ஸ்தாபனத்தின் சார்பாக, நம் நாட்டின் சமுதாய நல தலைமை நிர்வாகஸ் தர், ஸ்ரீ எஸ். கே. டே அவர்கள், இந்தோனேஷியாவுக்குச் சென்றது எல்லோருக்கும் நினைவிலிருக்கலாம். அங்கே அவர் மூன்றுமாத காலம் சுற்றுப்பிரயாணம் செய்து, கிராம அபிவிருத்தித்திட்டமொன்றை உருவாக்கிக் கொடுத்து வந் தார். அதை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றுள்ள அந்நாட்டின் முக்கிய அதிகாரிகளே இப்போது நம் நாட் டிற்கு விஜயம் செய்திருப்பவர்கள். இவர்களுடன் இந்தியா முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்து, இந்தோனேஷியா வுக்கும் சென்று, கிராம நலத்திட்டத்தை நிறைவேற்றி வைக்கும் வழிமுறைகளை வகுத்துக்கொடுக்கும் நிபுண ராக, ஸ்ரீ எல். என். பொங்கீர்வார் (Bongirwar), I.A.S. என்பவர், அகில உலக ஸ்தாபனத்தின் சார்பாக, நியமிக்கப் பட்டுள்ளார். இவர் மத்தியப் பிரதேச ராஜ்யத்தில் அபிவிருத்தி டெபுடி கமிஷனராக சிறந்த சேவை செய் தவர். இவரும், நானும், மதுரையில் இந்தோனேஷியக் கோஷ்டியைச் சந்தித்து, அவர்களுடன் சுற்றுப்பிரயாணம் செய்தோம். "பிலிப்பைன்" தீவுகளில் கிராமநல வேலை செய்த "காட்வித்" (Cadwick) என்ற நிபுணர், காந்தி கிராமத்தில், இந்தக் குழுவினருடன் கலந்துகொண்டார். இவர்கள் பெங்களூர், ஹைதராபாத் காந்திநிகேதன் புதுடெல்லி முதலிய இடங்களுக்குச் சென்று, பாக்கிஸ் தான் தேசத்திலும் சுற்றுப் பிரயாணம் செய்து, சுமார் இரண்டு மாதங்களில் இந்தோனேஷியா திரும்புவார்கள்.

இந்தோனேஷியாகுறித்து ஒரு சில வார்த்தைகள். ஜாவா, சுமத்ரா, போர்னியோ முதலிய தூரக்கிழக்குத் தீவுகளைக் கொண்டதே இந்தோனேஷியா தேசம். 1945-ம் ஆண்டு ஆகஸ்டுமீ 17-ந்தேதி, டச்சுக்காரர்களின் ஆதிக்கத்தி லிருந்து அது விடுதலை பெற்றது. சுகர்னோ, டாக்டர் ஹட்டா ஆகியோர் அதன் ஜனாதிபதியும், உபஜனாதிபதியும், ஆவர். அதில் சுமார் 8 கோடி ஜனங்களும், ஏறக்குறைய 3,000 சிறு தீவுகளும் உண்டு. பெரும்பாலும் விவசாய நாடு. சர்க்கரை உற்பத்திக்குப் பெயர்போனது. பழங் காலத்தில்நம்நாட்டுக்கும் இதற்கும், நெருங்கிய கலாச்சாரத் தொடர்புண்டு. "போராபுதூர்" (Borbudur) என்னுமிடத்தி லுள்ள சிற்பங்கள், பாரத நாட்டுக்கலையின் சின்னங்கள் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். நம் நாட்டு இராமா யண, மகாபாரதக் கதைகள், அங்கே இப்போதும், "தோல் பொம்மலாட்டங்களாக" மக்களிடையே செல்வாக்கு பெற் றுள்ளன. நம்மைப்போலவே அந்நாட்டு மக்களும் கிராம நல வேலைகளைத் துரிதமாக நிறைவேற்றி முன்னேற முயன்று வருகின்றனர். நம் சென்னை ராஜ்யத்தில், இந்தோனேஷிய அதிகாரிகளின் உள்ளத்தைக் கவர்ந்தது, கிராமக் கைத்தொழில்களில் நாம் காட்டும் சிரத்தைதான். இத்துறையில் ஏற்பட்டுள்ள சாதனைகள் மிகவும் பாராட்டப் பட்டன.

இவ்வாறாக, மேற்கே அமெரிக்கா முதல், கிழக்கே இந்தோனேஷியா வரையில், பலநாட்டு அறிஞர்கள் நம் பழங்காலப் பெருமையும், நிகழ்கால அபிவிருத்தியையும் பாராட்டுகின்றனர். அயல் நாட்டாருடன் சம உரிமையோடு, கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டு பரஸ்பரம் முன்னேற நாம் முயன்று வருகிறோம். இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம், ஒன்றே. அதில்தான், நம்நாட்டின் எதிர்கால மும், அடங்கியிருக்கிறது. அதாவது, நம் பிரச்னைகளை, சுய முயற்சியால், நாமே தீர்த்துக்கொள்ள, தீவிரமாக உழைக்க வேண்டும் என்ற உறுதி, நம் மக்களிடம் வேரூன்றி வருகிறது. வெளி நாட்டார், இதை நேரில் கண்டு நமக்கு வாழ்த்து கூறுகின்றனர்.

எத்தகைய பிரச்னைகளையும் தீர்க்கும் துணிவும், பொறு மையும், தீர்க்க தரிசனமும், கிராம அபிவிருத்தி ஊழியர் கள் அனைவருக்கும் உண்டு. பிரதமர் நேருஜி, முதலமைச் சர் காமராஜ் ஆகியோருக்குள்ள லட்சிய வேகமும், பொது நலவேட்கையும், இவர்களை எப்போதும் முன்னோக்கி அழைத்துச் செல்லும். உடனடியாக இப்போது, புயலா லும் மழையாலும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்க ளுக்கு நிவாரணம் அளிக்கும் பணியில், இவர்கள் தீவிர மாக ஈடுபட்டுள்ளனர். நாட்டின் நலிவைப்போக்கி, கிராம மக்களுக்கு நல்வாழ்வு நிலைக்கச் செய்யும் வரையில், கிராம அபிவிருத்தி ஊழியர்களுக்கு ஓய்வே இருக்கமுடியாது.

Printed by the Superintendent, Government Press, Madras, Edited by the Public Relations Officer and published by the Director of Community Development, Government of Madras.